உ

தேவிசகாயம்.

# ANUBOGAVYTHIA

## BRAMAH RAHASIAM.

# அநுபோகவயித்திய

## பிரம்மரகசியம்.

ஐந்தாம்பாகம்.

இஃது,

ஜெகந்நாதஸ்தலம்

## கோஷாயிசுவாமிகள்

அநுக்கிரகத்தின்படி

பூவிருந்தவல்லி,

சுந்தரமுதலியார் குமாரர்

பூ. சு. குப்புசாமி முதலியாரது

ஸ்ரீசுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை-புரசை.

1914.

Registered Copy right.

உ

கடவுள் துணை.

# முகவுரை.

இந்த அநுபோகவயித்திய பிரம்மரகசியமென்னும் நூலானது வெளிவந்தகாரணமும், இதனுள் அடங்கிய விஷயங்களுக்கும், இங்ஙனம் முகவுரையெனப் பெயர்வகித்து சுருக்கமாக எழுதி முடிக்கப்பட்டிருக்கிறது.

ஜெகந்நாதஸ்தலம் ஸ்ரீமான் கோஷாயி சுவாமிகளால் நெடுவருடங்களாக காசிமுதலான திவ்வியக்ஷேத்திர யாத்திரைவாசிகளுக்கு தருமத்திற்கு உபயோகித்துவந்த சத்தியமான உத்தமமுறைகள் யாவையும், இன்னும் சிலகைமுறைகளையும்சேர்த்து இந்நூலுக்கு போதுமானபொருளைச் சிலவிட்டு அச்சிடுவித்தவராகிய ம-ா-ா-ஸ்ரீ, பூ. சு. குப்புசாமிமுதலியார், அநுமதியின்றி இந்நூலை பிறர் எவ்வதத்தும் அச்சிடாதபடிக்கு (கெவர்மென்ட் சட்டப்படி) ரிஜிஸ்டர் காப்பிரயிட் செய்திருக்கிறது.

{ அநுபோகவயித்திய பிரம்மரகசியம் 8 - காண்டங்களும் தயாராயிருக்கிறது. }

| | | | |
|---|---|---|---|
| காண்டம் 1-க்கு விலை அணு | 0 | 8 | 0 |
| ஷை 4-காண்டமும் ஒரேகட்டடம் | 1 | 8 | 0 |
| ஷை 8-காண்டமும் ஒரேகட்டடம் | 3 | 0 | 0 |

**V.P.** போஸ்ட்சார்ஜி பிரத்தியேகம்.

10 - புத்தகம் மொத்தமாய்வாங்கினால் 1 - புத்தகம் கமிஷன் கொடுக்கப்படும்.

ரிப்ளேகார்ட்யெழுதினால் பதில்சங்கதிகிடைக்கும்.

பூ. சு. குப்புசாமிமுதலியார்.
ஸ்ரீசுந்தரவிலாசம்பிரஸ், பிரம்பூர் பாறக்ஸ்போஸ்ட் மதரூஸ்.

உ

பஹவந்தர் துணை.

# பஞ்சபூத ரகசியமென்னும்

# பஞ்சபக்ஷி ரத்தினம்.

கல்வியில்மிகுந்த கனதனவான்களே:—

நம்முன்னோர்களாகிய மகன்னியர்களும் 18-சித்தர்களும் ஜீவர்கள்மேல் கருணைவைத்து உலோகோபகாரமாய் எழுதிவைத்த அளவிறந்தசாஸ்திரங்களில் அதிக அருமையானசாஸ்திரம் பக்ஷிசாஸ்திரமேயாம். இச்சாஸ்திரமானது அதிக சிலாக்கியப்பட்டதென்பதை "பல்லிசொல்பவனோடு பதில் பேசாதே, பஞ்சபக்ஷிக்காரனைப் பகைக்காதே, சரங்கற்றவனோடு சகவாசம்பண்ணாதே" என்னும் பழையமொழியேவிளக்குகின்றது தற்காலம் அகஸ்தியர், போகர், ரோமரிஷி முதலியோர் எழுதியதாக பஞ்சபக்ஷிசாஸ்திரங்கள் வெளிவந்திருந்தாலும் ஷை சாஸ்திரமானது இதுவரையும் முற்றுமே வெளிவந்ததில்லையென்பது அனேகருக்குத் தெரியும் அதுவுமல்லாமல் தற்காலம் வெளிவந்துலாவும்நூல்களில் ஒன்றிலாவது பக்ஷிதொழில் நடை என்பது உண்மையாயெழுதியிருக்கவில்லை இச்சாஸ்திரமானது வைத்தியர் ஜோசியர்மாந்திரீகர் முதலியோருக்கும் மற்றுமுள்ள சகல குடும்பத்தாருக்கும் அவசியந் தேவையானது. இந்நூல்ஆசிரியர் இல்லாமலேயே பாலர்முதல் அனைவரும் அதிகஎளிதில் தெரிந்துக்கொள்ளும்படியாகவும், வரிசைக்கிறமமாகவும், அனேக அதிகாரங்களாகவும், மூலமும் உரையுமாக எளிய செந்தமிழில் எழுதியுள்ளது. நினைக்கும்காரியங்களை முடிப்பதற்கும் பிணிகளை இலேசாகநீக்கவும் வாழ்நாள்விவரத்தைத் தெரிந்துக்கொள்ளவும், பகைவரைவெல்லவும், பிறர்க்குநடந்தவிஷயங்களையும், நடக்கப்போகும்விஷயங்களையும் திரிகாலஞானம்போல் சொல்லவும் மனிதன் முக்கியமாய்அடையவேண்டிய ஞானமார்க்கத்தை இலேசில்பெறவும் இந்நூலே சிலாக்கியப்பட்டது. ஆதலால் உண்மையாகவும் தொழில் நடைகள் சரியாகவும்அமைந்துள்ள பக்ஷிசாஸ்திரம் இதுஒன்றுதான். இது கிளேஸ்கடிதத்தில்அச்சிட்டு இங்கிலீஷ்பயிண்டுசெய்துள்ளது.

இதன்விலை அணா 12

தேவிசகாயம்.

# அவுஷதங்களின் அகராதி.


| அவுஷதங்கள். | பக்கம். | அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|---|---|
| நாடிகள்நடக்கும்விபரம் | 9 | நாடித்தொந்திப்பு | 16 |
| நாடியைப்பரிக்ஷிக்குமிடம் | 0 | நாடியின்குறிப்பு | 18 |
| நாடிகள்பரிக்ஷிக்கும்விவரம் | 10 | மாணக்குறிகள் | 19 |
| நாடிபார்க்குமாதவகை | 0 | **குழந்தைகட்குவரும்நோயின் விவரமும் அவிழ்தமும்.** | |
| நாடிபார்க்கும்விவரம் | 0 | செங்கிரந்தியின்குணம் | 22 |
| புருஷருக்குநாடிநடக்கும்வி | 0 | கருங்கிரந்திக்குணம் | 0 |
| பெண்களுக்குநாடிநடக்குவி | 0 | கிரந்தி-12,சூலே-18-க்கும் | 23 |
| பஞ்சபூதநாடிகளிருக்குமிடத்தின்விவரம் | 11 | அரைவீட்டிற் குழந்தைக்குகழுத்துவீங்கிமுழங்கால்முழங்கைகுளிர்ந்துவயிற்றில் வலிகண்ட | 0 |
| திரேகத்தில்வாதபித்தசிலேஷ்மம் இருக்கவேண்டிய நிதானம் | 0 | பிள்ளை வயிறுநொந்தழுதால் மலங்கட்டினல் | 0 |
| ஒரு நிமிஷத்திற்கு நாடிநடக்கும் பிரமாணம் | 0 | குழந்தைக்குச் சிறுநீர்கட்டினல் | 24 |
| நாடிபேதாபேதம் | 0 | பிள்ளைக்குசுரம்விழுந்தால் | 0 |
| மனிதர்வயதின்விவரம் | 12 | பிள்ளைசிறியழுதால விக்கலெடுத்தால் வயிறுபொருமினல் | 0 |
| தேகக்கட்டளைவிவரம் | 0 | பிள்ளை வயிறுவீங்கினல் குடித்தபாலெதிரொடுத்தால் அடிக்கடி கொட்டாவியிட்டால் | 0 |
| வாததேகக்குறிகள் | 0 | பால்சுரக்க | 0 |
| பித்ததேகக்குறிகள் | 13 | **தோஷவகுப்பு.** | |
| சிலேத்துமதேகக்குறிகள் | 0 | பக்ஷிதோஷகுணம் | 25 |
| வாதபித்தசிலேத்துமகுணம் | 0 | பறவைத்தோஷகுணம் | 0 |
| வாதபித்தசிலேத்துமத்தினி | 0 | எட்சிதோஷகுணம் | 0 |
| வாதபித்தசிலேத்துமகாலம் | 0 | வீங்குபுள்ளின்தோஷகுண | 0 |
| ரோகஸ்தர்களின் தேகமுதலான குறிகள் | 14 | தூங்குபுள்ளின்தோஷகு | 26 |
| வாதக்கூறு | 0 | | |
| பித்தக்கூறு | 0 | | |
| சிலேத்துமக்கூறு | 15 | | |
| குருநாடியிருக்குமிடம் | 0 | | |
| குருநாடியின்குணம் | 0 | | |
| நாடிகள் கீழுமேலுமீறியோடும்விதம் | 16 | | |

| அவுஷதங்கள். | பக்கம். | அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|---|---|
| விளக்கொளிக்கண் புள்ளின்தோஷகுணம் | 26 | மாந்தம் பொருமல் வலி செரியாமாந்தத்திற்கு | 40 |
| வெங்கண்புள்ளின்தோஷகு | 0 | மாந்தங்களுக்கு பொதுப்பிரையோகம் | 0 |
| கருடக்கண்புள்ளின்தோ | 27 | | |
| செங்கண்புள்ளின்தோஷகு | 0 | **கணவகுப்பு.** | |
| அந்திப்புள்ளின்தோஷகுண | 0 | வாதகணத்தின்குணம் | 42 |
| நீர்ப்புள்ளின்தோஷகுணம் | 0 | பித்தகணத்தின்குணம் | 0 |
| புள்ளின்தோஷகுணம் | 28 | சேஷ்மகணத்தின்குணம் | 0 |
| முட்டுதோஷகுணம் | 0 | இவைகட்குநிவர்த்தி | 0 |
| குழித்தோஷகுணம் | 0 | கணமாந்தகுணம் | 0 |
| கெர்ப்பமழிந்ததோஷகு | 29 | ஊதுமாந்தகணத்தின்குண | 43 |
| தேரைத்தோஷகுணம் | 0 | நீர்கணமாந்தகுணம் | 44 |
| மாந்தவகுப்பு | 0 | சிங்கிமாந்தகணத்தின்குணம்தேவிஷ்மாந்தகண | 0 |
| மாந்தகுணம் | 30 | | |
| வாதமாந்தகுணம் | 0 | நீர்க்கணத்தின்குணம் | 0 |
| பித்தமாந்தகுணம் | 0 | சுழிகணத்தின்குணம் | 45 |
| சிலேட்டுமமாந்தகுணம் | 0 | சூலிக்கணத்தின்குணம் | 0 |
| இவைகட்குநிவர்த்தி | 0 | மகாகணத்தின்குணம் | 46 |
| ஊதுமாந்தகுணம் | 32 | பிரளிக்கணத்தின்குணம் | 0 |
| நீர்மாந்தகுணம் | 0 | பிறக்கணத்தின்குணம் | 47 |
| விஷமாந்தகுணம் | 33 | வரட்கணத்தின்குணம் | 0 |
| போர்மாந்தகுணம் | 0 | கொதிப்புக்கணத்தின்கு | 48 |
| பாலமாந்தகுணம் | 34 | அந்தகணத்தின்குணம் | 0 |
| செரியாமாந்தகுணம் | 0 | மந்தாரகணத்தின்குணம் | 0 |
| கட்டுமாந்தகுணம் | 35 | எரிகணத்தின்குணம் | 0 |
| தலைமாந்தகுணம் | 36 | ஆமகணத்தின்குணம் இதுவே சீதகணம் | 49 |
| துலைமாந்தகுணம் | 0 | | |
| சுழிமாந்தகுணம் | 0 | நீராமகணத்தின்குணம் | 0 |
| வீக்கமாந்தகுணம் | 37 | பேராமகணத்தின்குணம் | 50 |
| முக்குமாந்தகுணம் | 0 | மூக்குக்கணத்தின்குணம் | 0 |
| வாள்மாந்தகுணம் | 0 | மூலகணத்தின்குணம் | 51 |
| உளைமாந்தகுணம் | 38 | ஜனங்களுக்குப்பொதுப்பிரையோகம் | 0 |
| அட்சரமாந்தகுணம் | 0 | | |
| தோஷமாந்தத்திற்கு | 39 | கணத்தினல்இரத்தம்விழு | 52 |
| மாந்ததோஷம் வலிப்பு மலக்கட்டுக்கு | 0 | கணச்சூடுதணிய | 53 |
| | | கணம்இருமல்வாய்நாற்றத் | 0 |
| மாந்தம்பாலகிரியைக்கு | 0 | மாந்தகணம் பொருமல் இருமல் கபத்திற்கு | 0 |
| மாந்தம்வயிற்றுப்பொரும | 40 | | |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| பொருமல்மாந்தகணத்திற் | 53 |
| கணமாந்த வயிற்றுளவு பொருமலுக்குப் பால சஞ்சீவிமாத்திரை | 0 |
| தெற்கத்துக் கணமாந்தம் போர்மாந்தத்திற்கு | 54 |
| வீக்கணத்துக்கு | 0 |
| கணக்கடுப்புக்கு | 0 |
| இரத்தக்கடுப்பு அடிப் புறப்பட்டதற்கு | 0 |
| இரத்த சீதக்கடுப்பு பல விதகழிச்சல் சுரத்திற் | 0 |
| இரத்தம் சீதக்கடுப்புநீர்ச்சுருக்கிற்கு | 55 |
| கிராணிக்கடுப்புக்கு | 0 |
| ஆமக்கடுப்புக்கு | 0 |
| இரத்தக்கடுப்புக்கு | 0 |
| சீமூலத்திற்கு | 56 |
| இரத்தமூல வரட்கணம் ஊதுமாந்தத்திற்கு | 0 |
| அடித்தள்ளினதற்கு | 0 |
| முக்கல்வயிற்றுகடுப்பின்கு | 0 |
| மூல ரத்தகணம் விஷகணம் மாந்தத்திற்கெண் | 57 |
| இரத்தகணத்தின்குணம் | 0 |
| சுழிகணம் வரட்கணம் ஊதுகணம் மாந்தகணம் இரத்தகண முதலான தற்கெண்ணெய் | 58 |
| சகலகணம் பிரளிக்குச் சஞ்சீவிபெண்ணெய் | 0 |
| சுழிகணத்திற்குக்கஷாயம் | 59 |
| **கரப்பன் வகுப்பு.** | |
| விஷவாதகரப்பன்குணம் | 0 |
| வாதகரப்பன்குணம் | 0 |
| பித்தகரப்பன்குணம் | 60 |
| வாதபித்த சிலேற்பனகரப்பன்-18-க்கும் எண்ணெ | 0 |

| அவுஷதங்கள். | பக்கம். |
|---|---|
| செங்கரப்பன்குணம் | 61 |
| கருங்கரப்பன்குணம் | 0 |
| சூலைக்கரப்பன்குணம் | 0 |
| ஊதுகரப்பன்குணம் | 62 |
| பாலகரப்பன்குணம் | 0 |
| அரிகரப்பன்குணம் | 63 |
| வரகூஷிகரப்பன்குணம் | 0 |
| சொரிசிரங்கிற்கு | 64 |
| பேய்ச்சொரிக்கு | 0 |
| சிரங்கிற்கு | 65 |
| சகலகரப்பன்சிரங்குக்கு மேற்பூசும்எண்ணெய் | 0 |
| சிரங்குபுண்ணுக்குகளிம்பு | 66 |
| வாதகரப்பன்வீக்கத்திற்கு | 0 |
| மாந்தம்செவ்வாப்புகரப்பா | 0 |
| சிறுசிரங்குசொரிசிரங்கிற்கு | 0 |
| காற்கடுவன்மண்டைக்கடுவ | 67 |
| சிரங்கு சொரிகரப்பன் ஆறுப்புண்ணுக்கு | 0 |
| கரப்பனுக்கெண்ணெய் | 0 |
| கபாலகரப்பனுக்குத்தயிலம் | 0 |
| கரப்பானுக்குமேற்பூசும்எ | 68 |
| கொள்ளிகரப்பானுக்கெண் | 0 |
| **சுரவகுப்பு.** | |
| கணக்காச்சலின்குணம் | 69 |
| உடம்புநோய்காச்சலின்கு | 70 |
| உட்காச்சலின்குணம் | 0 |
| ஆமசுரத்தின்குணம் | 71 |
| இரத்தசுரத்தின்குணம் | 0 |
| அன்பனுதிசுரத்தின்குணம் | 72 |
| மாங்கிஷசுரத்தின்குணம் | 0 |
| அஸ்தசுரத்தின்குணம் | 73 |
| வாதபித்தசிலேற்பனசுரத்து | 0 |
| மாந்தசுரத்திற்கு | 0 |
| அட்சரமாந்தசுரத்திற்கு | 74 |
| மாந்தகணசுரம் வயிற்றுபொருமல்வாந்திக்கு | 75 |
| மாந்தசுரதோஷத்திற்கு | 0 |

| அவுஷதங்கள். | பக்கம். |
| --- | --- |
| கணசுரம்தோஷம் வயிற்றுக்கழிச்சல்பித்தம் | 75 |
| இரத்தகணமூலத்திற்கு | 0 |
| கணக்காச்சலுக்கு | 0 |
| குளிர்சுரத்திற்கு | 76 |
| கணக்காச்சல்மாறலுக்கு | 0 |
| கணக்காச்சற்பயக்கத்திற்கு | 0 |
| கணபாண்டுகணசுரம் அஸ்திவெட்டை இருமல் இரத்தம்இவைகட்கு | 0 |
| கழிச்சல்தோஷத்திற்கு | 0 |
| காச்சல்அதிசாரம்சுவாசகா | 0 |
| ஆமசுரமாறலுக்கு | 77 |
| ஆமக்குளிர்சுரங்கடுப்பிற்கு | 0 |
| விக்கல்வாந்திசுர இருமலுக் | 0 |
| சீதசுரத்திற்கு | 0 |
| சுரம்இருமல்சீதசுரத்திற்கு | 0 |
| சீதம்விஷசுரத்திற்கு | 0 |
| சுரத்திற்குஏலாதிமாத்திரை | 78 |
| சுரமவரட்கணம் ரத்தகணம்குழித்தோஷ சவலை | 0 |
| பழஞ்சுரத்திற்கு | 0 |
| பழஞ்சுரம் விடாச்சுரம் விஷதோஷ சன்னிக்கு | 0 |
| அதிசாரம் காச்சல்சுவாசம்வாந்திசுரதாபம்விக்கல்தாகத்திற்கு | 79 |
| பித்தசுரம் தாபசுரம்பழவெதுப்புக்குமேற்பூசு | 0 |
| கணக்காச்சலுக்குகஷாயம் | 0 |
| சகலசுரங்களுக்குப் பச்சைகர்ப்பூரமாத்திரை | 0 |
| குளிர்சுரத்திற்கு | 80 |
| சகலசுரத்திற்குமாத்திரை | 0 |
| சுரத்திற்காகாபதார்த்தங்க | 0 |
| **சன்னி வகுப்பு.** | |
| மாந்தசன்னிக்குணம் | 0 |
| ஆமசன்னியின்குணம் | 81 |
| கோராமசன்னிக்குணம் | 0 |
| தாந்திரிசன்னிக்குணம் | 82 |
| தீராதசன்னிக்குணம் | 0 |
| சகலமாந்தசன்னிக்குணம் | 0 |
| தோஷசன்னி மாந்தசன்னிபித்தசுரம்வாந்திக்கு | 0 |
| மாந்தகணசன்னிக்கு | 83 |
| மாந்தகணசன்னிக்குபலசன் | 0 |
| சன்னிசுரம்கபத்திற்கு | 0 |
| விஷசன்னி குளிர்சன்னி சுரம்விக்கலுக்கு | 0 |
| விஷதோஷசன்னிமாந்தம் பித்தசுரம்வாந்திக்கு | 84 |
| **வலிப்பின்வகுப்பு.** | |
| மாந்தவகுப்பின்குணம் | 0 |
| மாந்தவலிப்புகாக்கைவலிப் | 0 |
| காக்கைவலிப்புக்கு | 0 |
| சளிஇருமல் கக்கல் விஷசுரம் விக்கழி வலிப்பு ஜன்னிதோஷம்வயிற்றுப்பொருமலுக்கு | 85 |
| பிறஇசிவுக்கு | 0 |
| **கழிச்சல்வகுப்பு.** | |
| கழிச்சல்தோஷத்திற்கு | 0 |
| மாந்தக்கழிச்சல்மாந்தசன் | 0 |
| கழிச்சலுக்கு | 0 |
| பால்போற்கழிவதற்கு | 86 |
| கழிச்சல்சுரத்திற்கு | 0 |
| கழிகணம்சுரம்வரட்சிக்கு | 0 |
| கழிச்சல்இருமலுக்கு | 87 |
| கழிச்சல்வாந்திக்கு | 0 |
| கழிச்சல்இருமல்வாந்திக்கு | 0 |
| மாந்தக்கழிச்சலின்குணம் | 0 |
| கணக்கழிச்சலின்குணம் | 0 |
| ஆமக்கழிச்சலின்குணம் | 88 |
| சலக்கழிச்சலுக்கு | 0 |
| வெப்புக்கழிச்சலுக்கு | 0 |

உ

தேவிசகாயம்.

அனுபோகவயித்திய
பிரம்மரகசியம்.

# ஜந்தாவதுகாண்டம்.

## விநாயகர் துதி.

பூமாது தனைமணர்ந்த புயல்வண்ணப் பெருமாளும்
புலவர் போற்று
நாமாது தனைமணந்த நான்முகனும் போர்மாது
நயக்கு மெண்டோட்
கோமானுந் தானேயென் றுணர்த்துதற்கே பிரணவருஞ்
சரமாய்த் தோன்றி
மாமாவின் முகத்தானை யுயிர்த்தானை நினைத்திறைஞ்சி
வழுத்து வாமே.

## நாடிகள் நடக்கும் விவரம்.

இருதயம் விரியவும் சுருங்கவும் நாடிநரம்புகள் விரியவும்சுருங்கவும் செய்யும், இருதயநடைக்கு நாடிநடை ஒத்திருப்பதால் தேகத்தி லிருக்கின்ற ரோகங்களை இருதயம் அறிந்து நாடிகளின்வழியாய்த் தெரிவிக்கின்றது.

## நாடியைப் பரிக்ஷிக்கும் இடங்கள்.

1-வது, கை. 2-வது, கண்டம். 3-வது, கன்னிச்சுழி, 4-வது, காலின் பெருவிரல். 5-வது, கணுக்கால். ஆனல் கையைப் பரிக்ஷிப்பதுதான் உத்தமம்.

## நாடிகள் பரிக்ஷிக்கும் விவரம்.

கையின் பெருவிரல் பக்கமாக ஓடும் நாடியை மணிக்கட்டுக்கு ஓர் அங்குலம் மேலாக மூன்றுவிரல்களால் அழுத்தியும், தளர்த்தியும், சமமாகவும், மாறிமாறி பரிக்ஷிக்க நாடி நடை அறியலாம். புருஷர்களுக்கு வலதுகையும், ஸ்திரீகளுக்கு இடதுகையும், பரிக்ஷிக்கவேண்டியது, இரண்டு கைகளும் பரிக்ஷிப்பது முண்டு.

நோயாளியைப் படுக்கவைத்தாவது உட்காரவைத்தாவது நாடியைப் பரிக்ஷிக்கலாம்.

---

## நாடிபார்க்கும் மாதவகை.

சித்திரை வைகாசிக்கு உதையத்திலும், ஆனி ஆடி ஐப்பசி கார்த்திகைக்கு மத்தியானத்திலும், மார்கழி தை மாசிக்கு அஸ்தமானத்திலும், பங்குனி ஆவணி புரட்டாசிக்கு இராத்திரியிலும் பார்க்க நாடி தெளிவாய் தோற்றும்.

---

## நாடிபார்க்கும் விவரம்.

நாடியைப் பரிக்ஷிப்பதில் முதல்விரற்கீழ் வாதநாடி, நடுவிரற்கீழ் பித்தநாடி, கடைவிரற்கீழ் சிலேத்துமநாடி யென்றறியவும்.

---

## புருஷருக்கு நாடி நடக்கும் விதம்.

வாதநாடி-குயில்போலும், அன்னம்போலும், கோழிபோலும், மயில்போலும் நடக்கும். பித்தநாடி-ஆமைபோலும், அட்டைபோலும் நடக்கும். சிலேத்மநாடி-பாம்பு போலும், தவளைபோலும் நடக்கும்.

---

## பெண்களுக்கு நாடி நடக்கும் விதம்.

வாதநாடி - சர்ப்பம்போல் நடக்கும்.
பித்தநாடி - தவளைபோல் நடக்கும்.
சிலேத்மநாடி - அன்னம்போல் நடக்கும்.

## பஞ்சபூத நாடிகளிருக்குமிடத்தின் விபரம்.

பெரிவிரல் - பூதநாடி.
ஆள்தூண்டிவிரல் - வாதநாடி.
நடுவிரல் - பித்தநாடி.
பவுத்திரவிரல் - சிலேத்மநாடி.
சிறுவிரல் - பூதநாடி.
குருநாடி ஐந்துட் சேர்ந்துநிற்கும்.

## திரேகத்தில் வாதபித்த சிலேஷ்மம் இருக்கவேண்டிய நிதானம்.

திரேகத்தில் சிலேஷ்மம் ஒருபங்கும், பித்தம் இரண்டு பங்கும், வாதம் நாலுபங்கும் இருக்குமாகில் வியாதி யில்லையென்றறியவும்.

## ஒரு நிமிஷத்திற்கு நாடி நடக்கும் பிரமாணம்.

| | | | |
|---|---|---|---|
| குழந்தை பிறந்தவுடன் | 140 | க்ஷீணபருவத்தில் | 70 |
| பாலியத்தில் | 120-130 | விருத்தாப்பியத்தில் | 75-80 |
| குழந்தையில் | 100 | உட்கார்ந்திருக்கும்போது | 40 |
| யெளவனபருவத்தில் | 90 | நிற்கும்போது | 70 |
| சம்பூரணபருவபுருஷனி | 70-75 | படுத்திருக்கும்போது | 67 |
| சம்பூரணபருவஸ்ரீகளில் | 75-80 | (இவ்விதமாய் நாடிநடக்கும்.) | |

## நாடி பேதாபேதம்.

நடந்து தேகம் அருண்டிருந்தாலுஞ் சாப்பாடு சுடுபதார்த்தங்கள் சாராயமுதலிய லாகிரிவஸ்துக்கள் புகையிலை வெயில் சுரம் நித்திரைபங்கம் மனச்சஞ்சலம் அதிக பலயீனம் இரத்தம் வடிதல் முதவானதுகளினாலும் நாடிநடை தீவரமாயும் படபடென்றுமோடும்.

பசி விசனம் குளிர் அதிகநித்திரை முதலானதுகளினால் நாடிநடைகுறையும்.

விருத்தர், பாலர், க்ஷயரோகி, தரித்திரர், சிற்றின்பஞ் செய்தபேர்கள், தண்ணீரில் மூழ்கினபேர்கள், இவர்களின் நாடின் உண்மை தெரியாது.

நாடிபார்க்கும் ஸ்தானத்திற்குமேல் யாதொரு கட்டிருந்தாலும் பூமியிற் கரத்தை யூன்றிக்கொண்டிருந்தாலுங் காலைக்கட்டிக்கொண்டிருந்தாலும் நாடிநடைதோற்றாது.

## மனிதர் வயதின் விபரம்.

வயது நூறில் 30-க்குள் உடல்வளரும், அதற்குமேல் முகத்தின் ஒளிகுன்றும், 40-க்குமேல் தேஜஸ்கெடும், 50-க்குமேல் உடல்தளரும், ரோமம்வெளுக்கும், 60-க்குமேல் கண்ணொளிமங்கும் நடக்கிற்றிகைப்புண்டாகும், 70-க்குமேலறிவு குறையும், 80-க்குமேல் சுவாசம் மேல்நோக்கி வெளியிற்பாயும், 90-க்குமேல், ஐம்பொறியும்புலனும் ஒடுங்கியிந்திரியமற்று நூறில் மரணம். ஆனாலிடையி லவமிருத்து தத்து பிணி முதலானவைகளால் மரணமுண்டு.

## தேகக்கட்டளை விபரம்.

பிரிதிவி- மண், அப்பு- ஜெலம், தேயு- அக்கினி, வாயு- காற்று, ஆகாயம்- வெளி, யென்று சொல்லிய பஞ்சபூதியங்கள் சரீரத்துக்கு ஆதாரமாயிருக்கின்றது.

வாதம் வாயுவின் தன்மையொத்தும் பித்தம் தேயுவின் றன்மையை யொத்தும் சிலேத்மம் அப்புவின் றன்மையை யொத்துமாயிருப்பதால் சுரோணிதத்துடன் சுக்கிலஞ் சேரும்போது வாதபித்த சிலேத்மங்களில் எது அதிகரித்திருக்கிறதோ அது சிசுவிற்குப்பற்றி வாததேகம் பித்ததேகம் சிலேத்மதேகமென்று மூவகைத் தேகக்கட்டளை யுண்டாயிருக்கின்றன.

## வாததேகக் குறிகள்.

நாடிமெதுவாய் நடக்கும் தேகமெத்த அசதியுள்ளதாயும் புத்திமந்தமாயு மிருக்கும் உற்றகாரியத்தை மெத்தனவாயெண்ணும் சற்றுஞ்சலியாம லுரைப்பதெல்லாம் உழல்வாயிருக்கும் வெற்றியும் புகழுமுண்டாகவேண்டிப் பொய்மெய்யாய்ப்பேசும் உடல் குளிர்ந்து பருத்திருக்கும்.

## பித்ததேகக்குறிகள்.

நாடிவிரைவாய் நடக்கும் திடமுந்தீர்க்கமுங் கடினமான காரியங்களைச் சாதிக்கும் சக்தியுண்டாகும் இளமையில் நரைக்கும் கடைக்கண் சிவப்பாயிருக்கும் சொற்கள் அமிர்தமாயிருக்கும் காமக்குரோதாதிகள் அதிகரித்திருக்கும் உடல் ஊஷ்ணமாயிருக்கும் மெய்பொய் அறியும்படி பலநூல்களை ஆராயும்.

## சிலேத்மதேகக்குறிகள்.

நாடி அதிகமிரிக்ஷியும் துற்பெலனுள்ளதாயு மிருக்கும் உடல்வியர்க்கும் சன்மார்க்கத்தி லிச்சையுண்டாகும் தோகையரின்பமும் பொய்களவும் விலகியிருக்கும் தலைமயிர் நீண்டு காட்டும் பகிடிகூறும் திருமாதணைந்துவாழ்வள்.

## வாதபித்தசிலேத்தும நிலை.

அபானமுதலுந்திவரை வாதநிலை
உந்தியின்மேல் மார்புமட்டும் பித்தநிலை
மார்புமுதலுச்சிவரை அய்யநிலை.

## வாதபித்த சிலேத்துமத்தினியல்பு.

வாதம் வாய்வு புளிப்பு குளிர்ச்சி நிறம் கருமை நீலம், பித்தம் வன்னி கசப்பு வெதுப்பு நிறம் பசுமை பச்சை, அய்யம் அப்பு தித்திப்பு வியர்வை நிறம் வெண்மை.

வாதம் எழும்பிடில் புளிப்பு நாவிலேறும், பித்தம் எழும்பிடில் கசப்பு நாவிலேறும், சிலேத்துமம் எழும்பிடில் இனிப்பு நாவிலேறும்.

தேகங்குளிர்ந்தால் வாதம், தேகஞ்சுட்டால் பித்தம், தேகம் வியர்த்தால் சிலேத்துமம்.

## வாதபித்த சிலேத்துமகாலம்.

உதயத்தில் - 10 - கடிகைவரைவாதம், உச்சியில் - 10- கடிகைவரை பித்தம், மாலையில் - 10 - கடிகைவரை சிலேத்தும நடக்கும்.

மனிதர்களுக்கு வயசு-100-ல்-40-வயசுவரைவாதகாலம், 40-முதல்-80-வரை பித்தகாலம், 80-க்குமேல் 100-வரை சிலேத்துமகாலம்.

## ரோகஸ்தர்களின் தேகமுதலானகுறிகள்.

வாதரோகியுடல் குளிர்ந்து முகம் விழி பல் மலம் கருத்திருக்கும் விழியில் நீர்வடியும் நாக்குக்கறுத்து வரண்டு முள்ளுமுள்ளாயிருக்கும் சிறுநீர் பொருமிக்கருமையாய்க் கடுத்துச் சிறுத்திரங்கும்.

பித்தரோகி யுடல்சூடாயும் முகம் விழிநாக்கும் பல் மலம் மஞ்சளாயிருக்கும் நீர்மஞ்சளாயுஞ் சிவப்பாயுமிரங்கும்.

சிலேத்மரோகியுடல் வியர்க்கும் முகம் விழி பல் நாக்கு மலம் நீர் வெளுப்பாயிருக்கும் கண்ணிற் பீளைகட்டும்.

தொந்தரோகியுடல் முகம் விழி பல் நாக்கு நீர் மலம் பலவிதம்.

## வாதக்கூறு.

வாதமீறினல் வாயுவினல் தேகமெல்லாங் குத்தும் கால் கை சந்துபொருத்துக்கள் உளையும் கால்கை யொருபக்கத்தில் முடங்கும் குனிந்தால் நிமிரவொட்டாது திமிருண்டாகும் உடல் பொருமும் குடல் புரட்டும் அன்னஞ்சுருங்கும் வயிறு மந்திக்கும் பொருமும் மலசலங் கட்டும் அபானஞ் சுருங்கும் நாவுபுளிக்குந் தாதுநஷ்டமாகும் கழிச்சலுண்டாகும்.

## பித்தக்கூறு.

பித்தமீறினல் உடலிற்காந்தலும் வரட்சியுமெறிவும் நடுக்கமுண்டாகும் மண்டைக்குத்து நாவறட்சி கசப்பு அரோசியம் தாகம் வாந்தி விக்கல் மூர்ச்சை கிறுகிறுப்பு காதடைப்பு அயர்வுசோபம் வயற்றுக்காந்தல் நெஞ்செரிவு அக்கினிமந்தம் குளிர்சுரம் விடாச்சுரம் அஸ்திசுரம் பாண்டு காமாலை சோகை மயக்கம் பிரமேகம் பித்தவெட்டை யுண்டாகும் விழிசுழன்று குழிவிழுந்து இருண்டு வரும் நீர் மஞ்சளாயும் சிவப்பாயுமிரங்கும்.

## சிலேத்மக் கூறு.

சிலேத்ம மீறினல் உடல் காயும் வத்தும் வெளுக்கும் குளிர்ந்து நடுங்கும் அன்னஞ்செல்லாது விக்கல் சத்தியிருமல் மேல் மூச்சு திகைப்பு வியர்வை க்ஷயம் ஈளையுண்டாகும் நெஞ்சும் விலாவும் நோகுமிரத்தங்கக்கும் நாவு வழுவழுத்தினிக்கும் வாய் நீருறும் நீர்சிறுத்திரங்கும்.

## குருநாடி யிருக்குமிடம்.

குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னேநிற்கும் அதுதிசைநாடி பத்திற்குந் திறமாய் நிற்கும், உடற்குயிராய் நின்ற குருநாடி வாதபித்தத்திற்கு நடுவிலிருப்பதைப் பார்க்கில் அது மூவிரலுந்தாண்டி மூலமுதலுருவிப்பாய்ந்து விசைநரம்பூடே சேர்ந்து சந்திரமண்டலம்போய்ச் சார்ந்து பின்பு பம்பரம்போற் கிறுகிறென்று வாதபித்தம் ஐயமென்றநாடி முதலாடியோடி மண்டலங்கள் மூன்றுஞ்சுத்தி கத்திரிக்கோல் மாறலெனக்கட்டிச்சேர்ந்து வாதபித்த நடுவிலிருந்து வாதத்தில் கோழி அன்னம் மயில்போலும்நடக்கும் பித்தத்தில் ஆமைபோலும் அட்டைபோலும் நடக்கும் சிலேத்மத்தில் பாம்புபோலும் தவளைபோலும் இயல்பாய் நாடிநடக்கும்.

## குருநாடியின் குணம்.

குருநாடி வாதத்தில் அட்டைபோற் புரண்டுவரில் வாய்வுமிகும் இருமல் தினவு சொரி மிகுதியுண்டாகும் தேகம்வாடும் குருநாடி பித்தத்திலாமைபோல்நடக்கிற் சுரங்காயும் வாய்நீர்சுழற்றும் வியர்க்கும் சிலேதமத்திற்குருநாடி சிங்கம்போற்சீறிநிற்கில் சன்னிதோன்றும் குருநாடி சிலேத்மத்தை யூடுருவி அமருமாகில் அசாத்திய மரணக்குறிகளுண்டாகும் குருநாடி குன்றிப்போகில் வயிறுகழியும் கடுப்பெடுக்கும்கைகால்வீங்கும் குருநாடி பக்கம்பாயிற் சிலேத்மம் எதிரேமோதும் குருநாடிநேரேநிற்கில் வாதபித்தமிரண்டுஞ்சேறும் குருநாடிபின்வாங்கில் அசாத்தியங்களுண்டாகும் குருநாடிஅய்யத்தில் விட்டிலைப்போற்றுடிக்கில் மரணம்.

## நாடிகள் கிழமேலுமீறியோடும்விதம்.

சந்திரன் வாதநாடி, சூரியன் பித்தநாடி, சுழிமுனைசிலேத்மநாடி. வியாழத்திற்சிலேத்மநாடி, சனி-செவ்வாய்-ஞாயிறு இந்தக்கிழமைகளில் பித்தநாடி, திங்கள்-புதன்-வெள்ளி இந்தக்கிழமைகளில் வாதநாடி மீறியோடும்.

ஞாயிறில் வாதமோடில் சளிபிரும விரைப்புண்டாகும்.
செவ்வாயில் வாதமோடில் சுரமுண்டாகும்.
சனியில் வாதமோடில் சீதளமுஞ் சன்னியுண்டாகும்.
வியாழத்தில் வாதமோடில் விலாமுதல்தேகமெலாம் வலியுண்டாம்.
திங்கள் பித்தமீறில் ஜலதோஷமுட்டனேகாணும்.
புதனில் பித்தமோடில் நீரேத்தம் தலைக்குத்துண்டாகும்.
வெள்ளியிற் பித்தமோடில் கண்ணோய் காதுநோயாம்.
வியாழத்திற் பித்தமோடில் தாபசுரம் தலைவலியுங்காணும்.

## நாடித்தொந்திப்பு.

வாதத்தில் வாதமாகில், உடல்நொந்து நெகிழ்ச்சியாய்ச் சுருங்கும் வாங்கும் உடல்பதறும் அன்னஞ்செல்லாது.

வாதத்திற் பித்தமாகில், வாய் குழறிப்பேசும் கால் குளிரும் வீக்கமுண்டாகும்.

வாதத்திற் சிலேத்மமாகில், உடல்வீங்கும் வலிக்கும் தலையிடிக்கும் குணங்கள் வெவ்வேறாய்தோற்றும் மெய்வெளுக்கும் அன்னஞ்செல்லாது நாளுக்குநாள் வீக்கம் அதிகப்படும்.

பித்தத்திற் பித்தமாகில், பிதற்றுங் கிறுகிறுக்கும் சத்திக்கும் இளைக்கும் மேனிஅத்திபோல்உலர்ந்து வத்திவெளுக்கும் பின்பு வீக்கமுண்டாம்.

பித்தத்தில் வாதமாகில், பிடறி கால்கையில்குத்தும் மெய்குறுகும் பதரும் அத்திபோலுலரும் சுரங்காயும் புத்திமடியும் பொறுமைநீங்கிக் கோபமுண்டாம்.

பித்தத்திற் சிலேத்மமாகில், வாய்குழறும் பிதற்றும் சத்திக்கும் வாய்நீரொழுகும் தலைசுற்றும் வயிறுநோவும்பித்தமெடுக்கும் பிடரி வலிக்கும்.

சிலேத்மத்தில் வாதமாகில், நரம்பெல்லாம்வலித்துநிற்கும் பிடறிகுன்றவலிக்கும் விழிமேலோடும் வாய்குழறும்.

சிலேத்மத்திற் பித்தமாகில், உண்பதுகசப்புண்டாகும் நாவுகசக்கும் இனிக்கும் பேச்சுத்தடுமாறும் கபங்கட்டும் குறல்வேறுபடும் கண்ணிற்பீளைசாடும்.

சிலேத்மத்திற் சிலேத்மமாகில், விழிவட்டங்கொள்ளும் உயிர்பிரியும்.

வாதத்தில் ஐயஞ்சேரில், ஜன்னிதோஷம் மெய்மயக்கஞ் சோபம் மூர்ச்சை சோகை பாண்டுஉண்டாகும்.

பித்தத்தில் வாதஞ்சேரில், பீனிசம் மண்டைக்குத்து வலிபவுத்திரமரையாப்பு நவமூலங்களுண்டாகும்.

பித்தம் வாதத்தேறில், பாண்டு காமாலை நீராம்பல்மகோதரம் கவுசி மகவை வெப்புப்பாவையுண்டாகும்.

ஐயம் பித்தஞ்சேரில், வாயூறல் சுரம் பேதி வாந்தியுண்டாம்.

வாத மிரண்டுபங்கும் பித்த மொருபங்குமோடில், வாதபித்த தொந்தரோகம் வாய்வுமிகுந்து உதரம்விம்மும் வலிக்கும் மாதரையிச்சிக்கும் சிந்தைமிகும்.

பித்த மிரண்டுபங்கு வாத மொருபங்குமோடில், பித்தவாத தொந்தரோகம் உஷ்ணமிகுத்து உடல்சண்ணெரியும் பசிதாக முண்டாகும் வாய்கசக்கும் காடியேதவனம் பற்றும்.

வாதமிரண்டுபங்குஞ் சிலேத்மமொருபங்குமாகில், வாதசிலேத்மதொந்தரோகம் வயிறுபொருமிவலிக்கும்பசியாது

பித்தமிரண்டுபங்குஞ் சிலேத்மமொருபங்கு மோடில், பித்தசிலேத்ம தொந்தரோகம் தலை வரண்டு பிடரிநோகும் உடம்பெல்லாந்தினவுஉண்டாகும் வயிறெரியும் மந்தித்துப்பொருமும்.

சிலேத்மமிரண்டுபங்கும் வாதமொருபங்குமோடினால், சிலேத்மவாததொந்தரோகம் ஜன்னியுண்டாகும் தலைநோகும் வாய்தித்திக்கும் அன்னஞ்செறியாது.

சிலேத்மமிரண்டுபங்கும் பித்தமொருபங்குமோடினல், சிலேத்தும பித்ததொந்தரோகம் உடல் குளிர்ந்து கூசும் தாகிக்கும்.

வாத மிரண்டுமாத்திரையும் பித்த மொருமாத்திரையுமாகில் கொடுஞ்சுமை சிரமேற்கொண்டுதாளுறநடப்பதுபோலநாடிநடக்கும்வாதபித்ததொந்தரோகம் உதிரம்கொந்துவிம்மிவலிக்கும் தாகிக்கும் தீவனஞ்செல்லாது.

பித்த மிரண்டுமாத்திரையுஞ் சிலேத்ம மொருமாத்திரையுமாகில், பிள்ளைத்தொட்டிலில் நடுவிலசைவதுபோல நாடிநடக்கும் பித்தசிலேத்மதொந்தரோகம் பசியிராது அடிக்கடி உதிரம் விம்மும் பிதற்றும் நயனம் எரியும் மஞ்சட்போலிருக்கும்.

சிலேத்மமிரண்டுமாத்திரையும்வாதமொருமாத்திரையுமாகில் புணர்ச்சிபோல நாடிநடக்குஞ் சிலேத்மவாததொந்தரோகம் கபமேலாடும் இனிப்பைவிரும்பும் பசிதாக மதிகரிக்கும்.

வாதமிரண்டுமாத்திரையும் சிலேத்ம மொருமாத்திரையுமாகில், முறிந்த அரணைவால் துடிப்பதுபோல நாடிதுடிக்கும் வாதசிலேத்ம தொந்தரோகம் உடல் வலிக்கும் கைகால்திமிராயிருக்கும் வயிறுபொருமும் பித்தமிரண்டுமாத்திரையும் வாதமொருமாத்திரையுமாகில் வீணையடித்தாற்போலநாடியடிக்கும் பித்தவாததொந்தரோகம் உடல்வலிக்கும் எரியும் நெஞ்சும் நாவும் வரளும் நீர் சிறுத்திரங்கும்.

சிலேத்மமிரண்டுமாத்திரையும் பித்தமொருமாத்திரையுமாகில், வண்டிச்சக்கரம்போலநாடிசுழலும் சிலேத்மபித்த தொந்தரோகம் சன்னியுண்டாகும் உச்சி வலிக்கும் செவிகேளாது நாவுயினிக்கும் வயிறுமந்திக்கும்.

## நாடியின் குறிப்பு.

வாய்வுக்கும் மந்தத்திற்கு மூன்றுநாடியும்அமர்ந்து தளர்வாயோடும் பசித்திருக்கும்போது மூன்றுநாடியுந் தூங்கியோடும் பாம்புவிஷத்திற்கு மூன்றுநாடியு மடங்கியிருக்கும் வயிற்றுவலிக்கு மூன்றுநாடியும் உள்ளுறவாய்வாங்கியோடும்

கிரந்திநோய்க்குக் கரையுடைந்த அருவியைப்போலோடும் புண்புரைக்கு வாதமும் பித்தமும் பீனிசத்துக்கு பித்தமுஞ் சிலேத்மமுஞ் சூலைக்குச் சிலேத்மமும் பித்தமுஞ் சுழன்றுகாணும் கருப்பவதிக்கு வாதமும்பித்தமுங் கலக்கிக்காணும் கிராணியதிசாரத்துக்கு வாதமும்பித்தமுந் தளர்ந்து காணும் நீர்மேகத்துக்கு நாடியெல்லாம் பலங்குறைந்து எரியின்மேற் கரண்டுவிழும் புழுப்போற் புரட்டிக்காணும் குருநாடிசீறிநிற் கும் மேகமதிகப்பட்டால் வாதமும் பித்தமும் பின்னித்துடிக்கும் சன்னிக்குமூன்றுநாடியும் படபடத்தோடும் விக்கலுக் குச் சிலேத்மமும் வாதமுஞ் சுரத்துக்கு வாதமும் பித்தமுங் கணக்காச்சலுக்குப் பித்தமும்வாதமுங் கலங்கிக்காணும் விஷநீர் சோகை பாண்டுக்கு மூன்றுநாடியு மேகனைப்போல்மீட் டும் தலையிடிக்கும் க்ஷயரோகத்திற்கும்பித்தங்கலங்கி காணும் இளநீர் நெய்பால் இறைச்சிகனிகளுக்கு வாதங்கதிக்குங்கோழி மாமிசத்திற்குங் கோபத்திற்கும் புணர்ச்சிக்கும் பித்தங்களுக்குஞ் சுரதோஷத்திற்கும் புணர்ச்சிக்கும் வாதத்தைத்தாண்டுஞ் சீதருட்சைக்குப் பித்தத்திற் சிலேத்மஞ்சேரும். புணர்ச்சிக்கு நாடிபுழுப்போல்நிமிர்ந்துவலித்து நின்றுவாங்கும்பித்தசன்னிக்கு வாதமுஞ் சிலேத்மமும்அமர்ந்து பித்தம் வெடுவெடுத்து மீறிநிற்கும் மரணசன்னி உட்குத்து புறவீச்சு இசிவுக்கு வாதமுஞ் சிலேத்மமும் அழுந்திக்காணும்.

## மரணக் குறிகள்.

இரண்டுதினம் பிங்கலைபாயில் மூவாண்டிலும், மூன்றுதினமிடைகலைபாயில் இரண்டுபருவத்திலும், பத்துதினம்உபயத்திற்பாயில் திங்களொன்றிலும், மூக்குவிட்டு வாய்வழிசுவாசம்பாயில் மூன்றுதினத்திலும், ஐயரோகத்தாலிளைத்தவுடல் வீங்கிடில் திங்களொன்றிலும், பித்தரோகத்திலிளைத்தவுடல் வீங்கிடில் மதிஆறிலும், சிலேத்மம் வெள்ளம்போல் மடமடெனச்சுருக்கமாயோடில் மறுநாளிலும், பித்தஞ் சிதறியோடில் மூன்றுதினத்திலும், வாதஞ்சிதறியோடில் எட்டுதினத்திலும் வாதபித்தமிரண்டுங்கூடி நிலைதப்பிசிதறில் ஐந்துதினத்திலும் வாதபித்தசிலேத்ம மூன்றுங்கூடி நிலைதப்பிச்சிதறியோடினால்

மண்டலத்திலும், மூன்றுமொன்ருய்க்கூடி அரணைவால் துடி சாலில் ஒருதினத்திலும், வாதபித்தசிலேத்மமொன்ருய்க்கூடி தேட்கொடுக்கைப்போலாடி ஓடம்போல் நடந்தால் திங்களொன்றிலும், நாடிபோத்துப்போற் புறந்துடித்திடில் திங்களொன்றிற்பிணிநீங்காவிட்டால் திங்கள் பத்திலும், சிலேத்மநாடி குதிரைபோல்மிர்ந்துநின்ருல் திங்களொன்றிலும்,காலையில் சிலேத்மநாடியும் உச்சியிற் பித்தநாடியும் மாலையில் வாதநாடியும் வகைதப்பியோடிடில் நாலைந்துதினத்திலும், சிலேத்மநாடி மயில்போலும் அட்டைபோலும் பதறி நின்றிடில் ஏழு தினத்திலும், ரோகஸ்தன்உமிநீர் சமீபத்தில் விழுந்திடினும் மரணம்.

பாளச்சிலையை நெய்யில்நனைத்து மணிக்கடையிற் சுத்திமூன்றேமுக்கால்நாழிகை சென்றவிழ்த்துப் பார்க்கில் வாதநாடிகுதித்துவாங்கினு லப்பொழுதிலும், நல்லரவுபோல்நெளிந்தோடினுல் இருபத்திரண்டுநாளிலும், உதைத்துவாங்கினுல் ஒன்பதுநாளிலும், அட்டைபோல்நடந்தால் மூன்று தினத்திலும், தந்திபோற்சுண்டினுல் அன்றுபொழுதிலும், பக்கஞ்சென்றெதிர்த்துவாங்கினுல் முப்பதுநாளிலு மரணம்.

நாடி புழுப்போல் நெளிந்தாலுஞ் சூடுகொண்டாலும் பஞ்சுபோல் மெதுவாயிருந்தாலும் அன்னம்போல்நடந்தாலும் பிணிநீங்கும்.

இடதுள்ளங்காற் குளிர்ந்தும் வலதுள்ளங்காற் சுட்டுங்குழச்சுகுளிர்ந்திடில் பத்துதினத்திலும், குழச்சுகளிரண்டுங்குளிர்ந்து உச்சிவியர்த்து மூக்குவிறைத்து இளைப்பு விக்கல் தோன்றி உடம்பெல்லாங்குளிர்ந்து விழியிருண்டால் மூன்றுதினத்திலும், பிடறிநெற்றி கழுத்தினுட்புறங் குளிர்ந்து விழிநிலைநிறமாகி நெஞ்சிற்கபங்கட்டிடில் மூன்றுதினத்திலும், ஒருநாசியும் முழங்கைப்பள்ளமூங்குளிர்ந்திடதுள்ளங்காற்சூடாய்த் தொண்டை கறகறத்தால் ஐந்து தினத்திலும், அடித்துடையும் இரண்டுள்ளங்காலுங்குளிர்ந்து இருசெவியும் விரைத்துநின்ருல் விரண்டுதினத்திலு மரணம்.

வலதுள்ளங்காற்சுட்டு இடதுள்ளங்காற்குளிர்ந்து உச்சிவியர்த்து உடம்பெல்லாங்கனலாயிருந்தாலும் புருவம்நெத்தி

இடதுள்ளங்கைசுட்டு உச்சிகுளிர்ந்தாலும் வலதுநாசியும் வலதுஉள்ளங்காலும்வெதும்பி யிடதுநாசியை தேய்க்கும்போது சிவந்தாலும் உடல் ஆதியந்தமுஞ் சூடேறினும் பிணி நீங்கும்.

விழி மூக்கு காது உச்சி உந்தி உள்ளங்கால் கைகள் வெளுத்து பாதங்குளிர்ந்தால் ஐந்து நாழிகையிலும், வாதமும் பித்தமும்அடங்கி சிலேத்துமங்கதித்து உடல்வெளுத்துமார் புகுளிர்ந்திடிற் றெண்ணூறுகடிகையிலும், சிலேத்மநாடியெழுந்துவீழ்ந்திடி லிரண்டுகடிகையிலும், பித்தமடங்கிவாதமுஞ் சிலேத்மமேலிட்டுக் கண்டத்திற் கபமடைத்து இளைத்து விழிமயங்கிச்சுழன்று கண்ணீர்வடிந்தால் ஐந்து நாழிகையிலும், முகம்நீண்டு உடம்பெல்லாம்நரம்புதோன்றி பாசிபோற் கண்பஞ்சடைந்து இருள்மூடினும் விசைநரம்புகுளிர்ந்து தளர்ந்து விறைத்துவாங்கிப் பொறிகளும் மிகுதியாய்த்தளர்ந்து நெறுநெறெனப்பற்கடித்து நடுக்கமுண்டாய் வாதபித்தசிலேத்துமம் விட்டிலைப்போற்றுடித்திடினு மரணம்.

வாதபித்தசிலேத்மமூன்றும் வெட்டுப்பட்ட அரணைவாற்போற்றுடிக்கும் உடல்வேறுபட்டு குளிர்ச்சிகாணும் கையால்முகத்தைத்தடவும் மனிதரை ஆவலாய்நோக்கிப் பார்க்கும் ஏங்கிப்பெருமூச்செய்து இரண்டுவிலாவும் இளைக்குந் தொண்டையிற் கபங்கட்டியிரையுங் கண்ணில்நீர்வடியும் எடுபிடியென்றெழுந்துவிழும் உடல்மயங்கும் மூக்குநீளும் வியர்வை காணும் விழியும்பல்லுங்கறுக்கும் கபமேலாடிமுடிச்சுவிழும் கண்சுழன்று பலபேச்சாகும் ஜீவன்மயங்கும்.

நாடி நூல்-முற்றிற்று.

---

அனுபோகவயித்தியம் மூன்றுங்காண்டத்தில் நாடிபரிட்சைகள் சுலபமாய்சொல்லியிருப்பது தெளிவாகாமையால் இதில் விபரிதமாய் சொல்லப்பட்டது.

உ

கடவுள் துணை.

# குழந்தைகட்குவரும் நோயின் விவரமும் அவிழ்தமும்

கிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, பக்ஷிதோஷம், மாந்தம், கணம், பிரளி, கரப்பான், செவ்வாப்பு, தொண்டைக்கட்டு, அக்கரம், வசூரி முதலான அநேகரோகங்கள் சம்பவிக்கிறது மாந்தம் தாய்முலைப்பாலாலும் கணம் கர்ப்பச் சூட்டினாலும் மற்றப் பிணிகள் தாய் தந்தையின் புணர்ச்சியினாலெழுந்தசூட்டினாலும் உண்டாகிறது.

## செங்கிரந்தியின் குணம்.

பிள்ளை பிறந்தவுடன் தொண்டைகட்டிப் பூனைக்குரற்போலழும் நீரும்மலமுங்கட்டி வயிறூதும் கால்கை சிவப்பேறும்.

## நிவர்த்தி.

கோரோஜனையை முலைப்பாலி லுரைத்துக் கொடுக்கத் தீரும். கர்ப்பூரவல்லியிலை குன்றுமணியிலை ஈருள்ளி ஓர் நிரையாய் தட்டி சாறுபிழிந்து முரித்துக்கொடுக்கத்தீரும். முருங்கையிலைச்சாற்றை முரித்துக்கொடுக்கத்தீரும். செம்முள்ளியிலையைத் தண்ணீரிற்போட்டுக்காய்ச்சிக் குளிப்பாட்டிவரவும்.

## கருங்கிரந்திக் குணம்.

குழந்தை அலரியழுது குரல்கம்மும் முலையுண்ணாதுமூர்ச்சையாகும் உடல்வெதும்பும் கண்திரவாது நாவரட்சிகாணும் கீழுதடு கைகால்கருப்பேறும் வயிறூதி வலிகாணும்.

## நிவர்த்தி.

கழுதைப்பாலில் ஒருகாசியிடை ஒணானிரத்தம் விட்டுக் கொடுக்கத்தீரும்.

கருங்கழுதைலத்திச்சாறு அவுரியிலைச்சாறு சிற்றாமண க்கெண்ணெய் சமமாய்க்கலந்து அதில் வசம்பு உள்ளி தட்டிப் போட்டுக்காய்ச்சிக்கொடுக்கத் தீரும்.

ஆவினெய் சிற்றாமணக்கெண்ணெய் நல்லெண்ணெய் சங்கிலைச்சாறு சமனாய்க்கூட்டி சுக்கு மிளகு திப்பிலி அரைத்துப்போட்டு ரவிபுடம்வைத்து ஒருபணவிடைஉள்ளுக்குக்கொடுத்து மேலெங்குந்தடவிவைத்து செம்முள்ளி கிரந்திநாயகம் நீரிற்போட்டுக்காய்ச்சிக் குளிப்பாட்டிவரத் தீரும்.

மூக்கரைச்சாரணை முடக்கொத்தான் செப்புநெருஞ்சி முத்தெருக்கஞ்செவி ஓரிதழ்த்தாமரை ஈருள்ளி மயிலிறகு இவையெல்லா மோர்கிரையா யெடுத்துத்தட்டி சிற்றாமணக்கெண்ணெயிற்போட்டுக்காய்ச்சிக் குழந்தைக்குஉள்ளுக்குக்கொடுத்துத் தாய்க்குமேலேபூசி அவள்பத்தியமாயிருக்கத்தீரும்.

## கிரந்தி 12-க்கும், சூலை 18-க்கும்.

ஆமணக்கெண்ணெய் தேங்காய்ப்பால் செம்பரித்திச்சாறு வகைக்குப்படி-க, ஒன்றாய்விட்டுக் காய்ச்சிவடித்து அதில் சுக்கு கிராம்பு ஏலம் திப்பிலி பூரம் மிளகு வகைக்கு விராகனிடை-க, பொடித்துப் போட்டுக் குழந்தைகட்குக் கொடுக்கத் தீரும்.

## அரைவீட்டிற்குழந்தைக்கு கழுத்துவீங்கி முழங்கால் முழங்கை குளிர்ந்து வயிற்றில் வலிகண்டால்.

ஷை பிணிகண்டவுடன் கஸ்தூரி திப்பிலி வகைக்குக்காற்பணவிடைபொடியை வெற்றிலைச்சாற்றில் கலந்துகொடுக்க தீரும். கஸ்தூரியைமட்டும் ஷைசாற்றிற்கொடுத்தாலுந்தீரும்

## பிள்ளை வயிறுநொந்தழுதால் மலங்கட்டினால்.

புன்னை சிறுதேக்கு கோஷ்டம் சமனாயரைத்துக்குழம்பு போற்காய்ச்சிபிள்ளைவயிற்றிற்பூச வயிறுநொந்தழுதல்தீரும்.

அதிமதுரம் வேப்பங்கொழுந்து சர்க்கரை இம்மூன்று மரைத்து நெய்யில்வேகவைத்துக்கொடுக்க வயிறுநொந்தழுதல் மலக்கட்டு நீங்கும்.

## குழந்தைக்குச் சிறுநீர்கட்டினால்.

எலிப்புழுக்கையும் வெள்ளரிவிரையுஞ் சமனாயரைத்து அடிவயிற்றிற்பூசி வெங்காரத்தைப் பொரித்து முலைப்பாலிற் கரைத்துப்புகட்ட நீரிரங்கும்.

## பிள்ளைக்கு உரம்விழுந்தால்.

வெள்ளைப்பூண்டு பலம்-10, கடுகு பலம்-10, ஒன்றாகக்கலந்து குழித்தயிலமிறக்கி உடம்பிற்பூசகுடல்வாதம்உரந்தீம்.

## பிள்ளை சீரியழுதால் விக்கலெடுத்தால் வயிறுபொருமினால்.

சிறுதேக்கும் திப்பிலியும் பொடித்துக் கொண்டாவது அல்லது திப்பிலியுங் கடுகுரோகணியும் பொடித்தாவது தேன் அல்லது ஆவிநெய்யில் மத்தித்துக் கொங்கையிற் பூசிப் பிள்ளைக்குப்பால்கொடுக்க ஷை பிணிகள்நீங்கும்.

## பிள்ளைவயிறுவீங்கினால் குடித்தபாலெதிரெடுத்தால் அடிக்கடி கொட்டாவி விட்டால்.

அதிமதுரத்தைக் காடியிலரைத்து வயிற்றிற் பூச வயிற்றுவீக்கந் தீரும்.

வெள்ளுள்ளியும் ஓமமும் வெதுப்பிக் கியாழஞ் செய்து கொடுக்கப் பாலெதிரெடுப்பதுங் கொட்டாவியுந் தீரும்.

அதிமதுரத்தை முலைப்பாலி லரைத்து முலைக்காம்பிற்பூசிக் குழந்தைக்குப்பால்கொடுக்கப் பாலுண்ணும்.

## பால்சுரக்க.

பூனைகத்தைப் பாலிற்போட்டு மண்களைந்து எலுமிச்சங்காய்ப்பிரமாணமரைத்துப் பசுவின்பாலில் மூன்றுநாட்கொடுக்கவும் நற்றுளியிலையை யிளவெந்நீரிற்போட்டுப் பிசைந்து மூன்றுநாட்கொடுக்கவும்.

பாதிரிவேரையாவது கீழ்க்காய்நெல்லிவேரையாவது அரைத்துப் பாலிற்கொடுக்கவும் பால் சுரக்கும்.

# தோஷவகுப்பு.

## பட்சிதோஷகுணம்.

குழந்தை முலையுண்ணாது ஜலமாய்வயிறுகழியும் வாந்தி பண்ணும் தலையெடாது கண்குழியும் பீளைசாறும் உடல்பே தப்படும் வெதும்பும் அலறும் சீறியழும் கழுத்தும் முகமும் சிறுக்கும்.

### நிவர்த்தி.

மணித்தக்காளிவேர் பிச்சிவேர் ஈருள்ளி யிவைகளை நறுக்கி சிற்றாமணக்கெண்ணெயிற்போட்டு ரவியில்வைத்துகுழந்தைக்குக்கொடுத்து உச்சியிலுந்தேய்க்கத் தீரும்.

## பரவைத்தோஷ குணம்.

சிரசிற்கனலேறி உடல்நொந்துவெதும்பும் நாவுலரும்சத்திக்கும் நெஞ்சைச்சுழியவாங்கும் வலிப்புகாணும் இளைக்கும் உச்சியுங் கண்ணுங்குழியும் குழந்தைஅடிக்கடி திடுக்கிட்டெழுந்துசீறியழும் வயிறுபோகும் விழிவெளுக்கும் முகம்மஞ்சட்போலிருக்கும்.

### நிவர்த்தி.

சீரகம் ஈருள்ளி வரப்பூலாவேர் இவைகளைச் சமமாய் கஷாயஞ்செய்துகொடுக்கத் தீரும்.

## எட்சிதோஷகுணம்.

உதிரத்திற் கனலேறி உடம்பு தேயும் நாறும் கண்ணிற் பீளைகட்டும் சற்றேவயிறுகழியும் குழந்தைமுலையுண்ணாது பதறியழும் கண்ணைப்பிசையும் மயங்கிப்புரளும்.

### நிவர்த்தி.

வில்வயிலையுஞ் சீரகமுங்கியாழஞ்செய்துகொடுத்துஷீ இலையையாவது நிலவிளாவிலையையாவது அரைத்துக் குளிப்பாட்டத்தீரும்.

## வீங்குபுள்ளின்தோஷகுணம்.

குழந்தைவாந்திபண்ணும் பசுமையாயும் பால்போலுங் கழியும் பின்கையால் முகத்தைத்துடைக்கும் உச்சி குழியும் நாவுலரும்.

## நிவர்த்தி.

மதுரம் முத்தக்காசு அதிவிடயம் கடுக்காய் வசம்பு தேவதாரம் மஞ்சள் வகைக்கு ஓர்நிறையாய் பொடுதலைச்சாற்றாலரைத்து உண்டைசெய்து முலைப்பாலிலிடத்தீரும்.

## தூங்குபுள்ளின்தோஷகுணம்.

வயிறுகழியும் வாந்திபண்ணும் மயக்கமாய்த்தூங்கிக்குழந்தைவீறிட்டலறி யெழுந்திருக்கும் முகத்தைப் பார்க்கும் அடிக்கடி தாகித்துத் தண்ணீர் விரும்பும் முகம் வேறுபடும் கண்கள்யிருண்டுசோரும் நெருநெறெனப் பற்கடிக்கும் உச்சிபள்ளம்விழும்.

## நிவர்த்தி.

மஞ்சள் வசம்பு ஏலம் வேப்பீர்க்கு ஓமம் குட்டிவிளாம் இவையெல்லாம்நறுக்கிவெதுப்பி கஷாயஞ்செய்துஅதிற்கோரோஜனையையுரைத்து உள்ளுக்குங்கொடுத்து ஷை மருந்துகளை அரைத்து மேலிலும்பூசிக் குளிப்பாட்டத்தீரும்.

## விளக்கொளிக்கண்புள்ளின்தோஷகுணம்.

பாலெதிரெடுக்கும் உடலடிக்கடிகாயும் குழந்தை முலையுண்ணாது பெருவிடாய்கொண்டுசோரும்.

## நிவர்த்தி.

சின்னி வசம்பு குட்டிவிளா இவையெல்லா மரைத்துக் குழந்தைக்குமேலிற்றேய்த்து முழுக்காட்டி அதுகளைத்துணியில்முடிந்து கழுத்திலுங் கையிலுங்கட்டத் தீரும்.

## வெங்கண்புள்ளின்தோஷகுணம்.

பால்போற்கழியும் மேனிகாயும் வெளுக்கும் வயிற்றிரைச்சல் வலிகாணும்.

## நிவர்த்தி.

கற்றாழஞ்சோற்றில் கடுக்காய்ப்பொடிதூவிப் பிசைந்து வைக்க நீருறும் அதில் திப்பிலியை வறுத்துப் பொடித்துத் தூவிக்கொடுக்கத்தீரும்.

## கருடக்கண்புள்ளின்தோஷகுணம்.

வாய்நீர்வடியும் வாந்திபண்ணும் இருவிழியுந்தாழும் பீளைகட்டும்.

### நிவர்த்தி.

கோரோஜனை அதிமதுரம் திப்பிலி ஓர்நிறையாய் முலைப்பாலிலரைத்து ஒருசங்கு கொடுக்கத்தீரும்.

## செங்கண்புள்ளின்தோஷகுணம்.

கண்சிவந்துநீர்வடியும் சிரங்குளிரும் குழந்தை தவழ்ந்துபோய் நிலத்தில்விழும் கையால் முகத்தைத்துடைக்கும் சீறியழும் வெப்புநீராய்க்கழியும்.

### நிவர்த்தி.

அதிமதுரம் சீரகம் முத்தக்காசு ஏலம் பத்திரி சாதிக்காய் கிராம்பு செண்பகப்பூ லவங்கப்பட்டை வகைக்குவிராகனிடை-க, மொசுமொசுக்கைஇலை பொன்னாங்காணி சிறுகீரை சீந்தில்வேர் வகைக்குப்பலம்-க, கருள்ளிச்சாறு படி-வ, ஆவிரைவேர்பலம்-க, இவைகளையரைத்து இரண்டுபடிசிற்றாமணக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிகொடுக்க சகலதோஷமுந்தீரும்.

## அந்திபுள்ளின்தோஷகுணம்.

மேனிவெளுக்கும் காயும் அதில் நரம்புதோன்றும் கால்கைகுளிரும் பாலெதிரெடுக்கும்.

### நிவர்த்தி.

சின்னி குட்டிவிளா நொச்சி சீந்தி வேம்பு வசம்பு உள்ளி இவைகளை அரைத்து மேலெங்கும்பூசி ஷை மருந்துகளை தட்டிச் சிறுபொட்டணமாய்க் கட்டிக் கண்டத்திலுங் காலிலுங் கட்டத்தீரும்.

## நீர்புள்ளின்தோஷ குணம்.

நெஞ்சுவரண்டிடும் கண்குழிந்து வெளுக்கும் குழந்தை பெருமூச்சிடும் பாலுண்ணாது இரவும் பகலும் அலறியழும் உடல்வியர்க்கும்.

## நிவர்த்தி.

விஷ்ணுகரந்தையும் சீரகமும்கூட்டிக் கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்.

---

## புள்ளின்தோஷ குணம்.

உச்சியுங்கண்ணுங்குழியும் குடித்தபால்தங்காதுபச்சையாய்வயிறுகழியும் பறவைக்குரல்போற் குழந்தை சீறியழும் இளைக்கும் தண்ணீரைவிரும்பும் மெய்மரக்கும்.

## நிவர்த்தி.

ஓரிதழ்தாமரை வெந்தயம் விடத்தலைவேர் சுக்கு வால்மிளகு ஓரளவாய்க் கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

---

## மூட்டுதோஷ குணம்.

மாதவிடாயானகன்னிகள் குழந்தையையெடுத்தால் மேனிவாடும் வேறுபடும் வாந்திபண்ணும் உச்சியுங் கண்ணுங் குழியும் நாக்குவாய்கறுக்கும்.

## நிவர்த்தி.

மயிரோசனை திரிகடுகு சீரகம் கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

---

## குளித்தோஷகுணம்.

உச்சியுங்கண்ணுங்குழியும் வாந்திவியர்வைமிகும் பலவண்ணமாய்க்கழியும் தேகந்தணல்போற் காய்ந்து வற்றும் நெஞ்சுலரும் தாகிக்கும் கண்ணில்நீர்சொரியும் கால்வீங்கும்குய்யம்புண்ணாகும்.

## நிவர்த்தி.

குட்டிவிளா வேம்பு சோம்பு மஞ்சள் வசம்பு சுக்கு அரைத்து தாய்க்கும்பிள்ளைக்கும் உடம்பிற்றேய்த்து நீரில் வாகையிலையைப்போட்டுக்காய்ச்சிநீராட்டி அப்பால் ஆவினெய் படி-௨, நல்லெண்ணெய்படி-௨, நன்னாரி தண்ணீர் விட்டான் கரந்தை பொன்னாங்கண்ணி வகைக்குப்பலம்-க, ஏலரிசீரகம் வகைக்குக்கழஞ்சு-ரு, இவையெல்லாம் பால்விட்டரைத்துப்

போட்டுப் பதமாய்க்காய்ச்சிச் சிறுகரண்டிவீதங் கொடுக்கச் சகலதோஷமுந்தீரும்.

வேப்பங்கொழுந்து ஒருபிடி மிளகு வசம்பு சுக்குமலைதாங்கிவேர் வகைக்கு விராகனிடை-க, விளக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

## கெற்பமழிந்ததோஷ குணம்.

உடம்புநொந்துசிவக்கும் இளைக்கும் நாறும் சத்திக்கும் நெஞ்சயரும் கைகாலிலழுக்கேறும் கால்பின்னும் கழியும் விழிசொருகிமயங்கும்.

### நிவர்த்தி.

கழுதைலத்திச்சாற்றில் பரித்திவேரை யரைத்துக் கலக்கிக்கொடுக்கத்தீரும்.

பனைவெல்லத்தைஷைசாற்றில் கலக்கிக்கொடுக்கத்தீரும்.

## தேரைத்தோஷகுணம்.

உடம்புலர்ந்துவற்றும் வெளுக்கும் நெஞ்சுயர்ந்து கூடும் கண்டுபாடித்திருக்கும் கைகால்வற்றிச்சுருக்கிமுடங்கும் வயிறுபொருமும் மலந்தீயும் நாவுலரும் தாகிக்கும் முகம் வாடும் செவிதாழும் மூச்சுவாங்கும் நெரிகுரற்படும் பிள்ளை சற்றுந்தேருது.

### நிவர்த்தி.

சிறுபுள்ளடி சிறுகீரை நீராரை காணி நீர்முள்ளி இவைகளின்சமூலம், களா காட்டுமல்லி அவுரி கரிசலாங்கண்ணி நிலக்குமிழ் முடக்கொத்தான் இவைகன்வேர் ஓர்நிறையா யிடித்து மூன்றுபடிநீரிற்போட்டு நாலிலொன்ருய் வற்றவைத்ததில் அதிமரம் திப்பிலி ஏலம் மிளகு வகைக்குப் பலம்-ų, பசுவின்பால்விட்டரைத்துப்போட்டு ஆவினெய் இருநாழிவிட்டுப் பதமாய்க்காய்ச்சி சிறுகரண்டிவீதம்கொடுக்கத் தேரைத்தோஷங் குழித்தோஷந்தீரும்.

## மாந்தவகுப்பு.

மேதிப்பால் நெய் கதலிப்பழம் தேங்காய் இளநீர் கடலை வெல்லம் புளித்தமோர் மாங்கிசம் கனிகள்மலைத்துவரைஉளு

ந்து மொச்சை புளியங்கொட்டை உளுவை வாழை மீன்கெண்டை சர்கல் கரை முதலான வாயுவு பண்டங்களைக் குழந்தைகட்குப் பால்கொடுக்குமாதர்கள் மிகுதியா யனுசரித்தாலும் அவைகளைக்குழந்தைகள்தின்றாலும் வாதமாந்தம் பித்தமாந்தம் சிலேஷ்மமாந்தம் போர்மாந்தம் வாலைமாந்தம் சுரமாந்தம் நீர்மாந்தம் சொரிமாந்தம் கட்டுமாந்தம்எரிமாந்தம்தலைமாந்தம் கணமாந்தம் வலிப்புமாந்தம் சுழிமாந்தம் முக்குமாந்தம் சன்னிமாந்தம் ஊதுமாந்தம் வீக்கமாந்தம் என்று 20-வகைமாந்தரோகங்கள் குழந்தைகட்குநேரிடும்.

## மாந்த குணம்.

குழந்தையுடல்வெதும்பிவியர்க்கும் முலையுண்ணாது வாந்திபண்ணிமயங்கும் சீதமும் மலமுமாயுங் கெட்டபால்போலுங் தெளிந்ததண்ணீர்போலுங்கழியும் வெப்புநாறும் கைகால்குளிரும் நாவுலருங் குரல்கம்மும் கண்குழிந்துசுழன்றுசிவக்கும் கால்பின்னும் முகம் பளிங்குபோல்மின்னும்.

## வாதமாந்த குணம்.

குழந்தைவயிறுபொருமியழும் உடல்வியர்க்கும்பலவிதமாய்க்குழியவலிக்கும் துடிக்கும கோட்டாவிவிடும்நாசிபுண்ணாகும்.

## பித்தமாந்தகுணம்.

வாந்தி பேதி வலிப்பு மூர்ச்சைகாணும் குரல் கம்மும் மேனிமஞ்சணித்து வியர்த்துக்குளிரும்.

## சிலேட்மமாந்தகுணம்.

உடம்புசிலிர்த்துகுளிரும் நாவெளுக்கும் நெஞ்சிற் கபங்கட்டும் வயிறுபொருமிக்கழியும் குழந்தைமயங்கும்.

## இவைகட்கு நிவர்த்தி.

கொச்சி பொடுதலை நுணா வேலிப்பருத்திஇவைகளினிலைவகைக்கு ஒருபிடிகறுக்கிவெதுப்பிச் சாறுபிழிந்து கொடுக்கத்தீரும்.

வேலிப்பரித்தி பெருந்தும்பை சாணக்கிலை வெதுப்படக்கி வேளை நொச்சி வகைக்குஒருபிடியிலையை வதக்கிச் சாறுபிழிந்து அதிற்சுட்டவசம்பு சிறுதேக்கு ஆமையோடு சுட்டகரி ஓர்நிரையாயரைத்துக் கலக்கிக்கொடுக்கத்தீரும்.

பொடுதலை கரியுப்பு வகைக்கு ஒருபிடி ஒன்றாயிடித்துப் பிழிந்து முரித்துக்கொடுக்கத்தீரும்.

வெற்றிலைக்காம்பு வசம்பு உள்ளி திப்பிலி ஓர் நிறையாய் வெதுப்பி வெந்நீரிலரைத்துக்கொடுக்கத்தீரும்.

ஓமம் வெள்ளுள்ளி மிளகு திப்பிலி சுக்கு சீலையில்முடிந்து ஒருபடிதண்ணீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து கொடுக்கத்தீரும்.

விளாயிலையைவதக்கிச்சாறுபிழிந்து அதில் ஆமையோடு வசம்பு வட்டத்திருப்பி இவைகளைவெதுப்பி அரைத்துக்கலக்கிக்கொடுக்கத்தீரும்.

வேலிப்பரித்தி மேனி வேளை இரண்டுபொடுதலை அகத்தி இவைகளினிலையை வதக்கிச் சாறுபிழிந்து அதில் வசம்பு ஆமையோடு ஓமம் வெதுப்பியரைத்துக் கலக்கி உள்ளுக்குக் கொடுத்து மேலிலுந் துவாலையிடத்தீரும்.

வேளைவேர் சுக்கு வெந்தயம் பூடு வசம்பு ஓமம் இவைகளைஓர்நிறையாய்வருத்துக் கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

நுணா நொச்சி கழற்கொடி இவைகளினிலை வகைக்கொருபிடியைச்சட்டியிலிட்டுக்கரிக்கி ஒருபடிதண்ணீர்விட்டு அதில் ஓமம் வசம்பு சுக்கு மிளகு பொடுதலைக்காய் திப்பிலி இவைகளை நல்லெண்ணெய்விட்டுச் சிவக்கவருத்து சீலையில்முடிந்துபோட்டு வற்றவைத்து ஒருசங்குகொடுக்கத்தீரும்.

வேலிப்பரித்தியிலை வேளைவேர் நொச்சி பொடுதலைநுணா முருங்கை இவைகளினீர்க்கு வகைக்கு ஒருபிடியை வருத்து தண்ணீர்விட்டு ஓமம் திரிகடுகு வசம்புவெதுப்பிச் சீலையில்முடிந்துப்போட்டு வற்றக்காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

## ஊதுமாந்தகுணம்.

குழந்தையுடலூதிக்காணும் வயிறிரையும் கழிச்சல் கடுப்பு வாந்தி தொண்டைவலி சுரந்தோன்றும்.

### நிவர்த்தி.

வெண்காரம்விராகனிடை-உ, கடுகுரோகணி கருஞ்சீரகம் வகைக்குவிராகனிடை-உ, முலைப்பாலாலரைத்துமாத்திரைசெய்துக்கொண்டு வெந்நீரிலிடத்தீரும். பொடுதலை வேம்பு மாபுளி நுணா நொச்சி வேலிப்பரித்தி இவைகளினீர்க்கையும்ஓமம் உள்ளி திப்பிலியுஞ்சமமாயிடித்து ஒருபடிதண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்க் கஷாயஞ்செய்துகொடுக்க ஊதுமாந்தம் போர்மாந்தம் சத்திமாந்தம் செரியாமாந்தம் கட்டுமாந்தமுந்தீரும்.

கோரோசனை உள்ளி திப்பிலி மதுரம் வகைக்கொருகழஞ்சு அண்டவெள்ளை கருவிட்டரைத்துக்கொண்டு முலைப்பாலில் மூன்றுதினங்கொடுக்க ஏழுவகையூதுமாந்தமுந்தீரும்.

வேலிப்பருத்தியிலையைவதக்கிச் சாறுபிழிந்து அதில் சீரகமுங் கடுகுரோகணியுஞ் சமமாய் முலைப்பாலிலரைத்துக்கலக்கிக்கொடுக்க ஊதுமாந்தம் மயக்கம் வெப்புத்தீரும்.

---

## நீர்மாந்தகுணம்.

உடல்மெலிந்து குளிர்ந்து சிலிர்க்கும் வாய்நீர் சுழற்றிக் குழந்தைவாந்திபண்ணும் முலையுண்ணாது தூங்கிவிழித்துச்சிரிக்கும் வயிறுபொருமிக்கழியும் உடம்பு கைகாலில் தினவெடுக்கும் வீங்கும் தலைவலிக்கும் முகமினுக்கும் மலஞ்சிறுத்து நீர்க்கடுத்திறங்கும்.

### நிவர்த்தி.

ஈருள்ளிமூக்குரட்டை வகைக்குச்சாறுபடி-வ, விளக்கெண்ணெய்படி-வ, ஒன்றாய்க்கலந்து காய்ச்சி கொடுக்கத்தீரும்.

நொச்சி வேளை மேனி நுணா பெருந்தும்பை இவைகளினிலையைவெதுப்பிச்சாறுபிழிந் ததில் மிளகுஉள்ளிவசம்பு ஓமம் இவைகளைவறுத்தரைத்துக்கலக்கிக்கொடுக்கத் தீரும்.

நீலிவேருஞ் செவியமு மோர்நிரையாய்த் தட்டிப்போட்டுக் கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

வெதுப்படக்கி அம்மன்பச்சரிசி சங்கங்குப்பி நுணா சாறுக்கி வகைக்குச்சாறுபடி-வ, விளக்கெண்ணெய்படி-க, வசம்பு உள்ளி மஞ்சள் வகைக்குப்பலம்-உ, பொடித்தொன்றாய்க் கலந்துகாய்ச்சி மூன்றுநாட்கொடுக்கத்தீரும்.

சிற்றாமணக்கெண்ணெய் பலம்-ய, அதிற் பூரம்விராகனிடை-க, வாளம் மிளகு லவங்கம் வகைக்கு விராகனிடை-உ, இவைகளை மைபோலரைத்துப்போட்டுக்காய்ச்சி யொருதுட்டிடை மூன்றுநாட்கொடுத்துப் பத்தியம் பொரி மிளகுநீர்சாதமுங்கொடுக்கத்தீரும்.

---

## விஷமாந்தகுணம்.

மலஞ்சிக்கி வயிறுவலித்திரைந்துகழியும் நின்று நின்று சுரங்காயும் மேனிவாடும் அரையின்கீழ்க் குளிர்ந்திருக்கும் உடல் வியர்க்கும் கையிற் பிள்ளைதங்காது அடிக்கடி வாந்திபண்ணும்

### நிவர்த்தி.

நுணா நொச்சி வேளை யிவைகளின்வேர் ஓமம் பொடுதலை உள்ளி வசம்பு சமமாய்த்தட்டி வெதுப்பிக் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

---

## போர்மாந்தகுணம்.

குழந்தைபாலுண்ணுது வாந்திபண்ணும் மயங்கும் தலையையசைக்கும் மார்புதுடிக்கும் மேனிவாடும் நெற்றிநரம்பு புடைக்கும் கண்குழியும் தாகமிகும் வாயும்நெஞ்சுமுலரும்.

### நிவர்த்தி.

ஓமத்தைவறுத்துப்பொடித்து வெந்நீரிலாவது முலைப்பாலிலாவதுகொடுக்கத்தீரும்.

கோழிக்கல்லீரலிலிருக்குங்கல் நற்சீரகம் லவங்க மிவைகளை ஓர்நிரையாயறைத்து முலைப்பாலிற்கொடுக்கத் தீரும்.

உப்பைச் சட்டியில்வறுத்துக்கொட்டிப்போட்டு அதில் வேலிப்பரித்தி தும்பை வெத்திலே யிவைகளைச்சமமாய்வெதுப்பிச்சாறுபிழிந்து அதில் ஆமையோடு வசம்பு முரைத்துக் கொடுக்கத்தீரும்.

சத்திசாரணைவேரொன்று ஆமையோடு பூடு வசம்பு வகைக்குவிராகநிடை-க, அரைத்து அரைக்காற்படி விளக்கெண்ணெயிற் காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

நுணா வேலிப்பரித்தி பொடுதலே வெற்றிலே யிவைகளின் வாரடை ஆமையோடு வசம்பு பூடு ஓமம் கிராம்பு இவைகளை சமமாய்வெதுப்பி கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

வசம்பும் மயிலிறகுஞ்சுட்டசாம்பல் கிராம்பு சீரகம் நிம்பவிரை பேய்ப்பீர்க்கம்வேர் இவைகளைச்சமமாய் முலைப்பால் விட்டரைத்து அதிற்கலக்கிக்கொடுக்கத்தீரும்.

## பால்மாந்தகுணம்.

வயிறாதிப் புண்போல்நொந்து புளித்தநாற்றமாய்வயிறு கழியும் கண்குழியுஞ் செவிதாழுந் தொண்டையிற் கோழை கட்டும் கைகால்வெதும்புங் குளிரும் குழந்தைவாந்திபண்ணி பரதவிக்கும்.

### நிவர்த்தி.

பொடுதலேக்காய் இந்துப்பு வசம்பு பூடு மிளகு இவைகளை ஓர்நிரையாய்வெதுப்பி கஷாயஞ்செய்துகொடுக்க தீரும்.

## செரியாமாந்தகுணம்.

சுரங்காயும் தலைவலிக்கும் வயிறுநொந்து குழந்தை சீரியழும் மாவுகரைத்ததுபோற் கழியும் அரைக்கண் நித்திரையாய்த்தூங்கிக் கீரைத்தண்டுபோற்சோரும்.

### நிவர்த்தி.

வசம்பு சடாமாஞ்சில் உள்ளி திரிகடுகு ஓமம் கருஞ்சீரகம் ஆமையோடு இவைகளைப் பொடித்துக் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

வேலிப்பரித்தி யிலையை வதக்கிப்பிழிந்து அதில் மிளகு வசம்பு உள்ளி வெதுப்பி யரைத்துக்கலக்கி யதில் நெய் ஒரு துளிவிட்டுக்கொடுக்கத் தீரும்.

இஞ்சியும் பெருந்தும்பையுந்தட்டி எருமை வெண்ணெயில்வேகவைத்துக்கொடுக்கத்தீரும்.

ஓமம் கோஷ்டம் வசம்பு வகைக்குவிராகனிடை-க, கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

---

## கட்டுமாந்தகுணம்.

மந்தித்திரைந்து வலித்துக் குழந்தையடிக்கடியமும்மலஞ்சிக்கிவயிறுகழியும் சற்றே பாலுண்ணுந் திகைத்திருக்கும் தூக்கம்போற்சோர்ந்துவிழும் சற்றிருமல் சுரம் கொட்டாவி தலைவலி வியர்வையுண்டாகும்.

## நிவர்த்தி.

சீந்திற்றண்டு களிப்பாக்கு சிவதை கடுக்காய் சுக்கு ரோகணி இவையெல்லாமோர்நிறையாய்த் தட்டிப்போட்டு கஷாயஞ்செய்து மூன்றுதினங்கொடுக்கத் தீரும்.

சிற்றாமணக்கெண்ணெய் படி-வ, சிற்றகத்தி துளசி தகரை கழற்கொடி நொச்சி செம்முள்ளி மணித்தக்காளி சமனுயிடித்துப்பிழிந்தசாறு படி-வ, சதிர்க்கள்ளிப்பால் ஒரு காண்டி கடுகுரோகணி கடுக்காய் இருசீரகம் உள்ளி பூடுவசம்பு பூதகரப்பன்பட்டை வேளை வகைக்குவிராக்னிடை-ரு, இடித்து ஒன்றாய்க்கலந்து பதமாய்க்காச்சிவடித்துக் காலையிலொரு துட்டிடைகொடுத்து மாலையில் மிளகுசாம்பலுஞ் சுக்குங் கஷாயஞ்செய்து ஒருசங்குகொடுக்கத்தீரும்.

சதிர்க்கள்ளிப்பால் வெள்ளாட்டுப்பால் வகைக்குபடி-வ, விளக்கெண்ணெய்படி-க, திரிபலை வெள்ளுள்ளி வகைக்கு விராகனிடை-உ, பொடித்துப்போட்டுக்காய்ச்சி ஒரு காசிடை கொடுத்து விலாவிலும்பூசத்தீரும்.

## தலைமாந்தகுணம்.

உடல் ஊதிப் புண்போல்நோகும் வயிறுபொருமி வலித்துக் குழந்தை துள்ளிவிழும் ஏப்பங்கொட்டாவியிடும் கைகால்குளிரும் முகம்வியர்க்கும் தலைகனத்து வலிக்கும் நாசியில் நீர்வடியும் குளிர்சுரங்காணும்.

## நிவர்த்தி.

வெதுப்படக்கி பெருந்தும்பை வேலிப்பருத்திவெள்ளறுகு இவைகளினிலையை வதக்கிச் சாறுபிழிந்ததில் பூடு தேசாவரம் சதகுப்பை திப்பிலி வசம்பு இவைகளை ஓர் நிறையாய் வருத்து அரைத்துக்கலக்கி உள்ளுக்குங்கொடுத்துமேலிலும் பூசத்தீரும்.

---

## துலைமாந்தகுணம்.

அதிகமாய்க்குழந்தைவாந்திபண்ணும் அடிக்கடி முருக்கிக்கொட்டாவியிடும் உடம்புவியர்க்கும் முகங் கடுகடுப்பாயிருக்கும் வலிப்புக்கண்டு கால்கைவிறைக்கும்.

## நிவர்த்தி.

வெள்ளைக்காக்கணன்வேர் ஓர் பாக்களவரைத்து முலைப்பாலிற்கலந்துகொடுக்கத்தீரும்.

வசம்பு தைவேளை முடக்கொத்தான் திரிகடுகு திரிபலை அளிஞ்சிவேர் இவையெல்லா மோர்நிரையாய்த் தட்டி விளக்கெண்ணெயிற்போட்டுக்காய்ச்சி யொருதுட்டிடை உள்ளுக்குக்கொடுத்து மேலிலும்பூசத்தீரும்.

---

## சுழிமாந்தகுணம்.

சுரங்காயும் இரைப்பு சுவாசம் விக்கல் கக்கல் காணும் குழந்தைமுலையுண்ணாது நித்திரைசெய்யாது.

## நிவர்த்தி.

கோடகசாலை துழாய் ஆடாதோடை தும்பை மூதியார் கூந்தல் சங்கிலை சீந்தி சிற்றிலைச்செடி நறுந்தாளி இவைகளினிலைச்சாறும் விளக்கெண்ணெயும் சமன்கலந்து அதிற் ஜாதிக்காய் திப்பிலி காயம் கடுகுரோகணி கோரோஜனை உள்ளி

வகைக்கு ஒருகழஞ்சுபொடித்துப்போட்டுக் காய்ச்சி ஒருகா சிடைகொடுக்கத்தீரும்.

சுருள்ளிச்சாறு இண்டிச்சாறு ஆமணக்கெண்ணெய் ஓர் நிரையாய்க்கலந்து பதமாம்க்காய்ச்சிக்கொடுக்கத் தீரும்.

## விக்கமாந்தகுணம்.

சுரங்காயும் காதுங்கண்ணும்வீங்கிவற்றும் நாவுபுண்ணு கும் கைகால்நோகும் அன்னஞ்செல்லாது.

### நிவர்த்தி.

பூவரசம்பழுப்பு சங்கம்பட்டை சிந்திற்கொடி துழாய் சுக்கு ஓமம் குப்பைமுள்ளி முருங்கையீர்க்கு நீர்முள்ளிச்சா று வேளைவேர் பிரமியிலை மருட்கிழங்கு தூதுளை சிறுகுருஞ் சா சத்திசாரடைவேர் கருஞ்சீரகம் இவையெல்லாம் ஓர்நிரை யாய்த்தட்டிப்போட்டுக் கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

## மூக்குமாந்தகுணம்.

குழந்தை முக்கிமுக்கிச் சீதமுமலமுமாய்க்கழியும் உட லுருகிமெலியும் சுரங்காயும் தாகங்காணும் பின்கால்வீங்கும்.

### நிவர்த்தி.

ஓமம் திப்பிலி மிளகு உள்ளி ஆமையோடு இவைகளைஓர் நிறையாய்ச்சீலையில்முடிந்து ஒருபடி நீரிற்போட்டு வற்றக்கா ய்ச்சி அதிலந்த மருந்தை யரைத்துக் கலக்கி மூன்றுவேளை கொடுக்கத்தீரும்.

இந்தவியாதிக்குக் கஸ்தூரியெண்ணெய் கொடுக்க நன் மையுண்டாகும்.

## வாளமாந்தகுணம்.

உடல்திரைந்து வெழுத்துவற்றிக் குழந்தையுருக்கெடும் கடுப்பு வலிப்புமுதலான பலகுணங்கள்காணும்.

### நிவர்த்தி.

ஆடுதீண்டாப்பாளைச்சாறும் வேளை மணித்தக்காளி கழ ற்சி கரிசாலை துளசி நீலி இவைகளினிலைகளை யோர்நிரையாய்

ஒன்றாய்ச்சேர்த்திடித்துப் பிழிந்தசாறும்ஆவினெய்யும்வகைக்குப்படிஅரைக்கால், ஒன்றாய்க்கூட்டி அதிற் கஸ்தூரிமஞ்சள் கோஷ்டம் கரிபசீரகம் கடுகுரோகணி வகைக்கு விராகனிடை-உ, பொடித்துப்போட்டுக்கலந்து பதமாய்க்காய்ச்சி அந்திசந்தி துட்டிடைகொடுத்தால் பிணிநீங்கிப் பிள்ளைக்குயுடல் பருக்கும்.

## உளைமாந்தகுணம்.

மலசலங்கட்டி வயிறுவலித்துக் குழந்தை அலறியழுது பாலுண்ணாது மிரண்டுபார்க்கும்.

## நிவர்த்தி.

நாக்கிளாப்பூச்சி வசம்பு நிம்பவேர் உள்ளி காயம் சுத்திசெய்தவாளம் வகைக்குக்கழஞ்சு-க, அரைத்து ஒருபடிஎண்ணெயிற்போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்து ஒரு காசிடைகொடுக்கத்தீரும்.

நாக்கிளாம்பூச்சி ஈசுரமூலி வசம்பு இருசீரகம் நாரத்தம்வேர் பூடு காயம் வகைக்குப்பலம்-வ, மணித்தக்காளிச்சாறுவிட்டாட்டி ஒருபடி விளக்கெண்ணெயிற் கலக்கிக் காய்ச்சி ஒருசிறுகரண்டியளவு மூன்றுநாட்கொடுக்கத்தீரும்.

உப்பு புளிதள்ளவும் சங்கு கொடுவேலி ஆடாதோடை கொன்றை இவைகளின்வேர்இந்துப்பு காயம் புங்கின்பட்டை ஓர்நிறையாயிடித்து இரண்டுபடிதண்ணீரிற்போட்டு உழக்காய்க்காச்சிக்கொடுக்கத்தீரும்.

புல்லூரி கருப்புக்கட்டி ஓர்நிறையாயரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக்கொடுக்க உளைமாந்தை உட்சுரம் எலும்புருக்கித்தீரும்.

## அட்சரமாந்தகுணம்.

அஸ்தியிற்கனலேறி குளிர்சுரம்பேதிகாணும் உதடும்வாயும்வெடித்துப்புண்ணாகும் குழந்தையுடல்மெலியும்.

## நிவர்த்தி.

மணித்தக்காளி அகத்தி கற்றாழை ஈருள்ளி இவைகளின்சாறு விளக்கெண்ணெய் வகைக்குப் படி-க, காரை பூலா

துத்தி இவைகளின்வேர்த்தோல் வறுத்த வெந்தயம் வகைக் குப்பலம்-க, அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி உள்ளுக்குங்கொடுத்து வாய்ப்புண்ணிலும்பூசத்தீரும்.

துத்தியிலை வெந்தையம் ஆடாதோடை நுணாயிர்க்கு கஷாயஞ் செய்துக்கொள்ள ஆணயிலை வில்வயிலை தைவேளை பொடுதலை செம்முள்ளி ஆடாதோடை வகைக்குச் சாறுபடி-க, அவிரிச்சாறு படி-அரைக்கால், அரத்தை கடுகுரோகணி வகைக்கு விராகனிடை-க, கடுக்காய் விராகனிடை-ரு, அக்கிராகாரம் வெளிச்சிப்பிசன்-கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் வகைக்கு விராகனிடை-உ, ஈருள்ளிச்சாறு விளக்கெண்ணெய் வகைக்குப்படி-க, பேய்க் குமட்டிக்காய்ச் சாறுபடி-அரைக்கால், இவைகளை ஒன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சி ஒரு சிறுகரண்டிவீதம் மூன்று நாள் உப்பு புளி தள்ளிப் பத்தியமாய் கொடுக்கத் தீரும்.

## தோஷமாந்தத்திற்கு.

முருங்கைப்பட்டை கோழிமுட்டை வெள்ளைக்கரு வெள்ளுள்ளி வேப்பெண்ணெய் ஓர்நிறையாய் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி யுடம்பிலும் நாவிலும் தடவத்தீரும்.

ஈருள்ளியும் முடக்கொத்தானும் வெதுப்பிப் பிழிந்த சாறு மூன்று காசிடைகொடுக்கத் தீரும்.

## மாந்ததோஷம் வலிப்பு மலக்கட்டுக்கு.

முடக்கொத்தானிலை மூக்கரைசாரணைவேர் இலைகொழுந்து குப்பைமேனியிலை இவைகளைச் சமமாயரைத்து விளக்கெண்ணெயிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சிப் பிள்ளையின் வயதுக்குத் தக்கபடி கொடுக்கத் தீரும்.

## மாந்தம்பாலகிரியைக்கு.

வேலிப்பருத்தி யொருபிடி சுக்கு சடாமாஞ்சி விளாவசம்பு பூடு மிளகு ஆமையோடு ஓமம் சீரகம் ஓர் நிறையாயொரு

படி தண்ணீரிற்போட் டெட்டொன்ருய்க் காய்ச்சி ஒருசங்கு கொடுக்கத்தீரும்.

## மாந்தம் வயிற்றுப்பொருமலுக்கு.

வேலிப்பருத்தியிலையை வதக்கிச் சாறுபிழிந் ததில் ஓமம் வசம்பு ஓர்நிரையாய் வெதுப்பிப் பொடித்துப் போட்டொரு சங்கு கொடுக்கத்தீரும்.

வறுத்த ஓமம் விராகனிடை-க, குப்பைமேனிவேர்ப் பட்டைபலம்-உ, அரைப்படி தண்ணீரிற்போட்டு வற்றக்காய்ச்சி யொருசங்கு கொடுக்கத்தீரும்.

## மாந்தம் பொருமல் வலி செரியாமாந்தத்திற்கு.

வேலிப் பருத்திலைச்சாறுபடி-அரைக்கால், வசம்பு திரிகடுகு கோரோசனை வகைக்கு விராகநிடை-உ, வேலிப்பருத்திகொழுந்து விராகனிடை-ச, இவைகளை யரைத்துச் சாற்றிற்கலக்கி முரித்துகொடுக்கத் தீரும்.

பெருந்தும்பை வெதுப்பட்டக்கி பொடுதலை பிரமி வேலிப் பரித்தி துளசி துத்தி அகத்தி இவைகளி னிலைகளை ஓர் நிறையாயிடித்துப் பிழிந்த சாறுபடி-வ, பச்சமஞ்சட்சாறு படி-காணி, விளக்கெண்ணெய் படி-௨, ஒன்ருய்விட்டு அதில் ஓமம் ஆமையோடு சுட்டசாம்பல் உள்ளி வசம்பு வகைக்குப் பலம்-வ, இடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி யொருதுட்டிடை யெண்ணெயிற் பொரித்த வெங்காரம் பெருங்காயம் வகைக்கொருபணவிடைமத்தித்து மூன்றுநாட்கொடுக்கதீரும்.

## மாந்தங்களுக்குப் பொதுப்பிரயோகம்.

சிறுதேக்கு வாய்விளங்கம் வால்மிளகு கடுகுரோகணி சுக்கு ஏலம்திப்பிலி இலவங்கம் தான்றி தக்கோலம்போஸ்துக்காய் வகைக்குப்பலம்-வ, இடித்திரண்டுபடி தண்ணீர்விட்டு எட்டொன்ருய்க்காய்ச்சி மூன்று தினங்கொடுக்க கிராணி மாந்தம் சுரக்கட்டி விஷதோஷங்கள் இசிவு மாந்தம் சோகை காமாலை சுரம் கோழை கொட்டாவி பொருமல் தும்மல் பித்தகணம் பாண்டு தீரும்.

அவித்தூத்தின விளக்கெண்ணெய் தகரைச்சாறு வகைக்குப்படி-க, நாயுவி தைவேளை நாய்வேளை கொழுஞ்சி மூக்கரைச்சாரணை யிவைகளின்வேர் வகைக்கொரு எலுமிச்சங்காய்ப்பிரமாணம், வசம்பு ஓமம் கஸ்தூரிமஞ்சள் வாய்விளங்கம் வகைக்குப்பலம்-உ, வெள்ளுள்ளிபலம்-உ, கருஞ்சீரகம் வெந்தயம் கடுகுரோகணி வகைக்குப்பலம்-க, இவையெல்லாமரைத்துக்கலந்து பதமாய்க் காச்சி வடித்துக்கொண்டு. பிள்ளையின்வயதுக்குத் தக்கதாய்க்கொடுக்கத் துட்டுமாந்தம் கிரிமி சுழிகணம் வாயுகாச்சல் நளிர்மாந்தம் பிரளிதீரும் தாய் உப்புப்புளிதள்ளிப் பத்தியமாயிருக்கவேணும்.

கோரோஜனை கோஷ்டம் அதிமதுரம் சீரகம் திப்பிலி தேவதாரம் சந்தனம் ஏலம் மாசிக்காய் வெந்தயம் சுக்கு வெள்ளுள்ளி கஸ்தூரி வசம்பு ரோகணி பச்சைமூங்கிற்றூல் வகைக்குவிராகனிடை-க, வெதுப்பிப்பொடித்துச் சங்கங்குப்பிச்சாற்றிலரைத்து ஒருபடி விளக்கெண்ணெயிற்கலக்கி மெழுகுபதமாய்க்காச்சிக்கொடுக்க மாந்தம் வயிற்றுப்பிசம் சுழிமாந்தம் நாவரட்சி கணம் குளிர்காச்சல் இரத்ததொந்தசுரம் முக்குகணம் கிரிச்சினம் பக்ஷிதோஷம் பழங்காச்சல் முதலானதுகள்தீரும்.

பொடுதலை மா புளி வேம்பு நுணா வேலிப்பருத்தி நொச்சி இவைகளினீர்க்கு வகைக்குப்பிடி-க, வெள்ளுள்ளி திப்பிலி ஓமம் வகைக்குக்கழஞ்சு-க, இடித்தொருபடி தண்ணீரிற் போட்டுக் கியாழஞ்செய்து ௩ - நாட்கொடுக்க ஊதுமாந்தம் போர்மாந்தம் செரியாமாந்தம் கட்டுமாந்தம் சத்திமாந்தம் நீங்கும்.

## கணவகுப்பு.

மாந்தமுதிர்ந்து வாதகணம் பித்தகணம் சேஷ்மகணம் மாந்தகணம் நீர்க்கணம் பிரளிக்கணம் சூலைக்கணம் சுழிக்கணம் மகரகணம் ஊதுகணம் வரட்கணம் கொதிப்புக்கணம் வீக்ககணம் பிறக்கணம் ஆமகணம் தேரைக்கணம் முக்குக்கணம் மூலக்கணம் போர்க்கணம் இரத்தகணம் விஷமாந்தகணம் ஊதுமாந்தகணம்அந்தகக்கணம்மந்தாரகணம்எரிகணம் என விருபத்துமூன்று கணங்கள் பன்னிரண்டாண்டுமட்டுங் குழந்தைகட்குவரும்.

### வாதகணத்தின் குணம்.

உடல்கனத்துக் குழந்தைபுகைந்திருமும் இரைப்பு நாவரட்சி தாகம் சுரம் பசி மந்தம் நீர்சுருக்குக் காணும் மலங் கழியும்.

### பித்தகணத்தின் குணம்.

குழந்தை மஞ்சட்போற் கழியும் நாக்கும் கடைவாயும் புண்ணாகும் உடலெரிச்சல் சுரம் தலைகிறுகிறுப்பு மயக்கங் காணும்.

### சேஷ்மகணத்தின் குணம்.

உடம்பிற்றினவு சொரி கைகாலில்வீக்கம் வாய்நாற்றம் வெப்பு இருமல் கோழை ஆறுத்நவனங்காணும் கீழ்வாயுமேல்வாயும்வெடித்துப்புண்ணாகும்.

### இவைகட்கு நிவர்த்தி.

சிறுபுள்ளடி கழற்கொழுந்து அவிரி சாணைக்கி பொடுதலை வகைக்குஒருபிடி நையநறுக்கி நல்லெண்ணெயிற்போட்டு வெயிலில்வைத்து உள்ளுக்குங் கொடுத்து மேலினும் பூசத் தீரும்.

வில்வம் அவுரி ஈருள்ளி கடுக்காய் இவைகளைத்தட்டி விளக்கெண்ணெயிற்போட்டுக்காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

பொன்னாங்காணிவேர் புளியீர்க்கு வேப்பீர்க்கு வகைக்குஒருபிடி, கோழியவரைவேர்பலம்-உ, நறுக்கி விளக்கெண்ணெயிற்போட்டு சூரியபுடம்வைத்துக்கொடுக்கத்தீரும்.

கடுக்காய் கருஞ்சீரகம் கடுகுரோகணி காட்டுமல்லிகை இண்டிலை ஈருள்ளி உசிலிலை யிவைகளைத்தட்டி விளக்கெண்ணெயிற்போட்டுகாய்ச்சி முலைப்பாலிற்கலந்துகொடுக்கதீரும்.

கோஷ்டம் சண்பகப்பூ வெண்காயம் அவுரி நிலக்குமிழ் கடுகுரோகணி லாமிச்சு கிராம்பு இவைகளை ஓர் நிரையாய்த் தட்டி நல்லெண்ணெயும்நெய்யும்ஒன்றாய்க்கலந்து அதிற்போட்டு பதமாய்காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

### கணமாந்தகுணம்.

பாலன்தேகமிளைக்கும் பொருமல் வாந்தி வாய்நீர் தலைசுழற்றல் சோபதாப மசதிகாணும் வயிறுயிறைந்து பாசிபோற்கழியும் விழிசுழலும் நாவுலரும்.

## நிவர்த்தி.

நொச்சி துளசி மொசுமுசிக்கை வகைக்குஒருபிடி யிலை யைபிட்டவித்துச் சாறுபிழிந்து ஓருசங்குகொடுக்கத் தீரும்.

புங்கு புளி நொச்சி மா வேம்பு வேலிப்பருத்தி பொடுதலை கருவேப்பிலை நாரத்தை சங்கு அவிரி பொன்னுவரை இவைகளின்யிலை ஈர்க்குவகைக்குஒருபிடி சட்டியிற்போட்டுகடுகுரோகணி இந்துப்பு ஓமம் இவைகளைச் சீலையில் முடிந்துப் போட்டு ஒருபடிதண்ணீர்விட்டு வற்றக்காய்ச்சிவடித்துஅதில் ஷைமருந்தை அரைத்துக்கலக்கிக்கொடுக்கத்தீரும்.

## ஊதுமாந்தகணத்தின் குணம்.

குழந்தையுடல் கண்கால்வீங்கும் நாவு புண்ணாகும் சுரங்காயும் அன்னந்தண்ணீர்செல்லாது கால்கைசோரும் சுவாசம் மிகும்.

## நிவர்த்தி.

குப்பைமுள்ளி நீர்முள்ளி கரிப்பான் கரந்தை மாதுளம் பழம் வல்லாரை வட்டத்திருப்பி பற்பாடகம் ஓரிலைத்தாமரை தாமரைக்கிழங்கு செந்தாமரை கண்டங்கத்திரிசெங்கழுநீர்க்கிழங்கு சூரத்தாவரை முருக்கு இவைகளின்சாறு தேங்காய்ப்பால் வகைக்குப்படி-வ, விளக்கெண்ணெய்படி-க, ஒன்றாய்க்கலந்ததில் இண்டவேர் காயம் வசம்பு ஏலம் வெப்பாலையரிசி முத்தக்காசு விளாம்பிசின்வாகைப்பிசின் மதுக்காரைபிசின் இலவம்பிசின் செங்கத்தாரிப்பட்டை மாசிக்காய் கடுக்காய் அதிவிடையம் வால்மிளகு சாதிப்பத்திரி வகைக்குப்பலம்-வ, இடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்துக்கொண்டு ஒருதுட்டிடையாய் மூன்றுவேளை உப்புப் புளிதள்ளிக் கொடுக்கத்தீரும்.

நாய்வேளைவேர் கரிப்பான்சாற்றிலரைத்து முலைப்பாலிற்கலக்கிக்கொடுத்து நீர்முள்ளிச்சுட்டசாம்பலை கரிப்பான்சாற்றிற்கரைத்து மேலிற்பூசிவைத்திருந்து மாலையில் வெந்நீரில் ஸ்நானஞ்செய்விக்கத்தீரும்.

## நீர்கணமாந்தம்.

குழந்தையிருமும் மூக்கில்நீர்வடியும் இடையில்சுரங்காயும் வயிறுபொருமியிரைந்து பலவிதமாய்க்கழிச்சல் தலைப்புரட்டல் மயக்கங்காணும் உடம்பு முகம் கண் சோரும்.

## நிவர்த்தி.

அதிமதுரம் செண்பகப்பூ ஏலம் கோரோசனை சாத்திரபேதி வெட்டிவேர் கோஷ்டம் மாசிப்பச்சைஇலாமிச்சம்வேர் சமன்கூட்டி ஆதண்டைச்சாற்றால் ஒருசாமமரைத்து குன்றிபிரமாணம் உண்டைசெய்துகொண்டு ஒருண்டையை முலைப்பாலிற்கொடுக்கமாந்தமெட்டும் குடற்படுவன் நீர்ப்பாடுகெர்ப்பப்பாடு நாவரட்சிசுரம் குலையெரிவு வெப்புதோஷந் தீரும்.

## சிங்கிமாந்தகணத்தின்குணம்.

## தேவிஷ்மாந்த கணம்.

உந்தியிற்கனலேறி யீரல்வெந்து புண்ணாய் உடலாதியந்தமும்தீய்ப்போற்காயும் சுவாசம் மேல்நோக்கி இளைக்கும் குழந்தைதிக்குமுக்காடி மயங்கும்.

## நிவர்த்தி.

அதிமதுரம் கோஷ்டம் ஏலம் கோரோசனை சாஸ்திரவேதி சண்பகப்பூ மாசிக்காய் இலவங்கப்பூ வகைக்குப்பலம் -வ, கல்வத்திலிட்டு வெட்டிவேர் மாசிப்பத்திரி கருந்துளசி இலாமிச்சு இந்தநால்வகைமூலிகைச்சாற்றால் இரண்டுசாமமரைத்துக் குன்றிபோலுண்டைசெய்து நிழலிலுலர்த்திக்கொண்டு மாசிப்பத்திரிக்கஷாயத்தில்ஒருண்டைகொடுக்கத்தீரும் இலவங்கப்பூக்கஷாயத்திலிடமாந்தசுரம்வாந்திமாந்தந்தீரும். முலைப்பாலிலிட குடற்படுவன் நீர்ப்பாடு மாந்தம் கரப்பன் நாவரட்சி வயிற்றெரிவு அன்னவிடாய் சுரமாந்தம் உப்புசம் யிருமல்தீரும்.

## நீர்கணத்தின் குணம்.

சுரம்விட்டுவிட்டுக்காயும் மிகுந்ததாகம்வியர்வைகாணும் கண்குழியும் நாக்கு வாய் வெடித்துப்புண்ணாகிவரளும் தண்ணீர்போற்கழியும் தலைசுழலும் வயிறுநோகும் கைகால்சோர்ந்துகுளிரும் முகங்கால் புறங்கை மினுமினுப்பாயிருக்கும்.

## நிவர்த்தி.

சாரணைக்காய் மூக்குரட்டைக் காய் பொடுதலைக்காய்திரிகடுகு துளசி சீரகம் ஓர்நிறையாய்த் தட்டிப்போட்டுக்கஷாயஞ் செய்து கொடுக்கத் தீரும்.

## சுழிகணத்தின் குணம்.

நளிர்சுரம் சுவாசங்காணும் கண்பஞ்சடையும் உச்சி குழியும் நெஞ்செரியும் உடல்நொந்து குழந்தையலரும் வேறு சுவாசம் இருமல்காணும் முகம் மார்பு புடைத்துக்காணும் வயிறு ஈரல்நெஞ்சு தொண்டை நாவு வெந்து புண்ணாகும் குழந்தை முலையுண்ணாது அலறியழும் கால்கைகுளிரும் வயிறு பொருமும் சுரங்காயும் கண் சொருகும் நாவு வரளும் நெஞ்சிற் கபங்கட்டி இருமல் யிளைப்பு மயக்கங்காணும் மார்பு சுழியாய்வாங்கும் வாயில்நுரைதள்ளும் வாந்திபண்ணும் சுரங்காயும் கழியும் முகம் மஞ்சட்போலிருக்கும் தலைநோகும்.

## நிவர்த்தி.

நுணா சங்கு இண்டு பூடு பொடுதலை செம்முள்ளி இவைகளின்சாறும் நெய்யும் ஒன்றாய்க்கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொடுக்கத் தீரும்.

நந்தியாவட்டம் நாய்த்துளசி சிவதை காட்டுமல்லிகை துளசி தூதுளை இவைகளின்வேரரைத்து வகைக்குப் புன்னைக்காயளவு, கண்டங்கத்திரி தூதுளை சின்னி மணத்தக்காளி கொட்டாங்கரந்தை குப்பைமேனி கோழியவரை சமனாயிடித்துப் பிழிந்த சாறுபடி-உ, ஒருபடி விளக்கெண்ணெயிற்கலந்து மெழுகுபதமாய் வடித்து ஒருதுட்டிடை பத்தியமாய்க் கொடுக்கத் தீரும்.

கற்கடகசிங்கி சீந்தி சீரகம் வில்வவோடு அதிவிடையம் கடுகுரோகணி கண்டங்கத்திரி மொசுமுசுக்கை முள்ளி தூதுவளை திப்பிலி ஓர் நிறையாய்த் தட்டி தண்ணீரிற் போட்டுக் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

## சூலிக்கணத்தின் குணம்.

நெஞ்சு வாய் தொண்டை நாவுவெந்து புண்ணாகி இருமல் சுவாசம் வயிற்றுப்பொருமல் கண்டு குழந்தை முலை யுண்ணாது முகம் நாறும்.

## நிவர்த்தி.

துளசி நிலத்துளசி கஞ்சாங்கோரை மாசிப்பத்திரி வில்வம் உள்ளி இவைகளின்சாறு வகைக்குப் படி-அரைக்கால், விளக்கெண்ணெய் படி-வ, திரிகடுகு விராகனிடை-உ, வறுத்துப்பொடித்து ஒன்றாய்க்கலந்து அதில்தேன்விராகனிடை-உ விட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து இரண்டு விராகனிடையாய்க் கொடுக்கத்தீரும்.

---

## மகாகணத்தின் குணம்.

முகம் புறங்கால் புறங்கை மினுக்கும் விழிவெளுக்கும் உடல்வெதும்பும் நாவு உதடுபுண்ணாகும் குழந்தை மயங்கும்.

## நிவர்த்தி.

சிறுகீரைவேர் விஷ்ணுகாந்தி கீழ்க்காய்நெல்லி சிறுபூளை வெதுப்படக்கி சிந்தி ஆடாதோடை இவைகளை ஓர் நிறையாய்நறுக்கிச் சட்டியிற் போட்டு இளம்வறுப்பாய்வறுத்துத் தண்ணீர்விட்டுக் கஷாயஞ் செய்துக் கொடுக்கத்தீரும்.

---

## பிரளிக்கணத்தின்குணம்.

வயிறுபொருமி யேப்பமுண்டாகும் உடல் புண்போல் நொந்து குழந்தை துடித்தேங்கியழுதலறும் மாப்போல் மலங்கழியும் வேறுமலங்கட்டி வயிறுபொருமி யடிக்கடி முக்கும் குடலைப்புரட்டிவலிக்கும் முலையுண்ணாது வாயுலரும் மேல்மூச்சு இளைப்புக்காணும் முத்துபோல் மூக்கில்நீர்வடியும்முகத்தில் மஞ்சள்மணக்கும்.

## நிவர்த்தி.

அவித்தாத்தின சிற்றாமணக்கெண்ணை படி-க-ல், ௬-பேய்க்குமட்டிக்காயும், உ-படி வெங்காயமு மரிந்துபோட்டுக் கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் வகைக்குப்பலம்-மாகாணி, கடுகுரோகணி பலமரைக்கால், இவைகளைப் பொடித்துச்சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி ஒருதுட்டிடை கொடுத்துப் பத்தியம் சுடுகஞ்சி கொள்ளத்தீரும்.

## பிரக்கணத்தின்குணம்.

வயிறுபொருமி பசுமையாயும் தோய்ந்த தயிர்போலும் கழியும் தூக்கமிகும் பாலருந்தி வாந்திபண்ணும் சுரங்காயும் விழிசொருகும் குழந்தை கைகால் சில்லென்றிருக்கும் தலையைப்புரட்டும்.

## நிவர்த்தி.

வல்லாரை கோழியவரை கஞ்சாங்கோரை ஜானகிப்பூடு வேளை ஒற்றைப்பேய்மிரட்டி இரட்டைப்பேய்மிரட்டி துடரி சிறுபுள்ளடி இவைகளை ஓரளவாயிடித்துப் பிழிந்தசாறு படி-க, விளக்கெண்ணெய்படி-க, ஒன்றாய்க்கலந்ததிற் காயம் வெள்ளுள்ளி கருஞ்சீரகம் வசம்பு வகைக்கொருகழஞ்சு பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து மூன்றுநாட்கொள்ளத்தீரும்.

## வரட்கணத்தின் குணம்.

சரீரமெல்லாம் வெதும்பும் நெஞ்சுதுடிக்கும் குழந்தை புகைந்திருமும் நாவுகருக்கும் வயிறிரையும் வேறு நாக்கில் மஞ்சளாயும் வெண்மையாயும் முட்களுமதினடுவில் மூன்று வெடிப்புந் தோன்றும் இருமல் சளியும் மிகுந்த தூக்கம் மயக்கங்காணும் முகமஞ்சட் பூத்திருக்கும் உடல்வற்றும்.

## நிவர்த்தி.

ஆமணக்கெண்ணெய் ஆவின்பால்வகைக்குப்படி-க, கீழ்க்காய் நெல்லிச்சாறுபடி-அரைக்கால், அதிமதுரம் கடுக்காய் தான்றிசுக்கு விஷ்ணுகரந்தைவேர் துளசி தூதுளை வகைக்குப்பலம்-கால், இளநீர் விட்டரைத்துச் சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி இரவிற் சோறுண்டதின்பின் ஒருகரண்டி யெண்ணெயையுண்டுறங்கக் காலையில் வயிறுகழியும் அப்பால் இந்த எண்ணெயைக் காசிடையாய்ச் சாப்பிட்டுவரத்தீரும்.

முள்ளிவேர் செவ்வள்ளிக்கிழங்கு தண்ணீர் மீட்டான் மொசுமுசுக்கை தூதுளை கண்டங்கத்திரி கம்பிப்பிசின்கருஞ்சீரகம் நற்சீரகம் திருகுகள்ளிவேர் மணித்தக்காளி பூடு வசம்பு வகைக்குவிராகனிடை-க, விளக்கெண்ணெயிற் போட்டுப் பதமாய்க்காய்ச்சிஉள்ளுக்குகொடுத்து மேலிலும்பூசத்தீரும்.

## கொதிப்புக்கணத்தின்குணம்.

நெஞ்சும் விலாவுங்கொதிக்கும் நெற்றிவியர்க்கும் பஞ்சுபோற் கண்வெளுக்கும் இருமல் தலைவலிகாணும் குழந்தை குரல்கம்மும்.

## நிவர்த்தி.

ஆமணக்கெண்ணெய் எலுமிச்சம்பழம் இலந்தை ஈருள்ளி வகைக்குச்சாறுபடி-வ, கருஞ்சீரகம் பலம்-வ, கற்றாழஞ்சோறு பலம்-க, ஒன்றாய்க்கலந்து காய்ச்சி கற்றாழஞ்சோறு சிவந்த பதத்தில்வடித்து அந்திசந்தி காற்கரண்டிவீதங் கொள்ள கணை-டூஅ, அத்திசுரம் அத்திவெட்டைமேகசுரம் பித்தவெட்டை தீரும் சிறியோர்க்கும் பெரியோருக்குமுபயோகப் படுத்தலாம்.

## அந்தககணத்தின்குணம்.

மூளையிற்கனலேறி யுடல்வெதும்பும் நாவுலரும் விழிவெளுக்கும் முகம் மஞ்சணிறமாய் மினுக்கும்.

## நிவர்த்தி.

சிறுகீரை காணி பூலா அவிரி இவைகளின்வேர், தேற்றுவிரை கடுக்காய் வகைக்குப்பலம்-க, அரைத்து ஆவின்வெண்ணெயில்வேகவைத்து வடித்து மூன்றுநாட் கொடுத்து ஷை மருந்துகளை முலைப்பாலிலரைத்துத் தலையிற்பூசிவரத் தீரும்.

## மந்தாரகணத்தின் குணம்.

வயிறூதி சுரம் மயக்கம் சுவாசங்காணும்.

## நிவர்த்தி.

நாயுருவி கரசலாங்கண்ணி வல்லாரை கவுதும்பை கண்டங்கத்திரி நொச்சி இவைகளின்சாறு வகைக்குப்படி-வ, விளக்கெண்ணெய்படி-க, வெள்ளுள்ளி திரிகடுகு திரிபலை வகைக்குப்பலம்-க, இலவங்கப்பூ வசம்பு வகைக்கு விராகனிடை-உ, பொடித்துப் போட்டு சிவந்தபதமாய் காய்ச்சிவடித்து கொடுக்கத்தீரும்.

## எரிகணத்தின்குணம்.

உடலாதியந்தமும் எரியும் வாய்வழி சுவாசம்போகும் வாய்நீர்வடியும் குழந்தையலறியழும் நித்திரைகொள்ளாது.

## நிவர்த்தி.

தென்னங்குரும்பை தகரை வகைக்குச்சாறு படி-வ, பழம்பாசி குமரி மஞ்சணத்தி ஈருள்ளி இவைகளின்சாறுவிளக்கெண்ணெய் வகைக்குப் படி-உ, ஏலம் இலவங்கப் பட்டை கோஷ்டம் நற்சீரகம் சந்தனம் அதிமதுரம் வகைக்குக் கழஞ்சு-உ, பொடித்து ஒன்றாய்க்கலந்து பதமாய்க்காய்ச்சி ஒரு காசிடை கொள்ளத்தீரும். மற்றகணைகளுந்தீரும்.

—oo:✱:oo—

## ஆமகணத்தின்குணம் இதுவேசீதகணம்.

சாமந்தோறு முடல் வெதும்பி நாளுக்குநாள்தேகம்வற்றும் தாகமிகும்பசிமந்திக்கும் வயிறுமொருமியிரைந்துகழியும் சுவாசம்மிகும்கால்குளிரும் குழந்தைகண்விழியாது அயரும்திடுக்கிட்டெழுந்துசீறியழும்மூக்குயரும்புருவஞ்சுழிக்கும்.

## நிவர்த்தி.

இண்டம் வேர்த்தண்டுச் சாறுபடி-க, குமிழ் மாசிப்பத்திரி புங்கு நிலத்துளசி உள்ளி முடக்கொத்தான் தூதுளை நுணா வல்லாரை கஞ்சாங்கோரை இவைகளின்சாறுவகைக்குப் படி-வ, விளக்கெண்ணெய் படி-க, ஒன்றாய்க்கலந்ததிற் ஜாதிக்காய் ஏலம் கிராம்பு கடுகுரோகணி கடுக்காய் வால்மிளகு ஓமம் வசம்பு சுக்கு வகைக்குப்பலம்-க, வறுத்துப் பொடித்துப்போட்டு பதமாய்க்காய்ச்சி வடித்தொரு கரண்டிவீதம் அஞ்சுநாட் கொடுக்கத்தீரும்.

வேலிப்பரித்தி கோழியவரை கிளுவை பொடுதலை கள்ளி சிவதை இவைகளின்வேர் வெளிச்சிப்பிசின் வசம்புஉள்ளி கடுகுரோகணி சீரகம் கரியசீரகம் வகைக்கொருகழஞ்சு தட்டி ஆமணக்கெண்ணெயும் வெள்ளாட்டுப் பாலுமொன்றாய்க் கலந்து அதிற்போட்டுக் காய்ச்சி வடித்து முலைக்காம்பிற் றடவி குழந்தைக்கு முலைகொடுக்கத்தீரும்.

—oo:✱:oo—

## நீராமகணத்தின் குணம்.

தண்ணீருஞ் சீதமுமாயும் பச்ச மஞ்சட்போலும் குழந்தை கழியும் கண்ணில் நீரும் பீளையும் வடியும் மயக்கம் கடும்புங்காணும்.

## நிவர்த்தி.

எலுமிச்சங்காய்ப் பிரமாணம் ஆவின் வெண்ணெயைச் சட்டியிலுருக்கி மணித்தக்காளி கொட்டைப்பாக்களவு அரைத்துப் போட்டெரித்து பதத்திலிறக்கி ஒரு காசளவு ஐந்து நாட் கொடுக்கத் தீரும். பெரியபிள்ளைகட்கொரு துட்டிடை கொடுக்கவும்.

## பேராமகணத்தின் குணம்.

கைகால் குளிரும் கண்வளையமாகும் சுரங்காயும் குழந்தை வாந்திபண்ணும் திடுக்கிட்டேங்கும் வயிறு பொருமிக் கழியும் சோரும் முலையுண்ணாது சீறி வெருவிப் பார்க்கும்.

## நிவர்த்தி.

தும்பைபொடுதலை கொழுஞ்சி இவைகளின்வேர் திப்பிலி சீரகம்ஓமம் இந்துப்பு ஓர்நிரையாய் நாழி ஆவின்மோரி லரைத்துக் கலக்கிக் காய்ச்சிக்கொடுக்க வாயுபேராமகணந்தீரும்.

## முக்குக் கணத்தின் குணம்.

குழந்தையடிக்கடி வாந்திபண்ணும் முலையுண்ணாதுசோரும் மலத்திலிரத்தம்விழும் நாக்குவேகும் சுரம் தலைவலி நடுக்கம் வாந்தி நாவரட்சி தாகங்காணும் சந்துப்பொருத்துகள் உளையும் முக்கிச் சீதமுமலமுமாய்க் கழியும் ஆசனவாய்க்கடுத்துத் தீப்போலெரியும் அடித்தள்ளும் மேனி கருத்து வற்றும்.

## நிவர்த்தி.

குமரிச்சாறு முலைப்பால் வகைக்குப்படி-வ, எலுமிச்சம் பழச்சாறு படி - ஹ, விளக்கெண்ணெய் படி - க, வில்வம் லாமிச்சு விஷ்ணுகாந்தி முத்தக்காசு ஓரிலைத்தாமரை முருங்கைவித்து துளசிவித்து கோங்கிலவம்பிசின் ஆவரைப் பிசின் கோஷ்டம் அதிமதுரம் அக்கிராகாரம் தாளிசபத்திரி வகைக்கொரு பலம் வறுத்திடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து ஒரு துட்டிடை மூன்றுநாட் காலையிற் கொடுத்து மாலையில் இண்டந்தண்டைக் கண்டங்கண்டமாய் நறுக்கி ஊதிக்

காற்படி தண்ணீர் வாங்கி அதிற் சீரகத்தைப் பொரித்துபோட்டு வற்றவைத்து மூன்றுநாட் கொடுக்கத்தீரும்.

ஏழுதடவை கழுவின கற்றாழஞ் சோறு வெந்தயம் எலுமிச்சம்பழச்சாறு ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

## மூலகணத்தின்குணம்.

வாதபித்த மதிகரித்து குழந்தை சீதம் இரத்தமாய்க் கழியும் ஆசனங்கடுத்தலையும் காச்சல்வயிற்றிரைச்சல்விடாத் தலைவலிகாணும் முகங்கருக்குஞ் சிவக்கும் அடித்தள்ளும்.

## நிவர்த்தி.

சீரகம் அதிவிடையம் கடுக்காய் சுக்கு பரங்கிப்பட்டை கசகசா சந்தனத்தூள் சாதிப்பத்திரி நெல்லிவற்றல் சிற்றாமுட்டி செம்பரித்தி வில்வம் லாமிச்சு இவைகளின்வேர் வகைக்குப் பலம்-க, கற்கண்டு பலம்-உ, பொடித்து ஐந்துபல ஆவினெய்யிற்போட்டு லேகியஞ்செய்து பாக்களவு ஏழுநாட்கொடுக்கத் தீரும்.

பழம்பாசி சமூலம் வெள்ளாட்டுப் பாலிற் போட்டுக் காய்ச்சி வெந்தபின் வடித்து அதிலொரு எலுமிச்சம்பழம் பிழிந்துகொடுக்கத் தீரும்.

அதிமதுரம் சீரகம் ஏலம் பெருமரத்துப்பட்டை இவைகளை யோர்நிறையாய்க் கருவேலம்பட்டை கஷாயத்திலரைத்து வெள்ளாட்டுப்பாலிற் கொடுக்கத்தீரும்.

---

## ஜனங்களுக்குப் பொதுப் பிரையோகம்.

கல்நார் கிராம்பு லவங்கப்பத்திரி செவியம் திப்பிலி அதிவிடையம் தான்றி கருஞ்சீரகம் அக்கிராகாரம் கடுகுரோகணி ஜாதிக்காய் சாதிப்பத்திரி கற்கடகசிங்கி குராசானி கஸ்தூரி பூரம் சீரகம் கோரோசனை குங்குமப்பூ ஓர்நிரையாய்க்கல்வத்திலிட்டு இஞ்சி கையாந்தகரை இவைகளின் சாற்றால் வகைக்கொரு ஜாமமும் நாரத்தங்கனிச்சாற்றால் மூன்றுஜாமமுமரைத்து பயறளவா யுண்டைசெய்து முலைப்பாலிற்கொடுக்க எட்சிசீர்ப்புள் பறவைதோஷம் குளிர்சுரம் கழிச்சல் இருமல் சுவாசகாசமெட்டும் கணமாந்தம் நீங்கும்.

சாத்திரபேதி கோஷ்டம் ஏலம் இலவங்கம் சந்தனம் கடுகுரோகணி இலுப்பைப்பூ நன்னாரி லாமிச்சு வெட்டிவேர் திப்பிலி அதிமதுரம் முத்தக்காசு முந்திரிப்பழம் பேரீச்சம்பழம் ஓர் நிரையாய் கரிப்பான் சாற்றாலரைத்து கடலைப் பிரமாணம் உண்டைசெய்து முலைப்பாலிலாவது|வெந்நீரிலாவது கொடுக்க அஷ்டகணங்கள் மாந்தசுரம் தாகந்தீரும்.

ஏழுதரம் கழுவின கற்றாழஞ்சோறு ஒரு தேங்காய்ப் பிரமாணம், வெற்றையமொரு துட்டிடை, சருள்ளி பலம்-க, இவைகளை ஒருபடி விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி யொரு கரண்டிவீதங் கொடுக்க ௰அ-வகைக்கணம் வெட்டை சுரந்தீரும்.

இண்டு தூதுளை சங்கங்குப்பி வேலிப்பரித்தி பூவரசு குப்பைமேனி ஆடாதோடை சாரணை பூளா நரிப்பயற்றங் கொடி பிரமி தைவேளை கற்றாழை இவைகளின் வேர்களை இடித்துப்பிழிந்த சாறுபடி-க, விளக்கெண்ணெய் படி-உ, கருஞ்சீரகம் ஓமம் பூடு கோரோசனை செண்பகப்பூ வசம்பு சாதிக்காய் தான்றிக்காய் வகைக்குப்படி-ஹ, அரைத்துக் கலந்து பதமாய்க்காய்ச்சி ஒருகரண்டிவீதங் கொடுக்க மாந்தம்தோஷம் கணை தெக்கத்துக்கணமுந் தீரும்.

மாதுளம் சமூலமரைத்து ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணமும், சீந்திற்சர்க்கரை ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம், ஆவின்வெண்ணெய் நாலெலுமிச்சங்காய்ப் பிரமாணம், ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி யேலம் வகைக்கு விராகனிடை-க, பொடித்துப்போட்டு மெழுகுபதமாய் காய்ச்சி வடித்து ஒரு கரண்டிவீதங்கொடுக்க சகலகணம் தோஷம்வயிற்றிரைச்சல் கழிச்சல் தீரும்.

---

## கணத்தினால் இரத்தம் விழுதலுக்கு.

நிலக்குமிழ் எருக்கு விஷ்ணுகரந்தை ஆவரைகொன்றை இவைகளின் வேர்பட்டை கணம்பூண்டு அம்மான் பச்சரிசி வகைக்குப் பலம்-க, மெழுகுபோலரைத்து ஒருபடிவிளக்கெண்ணெயிற் கலந்து பதமாய்க்காய்ச்சி வடித்ததில் ஏலம் அதிமதுரம் சீரகம் வகைக்குப் பலம்-க, வறுத்துப் பொடித்துப் போட்டு வேளைக்கு ஒருகாசிடைமுலைப்பாலிற்கலந்து மூன்று நாட் கொடுக்கத்தீரும்.

## கணச்சூடுதணிய.

சிற்றாமணக்கெண்ணெய்படி-க, வல்லாரைச்சாறு படி-ு, வெந்தயம் பலம்-உ, பசுவின் பால்விட்டரைத்துக்கலந்து பதமாய்க்காய்ச்சி வடித்துச் சர்க்கரைகலந்து கொடுக்கத்தீரும்.

## கணம் இருமல் வாய்நாற்றத்திற்கு.

மணித்தக்காளி ஒருபிடி, வெந்தயம் பலம்-க, சுருள்ளி மூன்று, ஏலம் ஒருதுட்டிடை, பொன்னிறமாய்வறுத்து இரண்டுபடி தண்ணீர்விட் டொன்றாய்க் காய்ச்சி மூன்று நேரங் கொடுக்கத்தீரும்.

## மாந்தகணம் பொருமல் இருமல் கபத்திற்கு.

தூதுளை நாயுருவி கரிப்பான் வல்லாரை தும்பை நொச்சி கண்டங்கத்தரி வகைக்குச்சாறுபடி-வ, சிற்றாமணக்கெண்ணெபடி-க, இவைகளை ஒன்றாய்க்கலந்து அதில் திரிகடுகு திரிபலை வெள்ளுள்ளி வசம்பு வகைக்கு விராகனிடை-ரு, வீதம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி ஒருகரண்டிகொடுக்க தீரும்.

## பொருமல் மாந்த கணத்திற்கு.

துளசி செம்முள்ளி தும்பை கஞ்சாங்கோரை தைவேளை இவைகளினிலை நற்சீரகம் ஓர்நிரையாய்வெதுப்பிச் சாறுபிழிந்து கொடுக்கத்தீரும்.

சாரணைவேர்ப்பட்டை தேசாபுரம் ஓர்நிரையாய்க் கஷாயஞ்செய்து கொடுக்கத்தீரும்.

## கணமாந்தம் வயிற்றளவு பொருமலுக்குப் பாலசஞ்சீவி மாத்திரை.

வெள்ளைத்துத்தம் வெண்காரம்கோரோசனைகொழுஞ்சி கடுகுரோகணி வகைக்குக்கழஞ்சு-ரு, அகத்தியிலைச்சாறுவிட்டு ஒருஜாமமரைத்து சிறுபயறுபோ லுண்டைசெய்து வெந்நீரிலாவது முலைப்பாலிலாவது ஒருண்டை கொடுக்கத் தீரும்.

## தெற்கத்துக்கணமாந்தம் போர்மாந்தத்திற்கு.

வசம்பு ஓமம் வெள்ளுள்ளி காயம் வகைக்குப்பலம்-வ, தூள்செய்து அரைப்படி வேப்பெண்ணெயிற் போட்டொரு நாழிகை கொதிக்கவைத்து ஆறுநாள் ரவிபுடம்வைத்து குழந்தைகளி னிதானங்கண்டு கொடுக்கத்தீரும்.

வேப்பெண்ணெய் படி-ஒ, வேலிப்பருத்தி குப்பைமேனி வெள்ளெருக்கம்பழுப்பு இவைகளின்சாறு வகைக்குப்படி-வ வெள்ளெருக்கு நொச்சி முருங்கைஇவைகளின்பட்டைவகைக்கொருபிடி ஒருத்தலைப்பூடு பலம்-க, வசம்பு அரத்தைவகைக்கு விராகனிடை-க, இவைகளைத்தட்டி ஒன்றாய்க்கலந்துகாய்ச்சிக் கரண்டிவீதம் மூன்றுநாட் கொடுக்கத் தீரும்.

---

## வீக்கணத்துக்கு.

உள்ளி வசம்பு ஓமம் அதிமதுரம் கோஷ்டம் கிராம்புசுக்குமிளகு ஏலம் கூத்தன் கொதம்பைவேர் வகைக்கு விராகநிடை-க, பொடித்து விளக்கெண்ணெயிற் போட்டு சூரியபுடம் வைத்து சிறுகரண்டிவீதங் கொள்ளத்தீரும்.

## கணக்கடுப்புக்கு.

ஆமணக்கெண்ணெயும் நிம்பச்சாறுஞ் சமன் கலந்ததில் வெந்தையத்தை அரைத்துப்போட்டுக் காய்ச்சிக்கொடுக்கத் தீரும்.

## இரத்தங்கடுப்பு அடிப் புறப்பட்டதற்கு.

கச்சந்திருய்வேர்பொன்னாங்காணிவேர் சாரணைத்திவேர் வகைக்கு விராகனிடை-க, பூடுத்தயிலம் விட்டரைத்துக் கொட்டைப்பாக்களவு கொடுக்கத்தீரும்.

ஒருபடி ஆவின்பாலி லொருபல வெந்தயம்போட்டு வேகவைத்திறக்கி வெல்லமும் நெய்யும் விட்டுக் களிக்கிண்டி அந்திசந்தி கொடுக்கத்தீரும்.

## இரத்தசீதக்கடுப்பு பலவிதக்கழிச்சல் சுரத்திற்கு.

விருசம்பட்டை சருள்ளி பரித்திப்பிஞ்சு இவைகளையோரளவாய்ச் சாறுபிழிந்து அதில் அதிமதுரம் குப்பைக் கீரை

வேர் வெள்ளைக்கெருடன் மாதுளம்பிஞ்சு சீரகம் இவைகளை ச் சவனுயரைத்து வெள்ளாட்டுப் பாலிற் கலக்கிக் கொடுக்க த்தீரும்.

## இரத்தம் சீதம் கடுப்பு நீர்ச்சுருக்கிற்கு.

இளந் தென்னம்பூவை யிடித்துப் பிழிந்தசாறு தயிர் வகைக்குப்படி-அரைக்கால், எலுமிச்சம்பழச்சாறு ஒருபலம் ஒன்முய்க்கலந்து புளித்தள்ளி மூன்றுநாள் அந்திசந்திகொள் ளத்தீரும்.

## கிராணி கடுப்புக்கு.

எலுமிச்சம் பழச்சாற்றில் வெந்தயத்தை வேகவைத்து ண்ணத்தீரும்.

கோரோசனை சண்பகப்பூ கோஷ்டம் வெட்டிவேர் ஏலம் அதிமதுரம் சாத்திரவேதி மாசிப்பச்சை தான்றிக்காய் வகை க்கு விராகனிடை-உ, வெட்டிவேர்க் கஷாயத்திலும் முலைப்பா லிலுமரைத்துண்டைசெய்து ஷை பாலிற்கொடுக்க ஷை கடு ப்புமாந்தம் ஜன்னி கழிச்சல் பிரளி குடற்புரட்டல் வாதபித் தசுரம் உஷ்ணந்தீரும் இதின்பேர் அமிர்தாதியுண்டை.

## ஆமக்கடுப்புக்கு.

பரித்திவிரைப்பருப்பு ஜாதிக்காய் நன்னாரிவேர் வட்டத் திருப்பி சீரகம் கிராம்பு ஓர்நிரையா யரைத்து சிறுபுள்ளடிச் சாற்றிற்கலக்கிக் கொதிக்கவைத்துக் கொடுக்கத்தீரும்.

விளாம்பிசினும் உள்ளியும் அரைத்துத் தயிரிற் கொடுக் கத்தீரும்.

## இரத்தக்கடுப்புக்கு.

ஜாதிக்காய் சாதிப்பத்திரி லவங்கப்பட்டை கிராம்புமல் லிகோஷ்டம் கோரோசனை சண்பகப்பூ கார்கோலரிசி மதுர ம் சீரகம் லவங்கப்பத்திரி செங்கழுநீர்க்கிழங்கு ஏலம் வகை க்கு பலம்-வ, விளக்கெண்ணெய் பலம்-யஉ, ஆவினெய் பலம் கூ, நல்லெண்ணெய்பலம்-ரு, முருங்கை யிலைச்சாறுபலம்-யகூ,

ஷெ மருந்துகளை யரைத் தொன்றாய்க் கலந்து காய்ச்சிவடித்து ஒரு சங்குவீதம் மூன்றுநாட்கொடுக்க உதிரக்கணம் இரத்தக்கடுப்புத் தீரும்.

## சீ மூ ல த் தி ற் கு.

சென்னையுருவியிலை யொருபிடி நல்லெண்ணெய் படி-வ, கற்றாழஞ்சோறு சர்க்கரை இவையெல்லா மொன்றாய்க் கலந்து காய்ச்சிக் கொடுக்கத்தீரும்.

## இரத்தமூலவரட்கணம் ஊதுமாந்தத்திற்கு.

ஜாதிக்காய் மாசிக்காய் கிராம்பு கோரோசனை சீரகம் பூதிக்காய் திப்பிலி ஓர்நிறையாய் முலைப்பால் விட்டரைத்து மிளகுப் பிரமாண முண்டைசெய் துலர்த்தி ஷெ பாலிற்கொடுக்கத்தீரும்.

## அடித்தள்ளினதற்கு.

கரிசலாங்கண்ணியும் பழம்புளியு மோரிடையா யரைத்துப் புன்னைக்காய்ப்பிரமாணம் எட்டுநாட் கொடுக்கத்தீரும்.

சுத்திசெய்தகஞ்சா ஒருதுட்டிடை, மிளகு-உக, பூடு-உக, அரைத்துக் குன்றிபோ லுருட்டிப் பரித்தியிலை சாற்றிலாவது மாதுளம்பிஞ்சிச் சாற்றிலாவதிடத்தீரும்.

ஒருத்தலைவெள்ளைப்பூடு வசம்பு வகைக்கு விராகனிடை ரு, வீழி பொடுதலை சிறுபுள்ளடி வகைக்கொரு பிடிதட்டிக் கால்படி விளக்கெண்ணெயிற் போட்டுக்காய்ச்சி மூன்றுபோது கொடுக்கத்தீரும்.

இஞ்சியை மேற்றோலைசீவி துவாரமிட்டதிலொரு விராகனிடை பெருங்காயத்தை பொதிந்துமூடி நூலாற்கட்டித்தயிரில் வேகவைத்து எடுத்தரைத்து வேறே தயிரிற் கொடுக்கத்தீரும்.

## முக்கல்வயிற்றுக் கடுப்பின் குணம்.

மூக்கலுடன் அபானங்கடுத்து சீதரத்தம் விழும், தாதுவற்றும் தாகங்காணும் அன்னஞ்செல்லாது.

## நி வ ர் த் தி.

பரித்திப்பிஞ்சு ஜாதிக்காய் கிராம்பு அதிவிடையம் அரத்தை அசமதாகம் இலந்தைத்தம்பலம் ஓர்நிரையாயரைத்துக் கட்டித் தயிரிற் கலந்துண்ணத்தீரும்.

ஒருபடி விளக்கெண்ணெயில் வெந்தயம் நிலக்குமிழ்வேர்ப்பட்டை வகைக்குப்பலம்-ய, அரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிக்கொடுக்க உறுப்பு மூலக்கடுப்புத்தீரும்.

புழுங்கலரிசி வெல்லம் கவுதும்பை வகைக்கொருநாரத்தங்காய்ப்பிரமாணமரைத்து நல்லெண்ணெயில்வேகவைத்து மூன்றுநாள்சாப்பிடக் கடுப்பு கிராணி முக்கல்தீரும்.

ஒருசிரங்கை பெருமைத்தயிரில் ஒருகாசிடை ஒருவருஷஞ்சென்றஅவரையிலைச்சாறுவது அல்லது மிளகு தக்காளியிலைச்சாறுவது பிழிந்துகொடுக்கத்தீரும்.

## மூலரத்தகணம் விஷகணம் மாந்தத்திற்கெண்ணை.

விளக்கெண்ணெய் படி - க, கற்றாழை எலுமிச்சம்பழம் ஈருள்ளி இவைகளின்சாறு வகைக்குப்படி-வ, ஆவினெய்படி-உ, ஒன்றாய்க்கலந்ததில் கோஷ்டம் மதுரம் சண்பகப்பூ ஏலம் சன்னலவங்கம் வகைக்குப்பலம்-வ, வெந்தயம்பலம்-க, பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து ஒருகாண்டினிரைகொடுக்கத்தீரும்.

## இரத்தகணத்தின்குணம்.

குழந்தைஅடிக்கடியிருமும் கழிச்சல் இரத்தங்கடுப்புக்காணும் இடுப்புந்துடையுமுளையும் சுரங்காயும் தாகிக்கும்நாடியயரும் உடல்வாடும் அன்னஞ்செல்லாது.

### நிவர்த்தி.

ஜாதிக்காய் ஜாதிப்பத்திரி லவங்கம் லவப்பட்டை மல்லி கோஷ்டம் கோரோஜனை செண்பகப்பூ கார்கோலரிசி மதுரம் லவங்கப்பத்திரி சீரகம் செங்கழுநீர்க்கிழங்கு ஏலம் வகைக்குப்பலம்-வ, இவைகளைப்பொடித்து ஆமணக்கெண்ணெய் பலம்-யஉ, பசுவின்வெண்ணை பலம்-சு, நல்லெண்ணை பலம்-ரு, முருங்கையிலைச்சாறுபலம்-யசு, இவைகளை யொன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்வடித்து ஒருபலவீதம் மூன்றுநாட் கொள்ளத்தீரும்.

விளக்கெண்ணெய்படி-வ, கழுவினகற்றாழஞ்சோறு ஒரு விளாங்காய்ப்பிரமாணம், பேய்க்குமட்டிக்காய்-உ, ஈருள்ளிபலம்-உ, இவைகளைத்தட்டிப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து வாரத்திற்கிரண்டுதரம் ஒருதுட்டிடைகொடுக்கத்தீரும்.

---

## சுழிகணம் வரட்கணம் ஊதுகணம் மாந்தகணம் இரத்தகணமுதலானதற்கெண்ணெய்.

செப்புநெரிஞ்சி தகரை பழம்பாசி ஓரிலைத்தாமரை நன்னாரி சங்கு நொச்சி சாரணை ஆடாதோடை சிறுவழுதலை இம்பூரல் பற்பாடகம் கற்றாழை நாயுருவி சங்கங்குப்பி வேலிப்பரித்தி சீராசெங்கழுநீர் மூக்குரண்டி சிற்றாமுட்டி தூதுளை கண்டங்கத்திரி மிளகு தக்காளி யிவைகளின்வேர் வகைக்குப் பலம்-வ, மிளகு தக்காளி வல்லாரை கரிப்பான் துளசி செம்முள்ளி வில்வப்பத்திரி அகத்தி மொசுமுசுக்கை முடக்கொத்தான் சங்கு விஷ்ணுகரந்தை கருவேல் தகரை வெதுப்படக்கி பேய்மருட்டி இவைகளினிலைச்சாறு வகைக்குப் படி-மாகாணி, திப்பிலி கஸ்தூரிமஞ்சள் கடுகுரோகணி வசம்பு சீரகம் மாசிக்காய் அரத்தை வகைக்கு விராகனிடை-ரு, திப்பிலிமூலம் செவியம் சித்திரமூலம் தேசாபுரம் ஓமம் கருஞ்சீரகம் கடுக்காய் கிராம்பு சாதிக்காய் வகைக்கு விராகனிடை-க, பூடு-விராகனிடை-ரு, ஈருள்ளிபலம்-உ, இவைகளையெல்லாமரைத்து ஒருபடிசிற்றாமணக்கெண்ணெயிற்போட்டு ஷைசாறுவகைகளையுங்கலந்து பதமாய்க் காச்சிக்கொண்டு மாசமூன்றுதரம் கொடுத்து உப்புபுளிதள்ளி பத்தியமாயிருக்கத்தீரும்.

---

## சகலகணம் பிரளிக்குச் சஞ்சீவியெண்ணெய்.

விளக்கெண்ணெய் படி-க, அவிரி வேலிப்பரித்தி முடக்கொத்தான் தும்பை கவுதும்பை சடைச்சிபெருந்தும்பைகிரந்திநாயகம் செம்முள்ளி யிவைகளின்சாறு வகைக்குப்படி-வ, புளியம்பிரண்டைக்கிழங்கு கொல்லங்கோவைக் கிழங்கு பலபிள்ளைக்கிழங்கு பூடு ஈருள்ளி கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் சீரகம் வசம்பு இவைகளை வகைக்கொரு பெருமிச்சங்காய்ப்

பிரமாணமரைத்துப்போட்டு எட்டொன்ருய்க்கலந்து காய்ச்சிவடித்து ஒருசங்குகொடுக்க பிரளிகரப்பன்தீரும்.

## சுழிகணத்திற்குக் கஷாயம்.

கற்கடகசிங்கி சீந்திற்கொடி நற்சீரகம் வில்வவேர் அதிவிடையம் கடுகுரோகணி கண்டங்கத்திரிவேர் மொசுமுசுக்கை செம்முள்ளிவேர் தூதுளைவேர் திப்பிலி ஓர்நிரையா யிடித்துப்போட்டுக் கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

## கரப்பன்வகுப்பு.

வாதபித்தசிலேத்மகரப்பன் செங்கரப்பன் கருங்கரப்பன் மண்டைக்கரப்பன் அரிகரிப்பன் பொரிகரப்பன் கிரந்திசூலைகரப்பன் வாலகரப்பன் ஊதுகரப்பன் செவ்வாப்பு கொள்ளிக்கரப்பன் கட்டியொடுவீங்குகரப்பன் உதிர்கரப்பன் சட்டைதடிவெடிகரப்பன் சிங்கமுகஎரிகரப்பன் ஆககரப்பன்-18.

## விஷவாதகரப்பன் குணம்.

உடல்வெதும்பும் உளையும் பரபரெனஊறும் கைகால் அரைவயிறுவீங்கிவரண்டு வெடித்துப்புண்ணுகும்.

### நிவர்த்தி.

மிளகு பூடு வசம்பு வகைக்குவிராகனிடை-உ, ஈருள்ளிபலம்-௨, நெல்லிமுள்ளி பூவரசம்பூச்சாம்பல் வகைக்கொருபிடி இவைகளையெல்லாம் ஆடுதீண்டாப்பாளைச்சாற்றிலாட்டிகாற்படிநல்லெண்ணெயிற்போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்துப் புண்ணிற்போடநீங்கும்.

## வாதகரப்பன் குணம்.

உடல்கனத்து வெளுத்துப் பிரண்டைபோற் றடித்துக் கட்டும் கண்சிவக்கும்.

### நிவர்த்தி.

பூதகரப்பன்பட்டை பூவரசம்பட்டை நுணுவேர்ப்பட்டை இலுப்பைக்கட்டி இவைகளை யோர்நிரையாய்ச் சுட்டுச்

சாம்பலாக்கி நல்லெண்ணெயிற்குழைத்துத்தடிப்புமேற்றடவ மாறும் கொன்றைக்கொழுந்தை யரைத்துத்தடவமாறும்.

புங்குஆடாதோடைநாய்வேளை சங்கு இவைகளின்வேர் வகைக்கொருபிடி, வசம்பு உள்ளி கருஞ்சீரகம் நற்சீரகம் வெளிச்சிப்பிசின் கடுக்காய் பொடுதலைக்காய் கஸ்தூரிமஞ்சள் வகைக்குவிராகனிடை-ரு, ஈருள்ளிபலம்-ய, இவைகளைப் பொடித்து ஒருபடி விளக்கெண்ணெயிற் போட்டு சங்கங்குப்பிச் சாறுபடி-க, கூடவிட்டுச் சூரியபுடம்வைத்து ஒரு காசளவாய்க்கொடுக்க கரப்பன் கர்ப்பத்திலெட்டிய கருங்கிரந்தி செங்கிரந்திதீரும்.

## பித்தகரப்பன்குணம்.

உடம்பிற்றினவு காச்சல் தலைவலி வாந்திகாணும் நீர்ச்சிவந்திறங்கும் மலஞ்சிக்கும்.

## நிவர்த்தி.

கொடிவேலி குருஞ்சா குளப்பாலை சிவனார்வேம்பு இவைகளின்வேர் பெருமரத்துப்பட்டை வெள்ளறுகு மிளகு கருவேப்பிர்க்கு செங்கத்தாரிப்பட்டையிவைகளை ஓர்நிறையா யிடித்து தண்ணீரிற்போட்டு கஷாயஞ்செய்துகொடுக்க தீரும்.

ஷை மருந்துகளை யிடித்து வடிகட்டிச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் வெந்நீரிற்கொடுக்கத்தீரும்.

கருநொச்சியிலை ஏரழிஞ்சிப்பட்டை விஷ்ணுகரந்தை சிறுசின்னியிலை சாணக்கி சிற்றாமணக்கின்வேர் ஈருள்ளி சுட்டவசம்பு கடுகுரோகணி இவைகளைஓர்நிறையாய்த்தட்டிக்கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

செங்கத்தாரிப்பட்டை சின்னியிலை சிறுகுஞ்சாவேர்மிளகு இவைகளை ஓர்நிறையாய் விளக்கெண்ணெயிற் காய்ச்சிக் கொடுக்கத்தீரும்.

## வாதபித்த சிலேற்பனகரப்பன் ய௲-க்கும்எண்ணை.

குமரி கண்டங்கத்திரி தூதுளை செந்தொட்டி செம்முள்ளி கருநொச்சி இண்டு குட்டித்தக்காளி நிலவாகை கழற்சி

சங்கங்குப்பி சங்கு வில்வம் ஈருள்ளி இவைகளின்சாறு வகைக்குப்படி-வ, சிற்றாமணக்கெண்ணெய் படி-க, செங்கத்தாரிப் பட்டை வாதமடக்கிவேர் கடுக்காய் வகைக்குப்பலம்-உ, கருஞ்சீரகம்விராகனிடை-உ, இவைகளை யரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து ஒருகரண்டிவீதங்கொடுக்கத்தீரும்.

புங்கம்பூ புளியமடற்கிழங்கு நற்சீரகம் வசம்பு உள்ளி பாலை நன்னாரி இவைகளை ஓர்நிரையாய் ஆவின்பாலிலரைத்து விளக்கெண்ணெயிற்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

## செங்கரப்பன் குணம்.

தேகமெலியும் சிவக்கும் வெடித்துநீரோடும் தலைவலிகாணும் நீர்க்கட்டும் மரணக்குறிகள்காணும்.

## நிவர்த்தி.

பசுவினெய்படி-வ, ஆதண்டை முதியார்கூந்தல் முருக்கிலை நெரிஞ்சி முடக்கொத்தான் பூவரசின்பட்டை ஈருள்ளியோர்நிரையாய்த் தட்டிப்போட்டுக்காய்ச்சி சிவந்தபதத்தில் வடித்து ஒருகரண்டிவீதங்கொள்ளத்தீரும்.

## கருங்கரப்பன்குணம்.

உடல்வெதும்பும் பசுநரம்புதோன்றி நிறம்பேதப்படும் தேகம்பரபரத்துமுறுக்கிக் குழந்தைதுள்ளிஅழும் முலையுண்ணாது முகங்காலூதும்.

## நிவர்த்தி.

மிளகு துருசு கடுக்காய் கோஷ்டம் திப்பிலி கரியசீரகம் ஓமம் கஞ்சாங்கோரை நத்தைச்சூரி சிறியஆவரை பெரியஆவரை சிவனார்வேம்பு வேலிப்பரித்தி இவைகளின்வேரை யோர்நிரையாய்த்தட்டி விளக்கெண்ணெயிற் போட்டுப் பதமாய்க் காய்ச்சிக்கொடுக்க கரப்பன் 18-ம் நீங்கும்.

## சூலைக்கரப்பன்குணம்.

தேகமெல்லாம்வெடித்து முழங்கால் முழங்கையிற் சூலைகட்டும் முகம்வாடும்.

## நிவர்த்தி.

புங்கு சங்கு ஆதண்டை இவைகளின்வேர் அரைத்து வ கைக்கொருஎலுமிச்சங்காய்ப்பிரமாணம், அரிந்தஈருள்ளிஉழக்கு, கடுகுரோகணிபலம்-வ, முடக்கொத்தான் பலமரைக்கால், இவைகளைத்தட்டி யொருபடிவிளக்கெண்ணெயிற் போட்டுச் சூரியபுடம்வைத்துண்ண முடக்குச்சூலை புண் கரப்பான் சொரிசிரங்குதீரும்.

## ஊதுகரப்பன் குனம்.

குளிர்காச்சல் கழலைக்கட்டிகாணும் நாடோறும் பூதம் போலுடல்வீங்கும் புண்ணாகும் மூக்கரிக்கும்.

## நிவர்த்தி.

அகத்தி கர்ப்பூரவல்லி அவிரி வெள்ளறுகு சங்கு ஆடாதோடை மணித்தக்காளி ஆவரை சங்கங்குப்பி நிலக்கடம்பு கிரந்திநாயகம் நொச்சி முருக்கு ஈருள்ளி வகைக்குச்சாறுபடி வ, விளக்கெண்ணெய்ப்படி-க, மஞ்சள் மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள் சிவதை கடுகுரோகணி கருஞ்சீரகம் நற்சீரகம் திரிகடுகு திரிபலை வகைக்குவிராகனிடை-க, அரைத்துக் கரைத்துப் பதமாய்க்காய்ச்சி ஒரு கரண்டிவீதம் மூன்றுநாட் கொள்ள ஊதுகரப்பன்முதல் ௰அ-கரப்பனுந்தீரும்.

## பாலகரப்பன் குணம்.

தேகமெலியும் சந்துகால்கடுக்கும் கண்டம் வெடித்துப் புண்ணாகிக் கடிவிஷம்போல் நீர்பாய்ந்துநாறும்வேறுதேகமெல்லாம்பரபரத்துச் சொரிபோலாகிச் சாரையுடற்போற்காணும் புண்ணில் விஷஜலம் உதிரம்போல்வடியும் குலைவற்றித் திருவழியும்.

## நிவர்த்தி.

பூவரசம்பட்டைச்சாறு விளக்கெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி-க, ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக் கடுகுபதத்திற் கருஞ்சீரகம் நற்சீரகம் நார்கோலரிசி ஏலம் லவங்கம் மாஞ்சில் கரிசாலை நுணாவேர் வகைக்குப்பலம்-வ, நிழலிலுலர்த்திப்

பொடித்துப்போட்டுக்கிண்டி செய்ப்பதமாக இரக்கிவடித்து ஒருகரண்டிவீதங்கொடுத்துக் கடுகைமேலிற்பூசத்தீரும்.

கரப்பான்பண்டந்தள்ளிப் பத்தியங்கொள்ளவும்.

## அரிகரப்பன்குணம்.

யோனிலிங்க முதலான ஸ்தானங்களிற் புற்றுண்டாகிப் புண்பட்டு ஆறுமற்றசையை அரித்து உருவையழிக்கும்.

### நிவர்த்தி.

ஆரை கொட்டக்கரந்தை செருப்படை கரிசாலைபொன்னாங்காணி பேய்மிரட்டி சிறுகீரை வட்டத்திருப்பி தொட்டாரி இவைகளின்வேர், நீலி கோடகசாலை மிளகரணை வேலி பெருங்கிளா இவைகளின்வேர்ப்பட்டை, வசம்பு பசரியிலைவகைக்குப்பலம்-உ, இவைகளையிடித்துக் காற்படி விளக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிவடித்து ஒருகரண்டிவீதம் ஏழுநாட்கொள்ள அரிகரப்பன் சொரிகரப்பன் செங்கரப்பன் கருங்கரப்பன் முதலான ய அ-வகைக்கரப்பனுந்தீரும்.

எருக்கு மருக்காரை வட்டக்கிலுப்பை வேலிப்பரித்தி இவைகளின் வேர்ப்பட்டை, கடுக்காய் உள்ளி ஓர்நிரையாய் நல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி மூன்றுநாள் புண்ணின் மேற்பூசத்தீரும்.

## வரக்ஷிகரப்பன்குணம்.

உச்சிமுதல் உள்ளங்கால்வரை சிறுசிரங்குமிகுந்து வெடித்துத் தினவுஞ்சொரியுங்காணும் நித்திரைவராது.

### நிவர்த்தி.

தூதுளை ஓரிலைத்தாமரை வெள்ளெருக்கு கொடிவேலி நீலி இவைகளின்வேர் கரியசீரகம் கெந்தகம் கார்கோலரிசி ஓமம் சீரகம் வகைக்குக் காற்பலவீதங் காற்படி நல்லெண்ணெயிற்போட்டு வேகவைத்து உள்ளுக்குக்கொடுத்து மேலிலும்பூசத்தீரும்.

புங்கங்கொட்டை மரமஞ்சள் வேம்பாடம்பட்டை அவிரிவேர் துரிசி கெந்தகம் தாளகம் வகைக்குக் காற்பலமாகப்

பொடித்துக் காற்படிநல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி உடம்பிற் காலையிற்பூசி மாலையில் அரப்பிட்டுக் குளிக்கத்தீரும்.

சிறுசின்னிச்சாறு விளக்கெண்ணெய் வகைக்குப் படி-க, ஒன்றாய்க்கலந்ததில் மிளகு செங்கத்தாரிப்பட்டை சிறுகுருஞ்சாவேர்ப்பட்டை வகைக்கு விராகனிடை-ரு, அரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

அவித்தூத்தின சிற்றாமணக்கெண்ணெய் படி-க, கர்ப்பூரவல்லி சிறுசெருப்படை நரிவிட்டி ஈருள்ளி வகைக்குச்சாறு படி-க, இவைகளை ஒன்றாய்க்கலந்து காய்ச்சிவடித்து ஒருசங்குவீதங் குழந்தைகளுக்கு உள்ளுக்குக்கொடுத்து மேலிலும் பூசிவரத்தீரும்.

---

## சொரிசிரங்கிற்கு.

பூவரசம்பட்டையில் நீராகாரத்தண்ணீர்விட் டிடித்துச் சாறுபிழிந்து அரைக்காற்படிவீதம் மூன்றுநாள்உப்புப் புளி தள்ளிச்சாப்பிட்டு கெந்தகம் சித்திரமூலவேர்ப்பட்டைவகைக்குக்காற்பலம்வீதமரைத்து காற்படி நல்லெண்ணெயிற்போட்டுவேகவைத்துக் காலையில் உடம்பிற்பூசி மாலையில் அரப்புத்தேய்த்து ஸ்நானஞ்செய்யத்தீரும்.

ஏலம் மிளகு கார்கோலரிசி கெந்தகம் சூடன் பிராய்ப்பட்டை வகைக்கு ஒருவிராகனிடைவீதம் பொடித்து அரைக்கால்படி நல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி உடம்பிற் பூசி மாலையில் அரப்பிட்டுக்குளிக்கத்தீரும்.

---

## பேய்ச்சொரிக்கு.

இந்துப்பைப்பொடித்து நெய்யிற்போட்டு ரவியில்வைத்துஉடம்பிற்பூசிவைத்திருந்து மறுநாள்முழுகத்தீரும்.

சீந்திற்கொடி வேப்பம்பட்டை பேய்ப்புடல் வகைக்குப் பலம்-ய, இடித்துத் தூணிநீரிற்போட்டு எட்டொன்றாய்க்காய்ச்சிவடித்து அதில் ஆவினெய்படி-க, கூடவிட்டு திரிபலைசெஞ்சந்தனம் மரமஞ்சள் லாமிச்சம்வேர் தக்கோலம் கோஷ்டம்

தேவதாரம் மஞ்சள் வகைக்கு விராகனிடை-உ, அரைத்துப் போட்டு மூன்றுநாள்வரை உமிக்காந்தலில் வைத்திருந்து நாலாநாள் பதமாய்க்காய்ச்சிவடித்து ஒருநேரத்துக்கிரண்டுகாசிடைநெய்வீதங்கொள்ளத்தீரும்.

## சிரங்கிற்கு.

காட்டுச்சீரகம் கார்கோலரிசி கஸ்தூரிமஞ்சள் ஏலம் கடுக்காய் நீர்வெடிமுத்து சமநிடையாய்ப் பொடித்து அதற்குச் சமன் மிளகுத்தூட்கூட்டி ஊமத்தங்காய்க்குளடைத்து ஒன்றரை எருமுட்டையிற் புடம்போட்டெடுத்து ஒருபடி தேங்காயெண்ணெயில்அரைத்துப்போட்டு மூன்றுநாட் சூரியபுடம்வைத்துச் சிரங்கின்மேற்றடவத் தினவு நமைச்சல்தீரும்.

நீர்வெடிமுத்தும் சந்தனமும் ஓர்நிரையாயரைத்துச் சிரங்கிற்குப்பூச உதிர்ந்துவிடும்.

வெந்தோன்றிக்கிழங்கு கெந்தகம் வகைக்குக்காற்பலவீதமரைத்துக் காற்படி நல்லெண்ணெயிற்போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்துக் காலையிற் சிரங்கிற்பூசிவைத்திருந்து மாலையில் இலுப்பையரப்பும் வேப்பிலையும் சமமாயரைத்து உடம்பிற்றேய்த்து ஸ்நானஞ்செய்யத்தீரும்.

காத்தட்டி யிலைச்சாறும் நல்லெண்ணெயும் வகைக்குக் காற்படிவீதங்கலந்து அதிற்சுத்திசெய்தகெவுரிவிராகனிடைக, பொடித்துப்போட்டுச் சூரியபுடம்வைத்து உடம்பிற்றேய்த்து மாலையில்அரப்பிட்டு ஸ்நானஞ்செய்யத்தீரும்.

---

## சகலகரப்பன் சிரங்குக்கு மேற்பூசும் எண்ணெய்.

விடத்திலை இலைக்கள்ளி திருகுகள்ளி சதுரக்கள்ளிமாவிலிங்கு சங்கு தாழை கொமட்டி குப்பைமேனி அவிரி பொடுதலை நிலக்கடம்பு ஆமணக்கு இண்டு எருமை ஆட்டாங்கொடி நொச்சி இவைகளின்சாறு நல்லெண்ணெய்வகைக்குப்படிவ, வீதங்கலந்து அதில் சீரகம் கடுகு கோரைக்கிழங்கு குந்திருக்கும் குக்கில் திரிகடுகு தேவதாரம் கருஞ்சீரகம் வகைக்குப்பலம்-க, வீதமரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து உடம்பிற்பூசத்தீரும்.

## சிரங்குப்புண்ணுக்குக் களிப்பு.

துருசு கெந்தகம் குங்கிலியம் இவைகளை யோர்நிரையாய் விளக்கெண்ணெயிலரைத்துப்போடத்தீரும்.

---

## வாதகரப்பன்வீக்கத்திற்கு.

மூக்கரைச்சாரணைவேர் இந்துப்பு கடுக்காய் மாச்சுக்கு ஓர்நிரையாய்த் தட்டிப்போட்டுக் கியாழஞ்செய்து குடிக்கத் தீரும்.

தூதுளை சங்கு சுரக்கொடி சிறுநெரிஞ்சி நீர்முள்ளி ஈருள்ளி இவைகளை ஓர்நிரையாய்கஷாயஞ்செய்து அதில் வெண்காரத்தைப்பொரித்துப்போட்டுக் கொடுக்கத்தீரும்.

ஈருள்ளியையிடித்துச்சாறுபிழிந்து அதில் எவாச்சாரம் இந்துப்பு சீரகம் வெங்காரம் இவைகளைப் பொடித்துப்போட்டுக்கொடுக்கத்தீரும்.

மலசலங்கழன்று வீக்கம்வற்றும் ஷை மூவகையுப்பையும்பொடித்துக் கோசலத்திற் கலக்கி வடிகட்டிக் கொடுக்கத் தீரும்.

---

## மாந்தம் செவ்வாப்பு கரப்பானுக்கு.

ஜாதிலிங்கம் பூரம் ஏலம் பூங்காவி வகைக்குப் பலம்-வ, கோதும்பைக்கஞ்சிவார்த்து இரண்டுசாமம் மைப்போலாட்டிப் பயறுபோலுண்டைசெய்துக்கொண்டு இரண்டுவயசுப்பிள்ளைக்குச் சோற்றிலும் அதற்குட்பட்ட குழந்தைகட்கு மாசிப்பத்திரிக்கியாழத்திலுங்கொடுக்கத்தீரும்.

---

## சிறுசிரங்கு சொறிசிரங்கிற்கு.

கொடிக்கள்ளியைவாட்டிச் சாறுபிழிந்து வயதுக்கும்பலத்துக்குந்தக்கபடிகொடுக்கத்தீரும்.

ஒருபடி தேங்காய்ப்பாலில் துருசு அரிதாரம் கெந்தி வகைக்குஇருகழஞ்சு அரைத்துப்போட்டுக்காய்ச்சி நெய்வடித்துக் காலையில்உடம்பிற்பூசி மாலையில் அரப்பிட்டுக் குளிக்கத்தீரும்.

## காற்கடுவன் மண்டைக்கடுவனுக்கு.

ஷை வியாதி காலிலுந் தலையிலுங்கண்டிருந்தால் ஆமணக்கினிலையை இரவிற்கட்டிக் காலையிலவிழ்த்துச் சலத்தாற்கழுவியபின் அப்புண்ணில் தேங்காயெண்ணெயைத்தடவியதன்மேற்சங்கிலியைக்கருக்கிப்பொடித்துத் தூவியிடத் தீரும்.

இலுப்பைப் பட்டை பாவட்டை சதுரக்கள்ளிப் பட்டை ஈருள்ளி வசம்பு நறுக்கி விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி உட்கொள்ளத்தீரும்.

## சிரங்கு சொரிகரப்பன் ஆறாப்புண்ணுக்கு.

அரிதாரம்பலம்-வ, சேங்கொட்டை-உ௰, இவைகளைநறுக்கி ஒருபடிநல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிச் சேங்கொட்டை வெடிக்கும்பதத்திலிறக்கிவடித்து உடம்பிற் றேய்த்து மாலையிலரப்பிட்டுக்குளிக்கத்தீரும்.

கல்லுப்பு மரமஞ்சள் மிளகு கருஞ்சீரகம் வகைக்குப் பலம்-வ, வீதம்பொடித்து இரண்டுபடி தேங்காய்ப்பாலிற்போட்டுக்காய்ச்சி நெய்வடித்து உடம்பிற்பூசி மாலையி லரப்பிட்டு ஸ்நானஞ்செய்யத்தீரும்.

## கரப்பனுக் கெண்ணெய்.

செங்கத்தாரி கருநொச்சி முடக்கொத்தான் கழற்சி புங்கு சங்கு சங்கங்குப்பி கிரந்திநாயகம் சிறுசெருப்படை சிறுசின்னி முதியார்கூந்தல் உத்தாமணி கொடிவேலிவெள்ளறுகு வேம்பாடம்பட்டை சிவனார்வேம்பு சிவதை கண்டங்கத்திரி பூதகரப்பன்பட்டை சீரகம் கருஞ்சீரகம் இவையெல்லாம்ஓர் நிரையாய் விளக்கெண்ணெயிற்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக்கொடுக்க புடைக்கரப்பன் கொள்ளிக்கரப்பன் வீங்குகரப்பன் அரிகரப்பன் செங்கரப்பனுந்தீரும்.

## கபாலகரப்பனுக்குத் தைலம்.

முத்தக்காசு தூதுளை காணி சீராசெங்கழுநீர்ஓரிலைத்தாமரை சிவனார்வேம்புநிலவேம்பு குப்பைமேனிசங்குமலைதாங்கி

கொன்றை இவைகளின்வேர் வகைக்குப்பலம்-க, சுக்குமிளகு திப்பிலி கடுக்காய் இந்துப்பு கருஞ்சீரகம் வசம்பு பூடு சென்னகரப்பழம் கடுகுரோகணி வெளிச்சிப்பிசின் அதிமதுரம் வகைக்குக்களஞ்சு-க, இவைகளை ஆவின்பாலிலரைத்து ஒருபடிநல்லெண்ணெயிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்துஉள்ளுக்குஞ்சாப்பிட்டுத் தலையிற்பதமிட்டுமுழுகிவரத்தீரும்.

தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு படி-ச, குமரிச்சாறு படி-க, தூதுளைவேர்பலம்-ச, இடித்து உ-படிதண்ணீரிற்போட்டுக் காய்ச்சிவடித்தகஷாயம்படி-வ, நல்லெண்ணெய்படி-க, இவைகளைக்கலந்ததிற் கொடுவேலிவேர்ப்பட்டை கருஞ்சீரகம் வேம்பாடம்பட்டை வகைக்குக்கழஞ்சு-க, வீதமரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து உள்ளுக்குச் சாப்பிட்டு முழுகிவரத்தீரும்.

## கரப்பனுக்குமேற்பூசும் எண்ணெய்.

வெற்றிலை மிளகு தக்காளி வகைக்குச் சாறுபடி-க, எருக்கிலம்பழுப்பு வேளை வகைக்குச்சாறுபடி-உ, நல்லெண்ணெய்படி-க, இவைகளைக்கலந்ததில் சுக்கு மிளகு வசம்புதிப்பிலி வகைக்குப்பலம்-க, அரைத்துப்போட்டுக் காய்ச்சிக் கரப்பான்பேரிற் பூசிவரத்தீரும்.

முருங்கைப்பூ எருக்கம்பூ, முத்தெருக்கஞ்செவிகார்த்திகைக்கிழங்கு வகைக்குஇரண்டுகழஞ்சிஅரைத்து உ-படி ஆவினெய்யிற்போட்டுச் சிவந்தபதத்திற்காய்ச்சிவடித்துக் கண்டத்திற்குகீழ்ப்பூசி மாலையிலரப்பிட்டு ஸ்நானஞ்செய்யத்தீரும்.

## கொள்ளிகரப்பனுக் கெண்ணெய்.

வெள்ளருகு சிவனார்வேம்பு சங்கங்குப்பிபொடுதலைவீழிகோழியவரை கரிப்பான் கருநொச்சி கழற்சி மஞ்சணத்தி சிறுசெந்நட்டி சாரடை தூதுளை இவைகளின் சாறு வகைக்கு படி-கூ, விளக்கெண்ணெய்படி-க, ஒன்றாய்க்கலந்ததில் கருஞ்

சீரகம்பலம்-உ, ஈருள்ளிபலம்-க, அரைத்துப்போட்டுக்காய்ச்சிப் பத்தியமாய் கரண்டிவீதங்கொள்ளத்தீரும்.

## சுரவகுப்பு.

### கணக்காச்சலின் குணம்.

உந்திமுதல் ஈரல்வரை புண்ணாகிச் சுரங்காயும் திகைத்துமயங்கும்.

### நிவர்த்தி.

பூசுணி தண்ணீர்மீட்டான் இவைகளின்சாறு இளநீர் ஆவினெய் பால் வகைக்குப்படி-க, கடுகுரோகணி சண்பகப்பூ வெட்டிவேர் பச்சை அதிமதுரம் லவங்கம் சிற்றாமுட்டி பேராமுட்டி திப்பிலி சந்தனம் ஏலம் லாமிச்சம்வேர்மாம்பருப்பு கோஷ்டம் விளாம்பிசின் இலவம்பிசின் வில்வப்பிசின் பொன்முசுட்டை வகைக்கொருகாசிடைவீதமரைத்துக்கலந்து பதமாய்க்காய்ச்சிக்கொடுக்க கணக்காச்சல் உட்சுரம் தடுமல் இருமல்தீரும் உடல்பூரிக்கும்.

புள்ளடி செப்புநெரிஞ்சி வல்லாரை வரட்பூலா கோழியவரை இவைகளின்சாறுவகைக்குப் படி-வ, ஆமணக்கெண்ணெய்படி-க, குராசாணி கடுகுரோகணி வெளிச்சிப்பிசின்மாவின்புல்லூரி சடாமாஞ்சி வகைக்கிரண்டுபணவிடைபொடித்துக்கலந்துகாய்ச்சி யொருதுட்டளவாய்கொடுக்கத்தீரும்.

மாசிக்காய் திப்பிலி ஏலம் கோரோசனை கோஷ்டம் மாஞ்சில் இருசீரகம் அக்கிராகாரம் வகைக்குப் பலம்-வ, முலைப்பாலாலிருசாமமரைத்து ஷிபாலிற்கொடுக்கத்தீரும்.

சங்கு செருப்படை துளசி வரட்பூலாகழற்சிநரிப்பயறு இவைகளின்சாறு ஆவினெய் வகைக்குப்படி-க, அப்பைகொவ்வை நெரிஞ்சி தூதுளை யிவைகளின்வேர் கிராம்பு திப்பிலி ஜாதிக்காய் இம்பூரல் வசம்பு உள்ளி சுக்கு கடுக்காய் சிறுதேக்கு வகைக்குப்பலம்-ஹ, தட்டிப்போட்டுக்கொடுத்து மேலிலும்பூசத்தீரும்.

நாய்த்துளசி பழம்பாசி கணப்பூடு பேய்மிரட்டி வல்லாரை தகரை ஓரளவாய்க்கூட்டி கியாழஞ்செய்து வடித்ததில்

கருஞ்சீரகம் நற்சீரகம் கோரோஜனை* பொடித்துப் போட்டுக் கொடுக்க கணவெப்புத்தீரும்.

## உடம்புநோய்க்காச்சலின் குணம்.

உடம்புநொந்துகாயும் குழந்தை யுதட்டைக் கடிக்கும் கைமுஷ்டியையுறக்கப்பிடிக்கும் நட்டகண்ணாய்விழிக்கும் பதட்டமுடன் கொங்கையைக்கடித்திழுக்கும்.

### நிவர்த்தி.

சீதேவிப்பூண்டையிடித்துப் பிட்டாயவித்துச்சாறுபிழிந்ததிற் கடுகுரோகணியரைத்துக்கலக்கி வெள்ளாட்டுப் பாலிற்கலந்துகொடுக்கத்தீரும்.

## உட்காய்ச்சலின் குணம்.

உட்சுரங்காயும் வயிறு அபானமெரியும்மயக்கங்காணும் மலசலந்தீயும்.

### நிவர்த்தி.

இளநீரிலவித்துஊற்றின சிற்றாமணக்கெண்ணெய்படி-க, ஆவின்பால்படி-உ, குமரிச்சாறுபடி-உ, ஒன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சிவடித்ததிற் சீரகம் மாசிக்காய் கோஷ்டம் அதிமதுரம் கிராம்பு ஏலம் சுக்கு வகைக்கு விராகனிடை க, வெந்தயம்பலம்-க, இவைகளை வறுத்திடித்துக்கலந்து சூரியபுடம்வைத்துக்கொடுக்கக் காச்சல் உட்காச்சல் மாந்தம் உடம்புவற்றல் நாவரட்சி நடுக்கல் இருமல்தீரும்.

கற்றாழஞ்சாறு இளநீர் ஆவின்பால் வகைக்குப் படி-க, சிற்றாமணக்கெண்ணெய்படி-௩, கலந்துகாய்ச்சி கணப்பூண்டு மான்கொம்பு சந்தனம் ஆமையோடு வகைக்குப் பலம்-க, இளநீராலரைத்து செண்பகப்பூ ஜாதிக்காய் நற்சீரகம் வகைக்குப்பலம்-வ, சாதிப்பத்திரி பலம்-ஹ, கொத்தமல்லிபலம்-உ, இவைகளை பசுவின்பாலி லரைத்து ஒன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சி அந்திசந்தி யொருதுட்டிடை யேழுநாட்கொடுக்க மாந்தகணம் தோஷம் வரட்கணம் உடம்புமெலிவு அட்சரத்தின்காச்சல் உட்சுரம்நீங்கும்.

## ஆமசுரத்தின்குணம்.

சாமந்தோறு மட்டாய்ச்சுரங்காயும் குழந்தைசீறியழும் பாலுண்ணுது உடல்கருக்கும் இளைக்கும் நடுங்கும் தண்ணீர் தாகம் தலைவலிகாணும் கைகால்குளிர்ந்திருக்கும்.

## நிவர்த்தி.

உத்தாமணி பாவட்டை சங்கு காவட்டைமுருங்கை நுணு பொடுதலை இவைகளின்ஈர்க்கு ஒருபிடி, நறுக்கிச் சட்டியிற்போட்டு ஒருபடிதண்ணீர்விட்டு ஓமம் திப்பிலி வசம்பு ஆமையோடு கருஞ்சீரகம் ஓர்நிறையாயரைத்துத் துணியில்முடிந்து கூடப்போட்டு வற்றக்காய்ச்சியதில் ஷை மருந்துகளை யரைத்து மூன்றுவேளைகொடுக்கத்தீரும்.

விளாங்காய்ப்பிரமாணம் ஆவின்வெண்ணெயில் உத்தாமணிக்கொழுந்து வசம்பு உள்ளி விளாவோடு ஓமம் ஆமையோடு வகைக்கிருகழஞ்சு வறுத்துப்பொடித்துப்போட்டுக்காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

உத்தாமணி சங்கு தூதுவளை கொடுப்பை இவைகளின் வேர் வகைக்குஒருபிடிநறுக்கி ஒருபடிநீரிற்போட்டு பொடுதலை ஓமம் திப்பிலி மிளகு வசம்பு பூடு ஆமையோடுஓர்நிறையாய்ச் சீலையில்முடிந்துபோட்டு வற்றக்காய்ச்சி யதில் ஷைமருந்தையரைத்துக் கலக்கிக்கொடுக்கத்தீரும்.

பாவட்டை கொன்றை சிற்றுமுட்டி வேலிப்பரித்தி இவைகளின்வேரும் மிளகும்தட்டிப்போட்டுக் கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்.

## இரத்தசுரத்தின்குணம்.

வயிற்றுவலி தாகம் கழிச்சல் தலைச்சுற்றல்காணும் சுரம் விட்டுவிட்டுக்காயும் கண்தாழும் நாவுலரும் கைகால் சோர்ந்துதண்ணீர்போலிருக்கும்.

## நிவர்த்தி.

நாவிக்கிழங்கு திப்பிலி வெண்காரம்விராகனிடைமூவைந்து சாதிலிங்கம்விராகனிடை - ௰, நிம்பப்பழத்தின் சாற்றுல்

இருசாமமரைத்து கடலைநிரை யுண்டைசெய்து சுக்குக்கியா ழத்திற்கொள்ள வெறுப்புத்தீரும்.

சீரகம் கிராம்புக்கஷாயத்திலிடத்தீரும்.

ஆலவிழுதின் கஷாயத்திற்கொள்ளப் பழஞ்சுரந்தீரும்.

## அன்பஞதிசுரத்தின் குணம்.

வேர்க்கும் வெதும்பும் கண்சிவக்கும் பலகாலும்வெந்நீர் வேண்டும் பார்க்கப்பயமாயிருக்குதெனப்பதறி அலறிக்குழந் தையழும் வயிறுசிக்கிவிடும் தெருவிற்புறப்பட்டோடும்.

## நிவர்த்தி.

கோரோஜனை அதிமதுரம் கோஷ்டம்லாமிச்சம்வேர்வெ ட்டிவேர் ஏலம் சண்பகப்பூ மாசிப்பச்சை சாத்திரவேதி இ வைகளை ஓர்நிறையாய் முலைப்பாலிலாவது வெட்டிவேர்த்தண் டுச்சாற்றிலாவது மைப்போலரைத்துக் குன்றிபோ லுண்டை செய்து ஷை பாலிலுரைத்துக்கொடுக்கத்தீரும்.

கற்றாழஞ்சோறு கடுக்காய் களிப்பாக்கு கருவேல்பிரமி சுக்கு ஒருபடிதண்ணீர்விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சி அ தை விளக்கெண்ணெயிற்கலந்துகொடுக்கச் சீதம் குன்மம்இ ருமல்சுரம் சீதபேதிமுதலான சுரங்கள்தீரும்.

## மாங்கிஷசுரத்தின் குணம்.

அதிகமாய்ச்சுரங்காயும் உடல்நடுங்கும் மூச்சு மெத்தஓ டும் உதிரம்வற்றி யுடல்வெளுத்துருகிக் கருகும் மூர்ச்சைகா ணும் உரோமங்கள் சிலிர்க்கும்.

## நிவர்த்தி.

பச்சைக்கர்ப்பூரம் கெந்தி இந்துப்பு லவங்கம் சாதிக்கா ய் சாதிப்பத்திரி வகைக்கொருகழஞ்சு தேசிப்பழச் சாற்றில் ஒருஜாமமரைத்து உளுந்தளவுஉண்டைசெய்து இஞ்சிசர்க்க ரை சுக்கிலூட்ட எந்தச்சுரமும் மூன்றேமுக்கால் நாழிகையி லோடும்.

## அஸ்திசுரத்தின்குணம்.

அனற்போல்வெதும்பும் மூலையுண்ணுது புத்திகலங்கும் உள்ளுளையும் வெள்ளோக்காளமிகும் சத்திக்கும்நீர்சிவக்கும் சாமத்திற்சுரங்காயும் உடல்வற்றிநீங்கும் இருமல் சோகை கடுப்புக்காணும்.

## நிவர்த்தி.

சாஸ்திரபேதி கோஷ்டம் மதுரம் சந்தனம் ஏலம் சீரகம் கொன்றைப்பிசின் ருத்திராட்சம் கலங்சொம்புநெல்லிசண்பகம் கொத்தமல்லி லாமிச்சை வகைக்கொரு காசளவரைத்து ஒருபடிஆவினெய்யிற்போட்டுப் பரித்திக்காய்காணி வகைக்குச்சாறுபடி-வ, விட்டுப்பதமாய்க்காய்ச்சி அதிற் காற்பலச் சர்க்கரைசேர்த்து ஒரு கரண்டிவீதஞ் சாப்பிட அஸ்திசுரம் வரட்கணம்நீங்கும்.

## வாதபித்தசிலேற்பன சுரத்திற்கு.

கோரோசனைவிராகனிடை-உ, கடுகுரோகணி நேர்வாளம் வகைக்குவிராகனிடை-க, மூலைப்பாலில் மைப்போலரைத்துப் பபறுபோலுண்டைசெய்து வாதசுரத்திற்கு இஞ்சிச்சாற்றில், பித்தசுரத்திற்கு மூலைப்பாலில், சிலேற்பன சுரத்திற்கு ஆடாதோடை கண்டங்கத்திரி தூதுளை இடித்துப்பிட்டவித்துப்பிழிந்தசாற்றிலிடத்தீரும் மூவகைச்சன்னியுந்தீரும்.

## மாந்தசுரத்திற்கு.

சீந்தித்தண்டு களிப்பாக்கு பாலில் பத்துந்தபாச் சுத்திசெய்தசிவதைவேர் கடுக்காய் சுக்கு கடுகுரோகணி ஓர் நிரையாய்த்தட்டி ஒருபடிநீரிற்போட்டு அரைக்காற்படியாய்வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

விரைநீக்கிய கடுக்காய்-யசு, அந்தயிடை கஸ்தூரிமஞ்சள் கருடக்கிழங்கு இவைகளைப்பொடித்து ஒருபடி ஆமணக்கெண்ணெயிற்போட்டுச் சூரியபுடம்வைத்துஉள்ளுக்குங்கொடுத்து உச்சியிலுந்தடவத்தீரும்.

சீரகம் கிராம்பு திப்பிலி நெல்லி வேம்பு புளி விஷ்ணுகரந்தை பேராமுட்டி சிற்றாமுட்டி ஓரிலைத்தாமரை ஓர் நிரையாய்க்கூட்டிக் கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

உள்ளி அவிரி குட்டிவிளா இவைகளை ஓர்நிரையாய்ச் சிவக்கவறுத்துக் கஷாயஞ்செய்துகொடுக்கத் தீரும்.

புளி நுணா நெல்லி வேம்பு உதி தகரை பொடுதலை அம்மான்பச்சரிசி இவைகளின்ஈர்க்கு வில்வம் சிறுபுள்ளடிகோழியவரை நிலவிளா பழம்பாசி இவைகளினிலை நரிபயற்றங்கொடி விஷ்ணுகரந்தை நன்னாரி கோரைக்கிழங்கு செருப்படை மணத்தக்காளி வல்லாரை சீந்தி பேய்ப்புடல் வில்வவேரோடு வகைக்கொருபிடி அரிந்து பொன்னிறமாய்வறுத்து ஒருபடி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய்வற்றவைத்து அதிற் கோஷ்டம் விளாம்பிசின் வில்வப்பிசின் இலவம்பிசின் மாசிக்காய்சாதிக்காய் வெந்தயம் வகைக்குவிராகனிடை-க, வெதுப்பிபொடித்துப்போட்டு மூன்றுநா ளிரண்டுவேளையுங்கொடுக்க நாட்பட்டமாந்தசுரம் வாதபித்தசிலேற்பனசுரந்தீரும்.

பச்சைக்கர்ப்பூரம் இலவங்கம் வால்மிளகு சிறுநாகப்பூ கடுகுரோகணி ஏலம் சடாமாஞ்சி சுக்குசீரகம் வகைக்குவிராகனிடை-வ, நேர்வாளம் விராகனிடை-உவ, பொற்றலைக்கரிப்பான்சாற்றால் ஒன்பதுநாள்ஆட்டி மிளகுப்பிரமாணம் உண்டைசெய்து இஞ்சி தேன் முலைப்பால் இவைகளிற் கொடுக்க மாந்தசுரமுதலான சகலசுரமுந்தீரும்.

## அட்சரமாந்தசுரத்திற்கு.

பூவரசிலை காய் பூ சமனுயரைத்த பலம்-க, அடைபோற்றட்டி சிற்றாமணக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி சிவந்தபதத்திலடையையெடுத்துப்போட்டு ஏலம் சாதிக்காய் சாதிப்பத்திரி வகைக்குவிராகனிடை-உ, பொடிசெய்து எண்ணெயிற்கலந்து ஒருதுட்டிடைகொடுக்கத்தீரும்.

## மாந்தகணசுரம் வயிற்றுப்பொருமல் வாந்திக்கு.

இரதசிந்தூரம் திரிபலாதி குங்குமப்பூ கஸ்தூரிஏலம் திரிகடுகு கோரோசனை வகைக்குப்பலம்-வ, கிராம்பு விராகனிடை-க, கருநொச்சிச்சாற்றால்சிறுபயருபோலுண்டைசெய்து துளசிச்சாற்றிலிடத்தீரும்.

## மாந்தசுரதோஷத்திற்கு.

ஆமணக்கெண்ணெய் படி-க, நுணாச்சாறு படி-உ, ஈருள்ளிச்சாறுபடி-வ, வெந்தயம்பலம்-உ, அரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

## கணசுரம்தோஷம் வயிற்றுக்கழிச்சல் பித்தம் இருமல்வாந்திக்கு.

திரிகடுகு வெண்காரம் சாதிலிங்கம் ஓர்நிறையாஎலுமிச்சம்பழச்சாற்றா லொருசாமமரைத்துச் சிறுபயருபோ லுண்டைசெய்து துளசி செம்முள்ளி ஆடாதோடை தூதுளைவிஷ்ணுகாந்தி கண்டங்கத்திரி வெதுப்படக்கி பேய்ப்புடல் சங்குநொச்சி இவைகளினிலைகளை யிடித்துப்பிட்டவித்துச் சாறுபிழிந்ததில் ஷஉண்டையுங் கோரோசனையுமுரைத்து திரிகடுகுவெதுப்பிப்பொடித்ததூளுங் கலந்துகொடுக்கத் தீரும்.

## இரத்தகணமூலத்திற்கு.

சாதிக்காயும் புளியவித்தின்மேற்றோடும் ஷஉண்டையுமோர்நிறையாய்ப்பொடித்து வில்வப்பழச்சதைக்குள்வைத்து மூன்றுநாட்கொடுக்கத்தீரும்.

## கணக்காச்சலுக்கு.

தூதுளை கண்டங்கத்தரி ஆடாதோடை செம்முள்ளி விஷ்ணுகாந்தி சங்கு இண்டு சடைச்சி துளசி இவைகளினிலைகளை வகைக்குஒருபிடிவீதம்இடித்ததற்குள் ஒருவிராகனிடை ஓமத்தைமுடிந்துவைத்து பிட்டவியலாயவித்துச் சாறுபிழிந்ததி லோமத்தையரைத்துக் கலக்கிக்கொடுக்கத்தீரும்.

## குளிர் சுரத்திற்கு.

புரசிலையும் அதின்பட்டையும் கற்குழஞ்சோறுந்தட்டிச் சாறுபிழிந்து ஒருகரண்டிவீதங்கொடுக்கத் தீரும்.

## கணக்காச்சல்மாறலுக்கு.

அதிமதுரம் லவங்கம் ஏலம் சண்பகமொக்கு கோஷ்டம் சுக்கு சீரகம் முத்தக்காசு வறுத்திடித்து வடிகட்டிச் சர்க்கரைகலந்துஅருந்தக் கணச்சுரம் மாறற்சுரந்தீரும்.

---

## கணக்காச்சல்மயக்கத்திற்கு.

புளி வேம்பு மா நெல்லி நாரத்தை நுணா தகரை நிம்பம் இவைகளினீர்க்கு வல்லாரை பழம்பாசி சிறுபுள்ளடி முத்தம் ஈருள்ளி அத்தி சிற்குமுட்டி பேராமுட்டி மிளகு தக்காளிமுசுமுசுக்கை விஷ்ணுகாந்தி நரிபயற்றங்கொடி பற்பாடகம் மூக்கொற்றி அம்மான்பச்சரிசி சீந்தில் கருஞ்சீரகம் நற்சீரகம் சுக்கு வெந்தயம் வகைக்குப்பலம்-உ, வறுத்துக் கஷாயஞ்செய்து அதிற் கோரோசனை அக்கிராகாரம் அதிமதுரம் கலங்கொம்பு கோஷ்டம் வகைக்கொரு பணவிடையா யரைத்துக் கலக்கிக்கொடுக்கத்தீரும்.

---

## கணபாண்டு கணசுரம் அஸ்திவெட்டை இருமல் இரத்தம் இவைகட்கு.

ஆவரை சரக்கொன்றை விஷ்ணுகரந்தை நிலக்குமிழ் இவைகளின்வேர் சிறுஅம்மான்பச்சரிசி ஏலம் நற்சீரகம் நெரிஞ்சி வகைக்குப்பலம்-உ, இடித்துஅரைத்து ஒருபடி விளக்கெண்ணெயிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சிக்கொடுக்க தீரும்.

---

## கழிச்சல்தோஷத்திற்கு.

உப்பிலிப்பூடைநறுக்கி ஆவினெய்யிற்போட்டு வெயிலில் நாலுசாமம்வைத்துப் பின்குழந்தைகட்குக் கொடுக்கத்தீரும்.

## காச்சல் அதிசாரம் சுவாசகாசத்திற்கு.

அவிரிவேர் நெற்பொரி சடாமாஞ்சி அதிமதுரம்சமனுப்பொடித்துச் சர்க்கரை தேன்விட்டு மத்தித்துக்கொடுக்கக்

காச்சல்தீரும் அதிவிடையம் பொடித்துத் தேனில் கொடுக்க அதிசாரசுவாசந்தீரும்

## ஆமசுரமாறலுக்கு.

வேம்பு இலுப்பை மாவிலிங்கு பாவட்டை முருங்கை நுணா இவைகளினீர்க்கு வேலிப்பருத்தி தைவேளை சாரணை இவைகளின்வேர் பேய்ப்பாச்சோற்றி வகைக்கொருபிடி வறுத்து இருநாழிநீரிற்போட்டு திப்பிலி மிளகு ஆமைமேயோடு சுக்கு வசம்பு ஓமம் ஓர்நிறையாய் முடிந்துபோட்டு வற்றக் காய்ச்சி அதில் ஷெமருந்தைவைத்துக்கொடுக்கத்திரும்.

## ஆமங்குளிர்சுரங்கடுப்புக்கு.

கச்சந்தராய் பொன்னாங்காணிசாரணை இவைகளின்வேர்களை யோர்நிறையாய் உள்ளித்தயிலத்தாலரைத்து ஒருகழஞ்சுவீதங்கொடுக்கத்தீரும்.

## விக்கல்வாந்திசுரம்இருமலுக்கு.

கண்டங்கத்திரிவித்து அமுக்குரு திப்பிலி இவை சமன் பொடித்துக்கொடுக்கத்தீரும்.

## சீதசுரத்திற்கு.

கண்டங்கத்திரி சீந்தி தாமரை வளையம் இவைகளைக் கஷாயம்செய்து அதில் சுக்கு முத்தக்காசு ஓர்நிறையாய்ப்பொடித்துதூவிக்கொடுக்கத்தீரும்.

## சுரம்இருமல்சீதசுரத்திற்கு.

சித்திரமூலம் தூதுளை கண்டங்கத்திரிவேர் கோஷ்டம் சிங்கி முசுமுசுக்கை முள்ளி அரத்தை திரிகடுகுகஷாயம்வைத்து ஆறுபோதருந்தத்தீரும்.

## சீதம் விஷசுரத்திற்கு.

சுக்கு மிளகு திப்பிலி வசம்பு தட்டி யொருபடி நீரிற் போட்டு எட்டொன்றாய் வற்றவைத்துத் தேன்விட்டுக் கொள்ளத்தீரும்.

## சுரத்திற்கு ஏலாதிமாத்திரை.

கோரோசனைவிராகனிடை - ௩, அதிமதுரம் கோஷ்டம் இந்துப்பு இலுப்பைக்கொட்டை சாஸ்திரவேதி பெருஞ்சீரகம் கருஞ்சீரகம் வகைக்குவிராகனிடை-க, குமரிச்சாற்றிலும் முலைப்பாலிலும் மைப்போலாட்டிக் குன்றிபோ லுண்டைசெய்து முலைப்பாலிற்கொடுக்கத்தீரும்.

## சுரம் வரட்கணம் இரத்தகணம் குழித்தோஷம் சவலைக்கு.

கற்றாழைச்சாறு விஷ்ணுகாந்திச்சாறு இளநீர் ஆவின்பால் வகைக்குப்படி-க, நிம்பச்சாறு படி - உ, சிற்றாமணக்கெண்ணெய்படி-௩, ஒன்றாய்க்கலந்து சந்தனம் கணப்பூடு சிங்கி வகைக்குப்பலம்-க, சண்பகப்பூபலம்-உ, பச்சை பூலாங்கிழங்கு ஏலம் லாமிச்சு வெட்டிவேர் நன்னாரி சாதிக்காய் பத்திரிகொத்தமல்லி மதுரம் கோஷ்டம் கடுகுரோகணி கிராம்பு முத்தக்காசு சன்னலவங்கம் கருஞ்சீரகம் நற்சீரகம்சிறுநாகப்பூவகைக்குவிராகனிடை-க, அரைத்து எண்ணெயிற் கலந்து பதமாய்க்காய்ச்சி காசிடை இருவேளை கொடுத்துவரத் தீரும்.

## பழஞ்சுரத்திற்கு.

தூதுளை காஞ்சொரிவேர் சீந்தில் பற்பாடகம்நொச்சிபேராமுட்டி சிற்றாமுட்டி கடுக்காய் நறுக்கிப்போட்டு கஷாயம் வைத்துத் திப்பிலிபொடித்துத்தூவிக்கொடுக்கத்தீரும்.

## பழஞ்சுரம் விடாச்சுரம் விஷதோஷம் சன்னிக்கு.

ஏலம் கிராம்பு முத்தக்காசு மதுரம் வெட்டிவேர் லாமிச்சம்வேர் கடுகு சுக்கு கொடிமுந்திரிப்பழம் கோரோசனை நன்னார் நிலப்பனங்கிழங்கு தாளிசப்பத்திரி சடாமாஞ்சி சந்தனம் இலுப்பைப்பூ தேவதாரம் திப்பிலி கடுகுரோகணி வகைக்குக்கழஞ்சு-வ, கல்வத்திற்பொடித்துச் செவ்விளநீரிலும்முலைப்பாலிலும் நாலுசாமமாட்டிக் குன்றிபோ லுண்டைசெய்து நிழலிலுலர்த்தி முலைப்பாலிற் கொடுக்கப் பழஞ்சுரம் விடாச்சுரம்நீங்கும் முதியார்கூந்தற் கஷாயத்திலிட சன்னிவிஷதோஷம் ஆமசுரம் கணச்சுரந்தீரும்.

## அதிசாரசுரம் காச்சில் சுவாசம்வாந்தி சுரதாபம் விக்கல் தாகத்திற்கு.

மான்கொம்பு திப்பிலி அதிவிடையம் சமனுப்பொடித்துத் தேனிற்கொடுக்க சுரம் காசம் வாந்திதீரும்.

ஆல் மா நாவல் இவைகளின்தளிரை நறுக்கிக் கஷாயம் வைத்துக்கொடுக்கச் சுரம் தாகம் விக்கல் அதிசாரந் தீரும்

## பித்தசுரம் தாபசுரம் பழவெதுப்புக்கு மேற்பூசும் எண்ணெய்.

பசுவினெய்படி-க, ஷை பால்-உ, நல்லெண்ணெய்படி-சு, பெருங்குரும்பை மதுரம் நன்னாரி கருவேலிலைகடுகுரோகணி செவ்வள்ளிக்கொடி அமுக்குறாவேர் மரமஞ்சள் சந்தனம் சுக்கு காசுக்கட்டி அரக்கு கோஷ்டம் வகைக்குக்கழஞ்சு-க, அரைத்தொன்றாய்க்கலந்துகாய்ச்சிச் சிரசிலும் உடம்பிலும் பூச சூரியனைக்கண்ட பனிபோற்பரந்திடும்.

## கணக்காச்சலுக்குக் கஷாயம்.

வெப்பூலா வில்வம் சிற்றாமுட்டி விஷ்ணுகாந்தி நன்னாரி இவைகளின்வேர் வகைக்குப்பலம்-ரு, மிளகுபலம்-உ, இருபங்குசெய்து இரண்டுபடி தண்ணீரில் ஒருபங்கு தூட்போட்டு வற்றவைத்து ஐந்துபோதுகொடுக்கத்தீரும்.

## சகலசுரங்களுக்குப் பச்சைக்கற்பூர மாத்திரை.

பச்சைக்கர்ப்பூரம் லவங்கப்பட்டை சாதிக்காய் வகைக்குக்கழஞ்சு-உ, வாளம் ஆறுகளஞ்சு, குமரிச்சாற்றாலரைத்து உளுந்துப்பிரமாணம்உண்டைசெய்து உலர்த்தி சர்க்கரையில் ஒருகுளிகையிட மூன்றேமுக்கால்நாழிகையில் விரோசனமாகிச் சுரந்தீரும்.

## குளிர்சுரத்திற்கு.

ஷெ மாத்திரையை முன்னடிக்கொடுத்து அப்பால்குப்பைமேனியிலை கொடுவெலியிலை மிளகு சமனாய்நிறுத்து விழுதுபட அரைத்துக்கொடுக்கத்தீரும்.

---

## சகலசுரத்திற்குமாத்திரை.

ஆடுதின்னாப்பாளைவேர்ப்பட்டையைநிழலி லுலர்த்திகருவாப்பட்டையைச் சமன்கூட்டிப் பொடித்து வஸ்திரகாயஞ்செய்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டுஆட்டிப் பருத்திக்கொட்டைப்பிரமாண முண்டைசெய்து அநுபானத்திற்கொடுக்கச் சகலசுரமும் விஷமுந்தீரும்.

விஷ்ணுகாந்தி சுக்கு கடுக்காய் இரண்டு வாலுழுவைஓர்நிரையாய்க் கஷாயஞ்செய்தாவது சூரணித்தாவது அதிலிந்த மாத்திரையைக்கொடுக்கச் சகலசுரமுந்தீரும்.

## சுரத்திற்கு ஆகாப்பதார்த்தங்கள்.

பால் நெய் இளநீர் தயிர் புளிப்பு கடுகு பச்சைமீன்இறச்சி கோழி தேங்காய் மாங்காய் கரும்பு முட்டை சந்தனம் புநுகு பயறு அவல் பொரி கடலை மஞ்சள்வாடை பழங்கறி பழஞ்சோறு புணர்ச்சி இவைகளை யநுசரித்தால் சன்னிதோன்றி மரணஞ்சம்பவிக்கும்.

## சன்னிவருப்பு—மாந்தசன்னிகுணம்.

மாந்தத்தின்பேரிற் சன்னிதோன்றிடிற் சுரம் மயக்கம் தாகங்காணும் நாவுமுள்ளுப்போலிருக்கும் கண்தாழும்புத்திகலங்கும்.

## வேறு.

குழந்தைஓயாதலறும் வாயாற்பிதற்றும்ஒருகண்திறந்து ஒருகண்ணை உருட்டிவிழித்துப்பார்த்தழும் ஊசிபோற் கழுத்துநேர்ந்து உடம்பெல்லாம் நரம்புதோன்றும் பாசிபோல் விழிபசக்கும்.

## நிவர்த்தி.

கஞ்சா ஊமத்தை கச்சந்தழுய் இவைகளின்வேர்கோரக்கிழங்கு சமனாய்வேப்பெண்ணெய்விட்டுவறுத்துப்பொடித்து

நெருப்பில்போட்டுப் புகைகாட்டத் தீரும் வெள்ளைவேர் உத்தாமணியின்வேர் மாவிலிங்கப்பட்டை முருங்கைப்பட்டை வகைக்கொருபலம் ஒன்றாயிடித்துச் சாறுபிழிந்துமுறித்துச் சூடாற்றி அதில் திப்பிலி மிளகு சுக்கு பொடித்துப்போட்டு நவலோகபூபதிமாத்திரை இழைத்துக்கொடுக்கத் தீரும். இச் சாபத்தியம்.

## ஆமசன்னியின்குணம்.

குழந்தை முலையுண்ணுதமும் கண்விழியாது மயங்கும் முகம்வேறுபடும் பற்பலவலியுண்டாகும் குரல்கம்மும் மலங் கட்டி சுரங்காயும் தாகிக்கும் வயிறூதும் நெற்றிவிழிக்கும் மயக்கம்காணும்.

## நிவர்த்தி.

கடுக்காய் கடுகுரோகணி சிவதை திரிகிரி கடுகு ஓர்நிறையாயிடித்துக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

கன்னிக்கோழிமுட்டைத்தயிலம் வேப்பெண்ணெய் சமன்கலந்து உள்ளுக்குக்கொடுத்து மேலிலும்பூசத்தீரும்.

சாரணை மூக்குரட்டை பொடுதலை திரிகடுகு நாய்த்துளசி சீரகம் சமனாய்நறுக்கிப்போட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

ஆமணக்கெண்ணெய் இலுப்பையெண்ணெய் நல்லெண்ணெய் வேப்பெண்ணெய் சமனாய்க்கலந்து அதிற்கொடுவேலி சங்கு எருக்கு முடக்கொத்தான் இவைகளின்வேர்ப்பட்டைகளை ஓர்நிறையாய் நறுக்கிப்போட்டுக் காய்ச்சி அதற்கு நிகர் வெள்ளுள்ளித்தயிலமும் அண்டத்தயிலமுங் கலந்து மேலிற்றுவாலையிடத்தீரும்.

## கோராமஜன்னிக்குணம்.

வாயுமிகும் உடம்பு தீப்போற்காயும் சதை குலுங்கிவலிக்கும் விழி கால்கைகள் பதைக்கும் வாதநீர் தாளிலிறங்கும்.

## நிவர்த்தி.

கும்மட்டிக்காய்ச் சாறு நூறுண்டுசென்ற வேப்பம்பட்டைக்கியாழம் விளக்கெண்ணெய் வகைக்குப்படி-க, ஒன்றாய்க்கலந்ததில் வெந்தோன்றிக்கிழங்குகருடக்கிழங்கு நீர்முள்ளி சிவனார்வேம்புதுவசிமுருங்கை வெள்ளைச்சாரணைமுடக்கொத்

தான் இவைகளின்வேர் ஏலம் சீரகம் கருஞ்சீரகம் கடுகுரோகணி பெருங்காயம் வகைக்குப் பலம் - உ, தட்டிப்போட்டுக் கோழிமுட்டைத்தயிலம் முசுறுமுட்டைவகைக்குப்பலம்-உ, கூடச்சேர்த்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து காசிடை மூன்றுநாட் பத்தியமாய்க்கொடுக்கத்தீரும்.

## தாந்திரிகஜன்னிக் குணம்.

குழந்தைமுலையுண்ணாது சுரங்காயும் தாகங்காணும் மேனிபதைக்கும் அரைகுளிர்ந்திருக்கும் மூர்ச்சைகாணும்.

## நிவர்த்தி.

வேளை ஊமத்தை கஞ்சா முருங்கை சிந்தி இவைகளின் வேர் வெள்ளுள்ளி வசம்பு மயிலிறகு ஓர்நிறையாய்த் தட்டிக் கம்பிளியிற்சுத்தி வேப்பெண்ணெயிற் றுவைத்துத்தீயிற்கொளுத்தி அவித்துப் புகைகாட்டத்தீரும்.

## தீராதஜன்னிக்குணம்.

உடல்மஞ்சணிக்கும் குழந்தை முலையுண்ணாது பெருமூச்சிடும் கண் நாக்கு புருவம் கைகால் கோணவலிக்கும் விழி மேல்நோக்கும்.

## சகலமாந்தஜன்னிக்கு.

சிறுகிளாவிலை வெள்ளைப்பூண்டு வசம்பு ஓமம் சமனாயிடித்துச்சாறுவாங்கி மூன்றுநாள் உள்ளுக்குங்கொடுத்து மேலிலும்பூசத்தீரும்.

நல்லெண்ணெய்படி-உ, முருங்கைப்பட்டைச்சாறு படி-க, இவைகளைக் கலந்ததில் வெள்ளைப்பூடுபலம்-க, வசம்புசுட்டகரிபலம்-வ, கூடப்போட்டுக்காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

## தோஷஜன்னி மாந்தஜன்னி பித்தசுரம்வாந்திக்கு.

கஸ்தூரிவிராகனிடை-க, குங்குமப்பூ விராகனிடை-உ, கோரோசனைவிராகனிடை-ா, முலைப்பால்விட்டு அரைத்துக் குன்றியிடையுண்டைசெய்து கொடுக்கத்தீரும்.

## மாந்தகணஜன்னிக்கு.

மாசிக்காய் திப்பிலி கோரோசனை கோஷ்டம் கருஞ்சீரகம் அக்கிராகாரம் சமனாய் முலைப்பால்விட்டு அரைத்துக்குன்றிபோலுண்டைசெய்து ஷைபாலிற்கொடுக்கத்தீரும்.

## மாந்தகணஜன்னி பலஜன்னிக்கு.

ஏலம் லவங்கம் அதிமதூரம் வெட்டிவேர் சுக்கு நன்னாரி முந்திரிப்பழம் பேரீந்தின்பழம் லாமிச்சம்வேர் கோரோசனை தாளிசபத்திரி நிலப்பனைக்கிழங்கு சடாமாஞ்சி சந்தனம் தேவதாரம் திப்பிலி இலுப்பைப்பூ கடுகுரோகணி வகைக்கு விராகனிடை-க, தண்ணீர்விட்டு நன்றாயரைத்துக்குன்றிப்பிரமாணமுண்டைசெய்து நிழலி லுலர்த்தி முலைப்பாலிற் கொடுக்க மாந்தகணந்தீரும். முதியார்கூந்தற்கியாழத்திற் சகலசன்னியுந்தீரும்.

## ஜன்னிசுரம் கபத்திற்கு.

வேப்பெண்ணெய்படி - ௧, சங்கிலைச்சாறு பாவட்டைச்சாறு முசுமுசுக்கைச்சாறு வகைக்குப்படி-ஹ, ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு திப்பிலி வசம்பு மிளகு நற்சீரகம் கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை-க, பொடித்துக்கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சிவடித்து ஒரு துட்டிடை கொடுத்துவரத் தீரும். பத்தியம் வெந்நீர்சாதம சாப்பிடவும்.

வேப்பெண்ணெய்படி - ௧, குட்டிவிளா தூதுவளை நாய்வேளை இவைகளின்வேர் சீரகம் கஸ்தூரிமஞ்சள் வெண்காயம் சித்தரத்தை மரமஞ்சள் வகைக்கு விராகனிடை-உ, நறுக்கிப்போட்டுக்காய்ச்சி மெயாருநாரண்டிஷ் தங்கொள்ளத் தீரும்.

## விஷஜன்னி குளிர்ஜன்னி சுரம் விக்கலுக்கு.

மஞ்சள் சாதிக்காய் திரிகடுகு கிராம்பு கடுகுரோகணி ஏலம் நாபிக்கிழங்கு வகைக்கு விராகனிடை-க, எலுமிச்சம்பழச்சாற்றால் ஒருநாளரைத்துப் பயறுபோ லுண்டைசெய்து மாசிப்பத்திரிக்கியாழத்திலிடத்தீரும்.

## விஷதோஷஜன்னி மாந்தம் பித்தசுரம் வாந்திக்கு.

கஸ்தூரி கழஞ்சு-க, குங்குமப்பூகழஞ்சு - உ, கோரோச னைகழஞ்சு-ரு, முலைப்பாலில் ஒருசாமமரைத்துக் குன்றிபோ லுண்டைசெய்து நிழலிலுலர்த்தி ஒரு உண்டை முலைப்பாலி லிடத்தீரும்.

## வலிப்பின்வகுப்பு

## மாந்தவலிப்பின்குணம்.

தின்பண்டங்களினால் மாந்தம்பற்றிப் பலவிதவலிப்புமய க்கம் இசிப்பு பற்கடி கற்கிட்டல்காணும் அன்னம் தண்ணீர் செல்லாது.

## நிவர்த்தி.

குதிரைநகம் மயிலிறகு மிளகு வசம்பு சுக்கு கடுகு பேய த்தி அழிஞ்சில் செம்மறியாட்டுக்கொம்பு ஓர்நிறையாய் பொ டித்துக் கம்பிளியாற்சுற்றி வேப்பெண்ணெயிற் றுவைத்துப் புகைக்கத்தீரும்.

குதிரவாலிசமூலம் சிறுபுள்ளடிசமூலம் தைவேளைசமூல ம் வெள்வேல் விடத்திலை முருங்கை இவைகளின் பட்டை வ கைக்குப்பலம்-உ, ஆமையோடு பூடு வசம்பு வகைக்குப் பலம்- க, இவைகளைநறுக்கி ஒருபடி விளக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி ஒருதுட்டிடை உள்ளுக்குக்கொடுத்து மேலிலும் பூ சத்தீரும்.

## மாந்தவலிப்பு காக்கைவலிப்புக்கு.

கொடுவேலி சங்கு எருக்கு இவைகளின் வேர்ப்பட்டை குங்குமப்பூ வகைக்குவிராகனிடை-க, மைபோலரைத்து வெ ந்நீரிற்கலக்கி வடிகட்டிக்கொடுக்கத்தீரும்.

## காக்கைவலிப்புக்கு.

கொழுஞ்சி தழுதாழை நிலவேம்பு மிளகரணை இவைக ளின்வேர் வசம்பு திப்பிலி மூலம் காக்கையின்வித்து கொழு ப்பு முட்டை இவைகளைப் பொடித்து விளக்கெண்ணெயிற் போட்டுக்காய்ச்சி வறுத்துப்பொடித்த ஓமம் வெண்காரம் உ ள்ளி நறுக்கிச் சேர்த்திறக்கி ஒரு கரண்டிவீதம் ஆறுவேளை கொடுக்கத்தீரும்.

## சளிஇருமல் கக்கல் காச்சல் விஷசுரம் விச்சுழி வலிப்பு ஜன்னிதோஷம் வயிற்றுப் பொருமலுக்கு.

ஜாதிக்காய் கிராம்பு ஓமம் கரியசீரகம் சுக்குதிப்பிலிகஸ் தூரிமஞ்சள் வசம்பு காயம் வெள்ளைக்காக்கணுன் வேர்ப்பட்டை சமன்கூட்டி வெந்நீராலரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாண முண்டைசெய்து உலர்த்தி ஷை நீரிற் குழந்தைகட்கு மூன்றுநாட்கொடுக்கத்தீரும்.

பேதியதிகப்பட்டால் வசம்பைச்சுட்டு நீரிற்கலக்கிக்கொடுக்கத்தீரும்.

## பிறஇசிவுக்கு.

தும்பை துளசி இஞ்சி இவைகளினிலைகளைச்சரியிடையாய்நிறுத்து அரைத்துச் சிற்றுமணக்கிலையில்வைத்துச்சுருட்டி இளகவெதுப்பிச் சாறுபிழிந்து காசளவாய் மூன்று வேளை கொடுக்கத்தீரும்.

---

## கழிச்சல்வகுப்பு

## கழிச்சல்தோஷத்திற்கு.

உப்பிலியின்பூண்டைநறுக்கி ஆவினெய்யிற் போட்டு நாலுஜாமம்வெயிலில்வைத்துக்கொடுக்கத்தீரும்.

## மாந்தக்கழிச்சல் மாந்தஜன்னிக்கு.

கனலிற் சட்டியைக்காயவைத்து ஒருசிரங்கைஉப்பைப் போட்டுச் சாம்பலாக்கிக் கொட்டித் துடைத்துப்போட்டு வசம்பைப்போட்டுக்கருகித் தீப்பற்றி வேகும்போது ஒருபிடி வேளையை மூன்றுஅறுப்பாய்ச்செய்துபோட்டுப் பொன்னிறமாய்வறுத்துப் பின்புஅரைசெரங்கை நீர்தெளித்துச் சுண்டமட்டும்வறுத்துப் பின்னும்இந்தப்படி இரண்டுதபா நீர்தெளித்துச் சுண்டவறுத் ததின்பேரில் ஒருபடிநீர்விட்டு எட்டொன்றாய்வற்றக்காய்ச்சி இறக்கி ஒருசங்குகொடுக்கத்தீரும்.

## கழிச்சலுக்கு.

கோரோசனை களிப்பாக்கு சீரகம் காசுக்கட்டி இவைகளைச்சமமாய் எலுமிச்சம்பழச்சாறுவிட் டரைத்துப் பாக்குப் பிரமாணம் முலைப்பாலிற் கரைத்துக்கொடுக்க கழிச்சல் உடனேநிற்கும்.

தைவேளையிலை வசம்பு பூடு இவைகளைத்தட்டி வெதுப்பிச் சாறுபிழிந்துகொடுக்கத்தீரும்.

சுருள்ளி வேலிப்பருத்தியிலை முடக்கொத்தானிலைஇவைகளைச் சமமாய்வெதுப்பிச் சாறுபிழிந்து ஒருதுட்டிடைகொடுக்கத்தீரும்.

மாவிலிங்கு சங்கு செம்முள்ளி வேலிப்பருத்தி பொடுதலை வேளை இவைகளை யோர்நிறையாய் எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எருமைவெண்ணெயில்வேகவைத்துக்கொடுக்கநிற்கும் கீழ்க்காய்நெல்லிவேரை ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம்அரைத்து முலைப்பாலிற்கொடுக்கத்தீரும்.

## பால்போற் கழிவதற்கு.

பிரண்டையிலை-ரு, பெருந்தும்பையிலை-ரு, இவைகளைக் கரண்டியில்வெதுப்பி முலைப்பால்விட்டுத் தட்டிச் சாறுபிழிந்து அதில் கோரோசனை கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் வகைக்கிரண்டுநெல்லிடை பொடித்துப்போட்டுமூன்றுபோதுகொடுக்கத்தீரும்.

## கழிச்சல் சுரத்திற்கு.

அதிவிடையம் சாதிக்காய் சாதிப்பத்திரி அபின்கடுக்காய் தான்றிக்காய் மிளகு நற்சீரகம் கருஞ்சீரகம்வகைக்குவிராகனிடை-உ, ஏலம்விராகனிடை-க, மாதுளந்துளிரும் அத்திப்பட்டையும் கியாழஞ்செய்து அதனுல் ஷை மருந்துகளை அரைத்து அடைபோற்றட்டி அரசிலையிற்கட்டி சட்டியில் வைத்து ஷை கியாழத்தை கொஞ்சங்கொஞ்சமாய் வார்த்து வேகவைத்து அப்பால் இந்தப்படியே பத்துதபா ஷை மருந்தை மைப்போலரைத்துக் குன்றிப்பிரமாணம் உண்டைசெய்து வடிகட்டின எருமைத்தயிரிற் கொடுக்க கழிச்சல்தீரும் வெந்நீரிற் கொடுக்கச் சுரம்நீங்கும்.

## கழிகணம் சுரம் வரட்சிக்கு.

இலந்தை நாரத்தை புளி கணப்பூண்டுநெல்லி இவைகள் வேர்க்குகளைச் சமனுக்கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்.

## கழிச்சல் இருமலுக்கு.

ஆடுதின்னுப்பாளைசமூலம் சிறுதேக்கு அதிமதுரம்வசம்பு சுக்கு மிளகு கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் அதிவிடையம் கோஷ்டம் முத்தக்காசு வகைக்குக்கழஞ்சு-க, நறுக்கி இம்பூரற்சாறு ஆவினெய் வகைக்குப்படி-க, ஒன்றுப்க்கலந்து காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

## கழிச்சல் வாந்திக்கு.

நெல்லி மா அத்தி அரசு இவைகளின்பட்டை பருத்திப் பருப்பு ஷிபிஞ்சு அத்தித்தளிர் வகைக்கு விராகனிடை-க, நறுக்கிக் கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும்.

## கழிச்சல்இருமல்வாந்திக்கு.

வேலிப்பருத்திச்சாறு எருமைவெண்ணெய் வகைக்குப் படி-வ, கருஞ்சீரகம் கழஞ்சு-க, அரைத்துப்போட்டுக்கலந்து காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

## மாந்தக்கழிச்சலின்குணம்.

வாந்தி பிராந்தி மூர்ச்சை மேனியில் வெதுப்பு கால் கையிற்குளிர்ச்சி வலிகாணும் பலவிதமாய் மலங்கழியும் வாயுலரும் குரல்கம்மும்.

## நிவர்த்தி.

வேளை நாய்வேளை வேலிப்பருத்தி குப்பைமேனி இவைகளினிலை அகத்திப்பழுப்பு வசம்பு வெள்ளுள்ளி இவைகளைத் தட்டிச்சாறுவாங்கி உள்ளுக்குங்கொடுத்து மேலிற்றுவாலையிடத்தீரும்.

## கணக்கழிச்சலின்குணம்.

சீதமாயும் மலமாயுங் கெட்டபாலும் கரித்தண்ணீர்போலும் பிரவிர்த்தியாகும் கைகால்குளிரும் காதடைக்கும்உடல் வெதும்பும்.

## நிவர்த்தி.

ஈருள்ளி-ம, கருவேலீர்க்கு ஒருபிடி, சீரகம்விராகனிடை க, வெந்தயம்விராகனிடை-உ, இவைகளைவறுத்துக் கஷாயம் வைத்துக்கொடுக்கத்திரும்.

மூக்குரட்டை சாரணை முடக்கொத்தான் முத்தெருக்கஞ்செவி ஓரிதழ்த்தாமரை இவைகளின்சாறுபடி-க, செப்புநெரிஞ்சிச்சாறு விளக்கெண்ணெய் வகைக்குப்படி-க, மயிலிறகு பலம் - க, இவைகளை ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக்கொடுக்கத் தீரும்.

## ஆமக்கழிச்சலின்குணம்.

பாலெதிரெடுக்கும் வயிறிரையும் இரத்தம் விழும் சுரங்காயும் குரல்கம்மும் கால் கை குளிர்ந்திருக்கும்.

## நிவர்த்தி.

சோற்றிலவித்துச் சுத்திசெய்த சாதிக்காய்-க, பூரம் விராகன்-க, இவைகளை ஒருபலச்சிற்றாமணக்கெண்ணெயில் அரைத்துக் கலக்கிக்கொண்டு வேளைக்கு ஒருகரண்டிவீதங்கொடுக்கத்தீரும்.

## சலக்கழிச்சலுக்கு.

வெண்குன்றிப்பருப்பு புளியவிரைத்தோல் அத்திப்பால் எருமைவெண்ணெய் வகைக்குக்கழஞ்சு-க, மைப்போலரைத்துக்கொடுக்கத்தீரும்.

## வெப்புக்கழிச்சலுக்கு.

அதிமதுரம் அதிவிடையம் சாதிக்காய் மாதுளம்பூ சீரகஞ் சமன்கூட்டிப் புளியாரைச்சாற்றிலரைத்துத் தூதுளங்காய்ப்போல் உண்டைசெய்து மாதுளம்பழச்சாற்றிற் கரைத்துக்கொடுக்கத்தீரும்.

# ஐந்தாங்காண்டம்

## முற்றிற்று.

## இனி ஆறும்பாகம்.